# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VII { ஆனந்த௵ தைமீ : 1915-௵ பிப்ரவரிமீ } பகுதி 8


## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 29. கருணையின் பெருமையும், பக்தர் சிறுமையும்

காகமா னதுகோடி கூடிநின் றாலுமொரு
கல்லின்முன் னெதிர்நிற்கு மோ
கர்மமா னதுகோடி முன்னேசெய் தாலுநின்
கருணைப் பிரவாக வருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ
தமியனேற் கருட்டாக மோ
சற்றுமிலை யென்பதுவும் வெளியாச்சு வினையெலா
சங்கேத மாய்க் கூடியே (ஞ்
தேசமா னதைமிகவும் வாட்டுதே துன்பங்கள்
சேராமல் யோக மார்க்க
சித்தியோ வரவில்லை சகசநிட் டைக்குமென்
சிந்தைக்கும் வெகுது ரநான்
ஏகமாய் நின்னோ டிருக்குநா ளெந்தநா
ளிந்நாளின் முற்று றுதோ
விகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே

(எங்குநிறைகின்றபொருள்—6)

### 30. ஸாதாரண நிலை

பாகத்தினுற் கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி யில்லை வேத
பாராய ணப்பனுவன் மூவர்செய் பனுவலது
பகரவோ விசையு மில்லை
யோகத்தி லேசிறிது முயலவென் றாற்றேக
மொவ்வாதி வூண் வெறுத்தா
லுயிர்வெறுத் திடலொக்கு மல்லாது கிரியைக
ளுபாயத்தி னுற்செய்ய வோ
மோகத்திலே சிறிது மொழியவிலை மெய்ஞ்ஞான
மோனத்தி னிற்க வென்றான்
முற்றாது பரிபாக சத்திக ளநேகநின்
மூதறிவி லேயெ முந்த
தாசத்தி லேவாய்க்கு மிர்தப்ர வாகமே
தன்னந் தனிப்பெ ருமையே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

(சச்சிதானந்தசிவம்—3)

### 31. வைராக்ய ஸ்வரூபம்

இனியேது மெமக்குனருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்ச மையோ
வின்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில் லையே
அனியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
மந்தகற் காளாக வோ
வாடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போதனன் றோ
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்க ளேனுங்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்து நான்
கண்மூடி மௌனி யாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாத தோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

(சச்சிதானந்தசிவம்—5)

# CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தஅ | இங் | தமிழ் | வார | ஆநந்தஹு மாசிமூ { சாலிசகம் 1836 கலியப்தம் 5015 } பசலி 1324 கொல்லம்-1090 { 1915ஹு பிப்ரவரிமூ மார்ச்சுமூ |
|---|---|---|---|---|---|
| ரபு | 26 | 12 | 1 | வெ | திர 14-18, உத் 31-52, வித் 3-21, விய 54-26, வணி 14-18, ரா 12-39, அக 29-6, கும்பரவி 14-53, அவி 3, வக் |
| [ரா | | | | | [புத 35-0, அ 3, ரா மக 1, சேது 16-46, கும்ப கிரு சதுர்த்தி விஷ்ணுபதி மகாசிவராத்ரி விய சி. குன்யார்கம் |
| புசு | 27 | 13 | 2 (கும்பம்) | சனி | சது 11-37, திரு 31-11, வரி 53-35, சகு 11-37, ரா 12-9, பச்சாதஸ்தபுத 55-7, பூரா 1, சுக் 40-31, சர்வ அமா சிர |
| | | | | | [உப திவாபரயுகாதி |
| | 28 | 14 | 3 | ஞா | ● அமா 10-7, அவி 31-38 பரி 51-6, கா 10-7, ரா 21-0, பிண்டபிய இஷ்டி மழை 3-க்குள் (60-0, சங்-தரி |
| ரசெ | 29 | 15 | 4 | திங் | பிர 9-50 சத 33-16, சிவ 47-35, பவ 9-50, ரா 20-55, பால்குண சுத் அ 4, ர 32-25, திரு 4, செ 20-0 சத 2, குரு |
| புசு | 1 | 16 | 5 | செ | துதி 10-50, பூர 36-13, சித் 46-8, கௌ 10-50,-தியா-0-0. அக 29-9, மகரவக்புத 1-0, பூரா 2 சுக் 49-20 • |
| கு | 2 (பிப்ருவரிமீ) | 17 | 6 | புத | திரு 13-9, உத் 40-17, சா 45-30. கர 13-9, திவி 2-35, பச்சாதஸ்தகுரு 43-7 சது விரு |
| ர | 3 | 18 | 7 | வியா | சது 16-35. ரே 45-36, சுப 45-45, பத் 16-35, திவி 12-56, சத 1, ரவி 49-57, பஞ்சமி திதி பணிமிகுதி |
| செசு | 4 | 19 | 8 | வெ | பஞ் 20-59, அசு 51-18, சுப் 46-33, பா 20-59, ரா 11-11, அவி 1, செ 36-0, பூரா 3 சுக் 57 40, அதிதி [திதி ச உ |
| பு | 5 | 20 | 9 | சனி | சஷ் 25-56, பர 57-40, பிரா 47-46, தை 25-56, திவி 17-51, அக 29-11, மீனு 44-7, அ 1, வக்புத 28-54, சஷ்டி |
| | 6 | 21 | 10 | ஞா | சப் 31-12, ✳ கார் 60-0 மா 49-6, வணி 31-12, ரா 1-43, சப் விரு கார் உப |
| ர | 7 | 22 | 11 | திங் | அஷ் 36-19, கார் 4-8, வை 50-15, பத் 3-45, ரா 19-19, சத 2, ரவி 7-56, வை சிரா |
| செசு | 8 | 23 | 12 | செ | நவ 40-52, ரோ 10-13, விஷ் 50-52, பா 8-35. திவி 25-38, அவி 2, செ 52-9. பூரா 4, சுக் 6-17 |
| | 9 | 24 | 13 | புத | தச 44-37, மிரு 15-34, பிரி 50-57, தை 12-44, ரா 8-49, அக 29.20, மழை 8-க்குள் |
| ரசு | 10 | 25 | 14 | வியா | ஏகா 47-17, திரு 20-3, ஆயு 50-2, வணி 15-57, ரா 22-22, சத 3, ரவி 26-20, சனிவக்ரநிவ 47-7, சர்வஏகா |
| புசு | 11 | 26 | 15 | வெ | துவா 48-41, புன 23-22, ஸௌ 48-13, பவ 17-59, ரா 14-22, திரு 4, வக்புத 50 0, உத் 1, சுக் 8-38, கரிநாள் |
| புகு | 12 | 27 | 16 | சனி | திர 48-48, பூச 25-27, சோ 45-23, கௌ 17-44, ரா 28-25, பிராகுதயபுத 55-7, சத 3, குரு |
| | | | | | [7-30, சனிப்பிரதோ கரிநாள் ரவி 44-43, கும்பசெ 9-30, கரிநாள் |
| ரசெ | 13 | 28 | 17 | ஞா | சது 47-35, ஆயி 26-17, அதி 41-35, கர 18-11, சே 1-54, ரா 26-38, அக 29-29 சத 4 |
| சு | 14 | 1 | 18 | திங் | ○ பௌ 45-13, மக 25-57, சுக 36-51, பத் 16-24, சே 0-7, ரா 16-0. மகரசுக் 8-38, மாசி |
| | | | | | [மகம் காமதகனம் பிர்ம்மஸாம |
| | 15 | 2 (மார்ச்சுமீ) | 19 | செ | பிர 41-50, பூர 24-34, திரு 31-19, பா 13-31, ரா 12-21, பால்குணபகு இஷ்டி வஸந்தாதி |
| ர | 16 | 3 | 20 | புத | துதி 37-33, உத் 22-16, சூல 25-3, தை 9-41, ரா 12-40, பூர 1, ரவி 59-23, மழை 5-க்கு |
| செபு | 17 | 4 | 21 | வியா | திரு 32-36, ஹஸ் 19-14, கண் 18-12, வணி 5-4, ரா 8-31, அக 29-32. அவி 4, செ 30-0 |
| சு] | | | | | [புதவக்நிவ 55-7, உத் 3, சுக் 8-38, கல்பாதி சங் சது |
| பு | 18 (1915ஹு) | 5 | 22 | வெ | சது 27-10, சித் 15-41, விர் 10-56, பா 27-10, திவி 28-46, அவி 1, ரிசுபத 24-20, சதுர்திதி |
| | 19 | 6 | 23 | சனி | பஞ் 21-26, சுவா 11-46, துரு 3-22, வியா 52-17, தை 21-26, திவி 24-49, திதித்வயம் |
| ரசு | 20 | 7 | 24 | ஞா | சஷ் 15-36, விசா 7-43. ஹா 47-55, வணி 15-36, திவி 17-3, புர 2, ரவி 23-9, உத் 4, சுக் 8-38, சப்தமிதிதி |
| செ | 21 | 8 | 25 | திங் | சப் 9-48, அனு 3-42, கே 56-17, வஜ் 40-22, பவ 9-48. திவி 16-50, அக 29-38, சத 1, செ 46-0 காளாஷ்டமி திஸ் |
| பு] | 22 | 9 | 26 | செ | அஷ் 4-13. நவ 54-49, மூல 56-29, வித் 33-7, கௌ 4-13, திவி 18-49, ரா 22-51, அவி 2. ப 20-0 (ரோஷ்டகா |
| ரசெ | 23 | 10 | 27 | புத | தச 54-33, பூரா 53-43, விய 26-18, வணி 26-47, திவி 19-23, பூர 3, ரவி 43 17, பிராகுதயசெ 47-7, திரு 1, சுக் |
| | 24 | 11 | 28 | வியா | ஏகா 50-56, உத் 51-48, வரி 20-3, பவ 22-44, திவி 13-25, சர்வஏகா மழை 9-க்குள் (8-38, விய சிரா |
| பு | 25 | 12 | 29 | வெ | துவா 43-23, திரு 50-51, பரி 14-32, கௌ 19-39, திவி 1-38, அக 29-45 கும்பபுத 49-0, சிர உப சிரவுணத்துவா |
| | | | | | [தெசி (சனிப்பிரதோஷம் |
| செசு | 26 | 13 | 30 | சனி | திர 46-42, அவி 51-0, சிவ 9-50, கர 17-32, திவி 0-52, சத 2, செ 4 0 திரு 2, சுக் 6-4, கும்ப கிரு திரயோதிதி |

| | | | |
|---|---|---|---|
| | | சனி | |
| ரா-கு<br>ரா-பு | 5-ம-வக்-பு<br>17-கு-செ<br>18-பக சு<br>29-கும்-பு | | |
| செ | | | கே |
| சுக் | | | |

# விவேக போதினி

தொ. 7] ஆனந்தஸு தைமீ: [பகுதி. 8


# மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO THE GOAL

### 3. பக்தியோகம் (தொடர்ச்சி)

**கண்ணப்பநாயனார் சரித்திரம்**

வைதிக பக்திபோக ஒழுங்கு இவ்வாறு உள்ளபடி ஹனுமாரிடம் அமைந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டியாகி விட்டது. இந்த ஒழுங்குகளுக்குச் சற்றுமாறாக உள்ளது போலக் காணப்படும் தென்னாட்டில் வழங்கி வரும் பக்தர்கள் சரித்திரங்களிலிருந்து கண்ணப்ப நாயனாரை உதாரணமாகக் காட்டி அவர் பக்தி ஒழுங்கு மூலமாக, பக்தியோகமாகி மோக்ஷ வழியில் பலிக்கவேண்டுமாகில் வைதிக ஒழுங்கு தவறலாகாது எவ்விதத்திலும் என்பதைஎடுத்துவிளக்குவோம். வேதக்கோட்பாடுகளான வர்ணாச்ரம ஸ்திரீ புருஷ தர்மம் இவைகளை ஸரிவர எல்லோரும் அனுஷ்டித்து ஈடேறுவதற்காக நமது பெரியோர்கள் கண்டு தெளிந்து வெளியிட்ட ஸ்மிருதிகள் இவைகளுக்கு எள்ளளவேனும் மாறாக இருக்கும் பக்தி வீண்மனக் கொதிப்பு மாத்திரமாகத் தான் முடியும் என்பதை நந்தனார் சரித்திரம் எப்படி வெளிப்படையாகக் காட்டுமோ அவ்வாறு இக்கண்ணப்பர் கதையும் பார்ப்போருக்கு ஒளியாது காட்டும் என்பதை விளக்கப் புகுவோம். நமது சாஸ்திர ரஹஸ்யம் உணராது, பக்தியைத் துதிக்கமாத்திரம் கருத்துக்கொண்டெழுந்த வாக்கியங்களில் காணப்படும் மற்றைய கர்ம ஞானத் தாழ்வைக்கண்டு குரங்குப் பிடியாக அவைகளைக் கைவிட்டு பக்தியைப் பிடிக்கப்போய், வீணாக பக்தியும் அகப்படாது தன்னையும் பிறரையும் கெடுத்துக் கொண்ட பாபத்திற்கு ஆளாகாமலிருக்க முயலுவதில் இக்கதை உபயோகப்படலாம்.

பக்தி யோகமாவதற்கு கர்மம், ஞானம் இவைகளோடு ஸம்பந்தமில்லாதிருக்க இடமில்லையாயினும், ராஜயோகம் பலிக்கக்கூடிய மேற்பிறப்பில் கொண்டுசேர்க்க எல்லா வருணத்தாருக்கும் ஸ்திரீ புருஷர்களுக்கும் உபயோகமாதலால், அது விரிந்த அல்லது சுருங்கிய கர்மஞானங்களுடன் ஸம்பந்தப்பட்டுக் காணப்படும். விரிந்த ஞான ஸம்பந்தத்துடனிருப்பது அடுத்த படியில்தான்: சுருங்கிய ஞான கர்மங்களோடு பொருந்தி ஸாதாரணமாகக் காணப்படும், அப்யாஸியின் வருணம் தாழத்தாழ. இது கொண்டு சில ஆத்திரக்காரர் பக்தி தனித்தே இருந்து மோக்ஷம் சேர்க்கும் என்பர். இதைத் தடுக்கவந்த சரித்திரங்களுள் நம் கண்ணப்பர் கதை ஒன்று. இவர் ஜாதியில் வேடராகப் பிறந்தவர். ஈசன் விஷய ஸம்பந்தம் ஏற்படும் வரையில் இவர் தமது கர்மா கடவுள் வழிபாடு இவைகளையெல்லாம் தம் குலத்திற்கேற்பச்செய்துவந்தவரே: ஒன்றையும் அனாதரவாய்விட்டவரல்லர். இவர் ஒழுங்கானதொழில்களெல்லாம் ஒருவகைப்பட்டுக் கடவுளிடமே தீவ்ரபக்தியுடன் பாய்வதற்கு ஒரு நிமித்தகாரணமாக ஏற்பட்ட பன்றி வேட்டையில் வெகுதூரம் தம் தோழரிருவருடன் சென்று களைத்து, பன்றியும் அகப்பட்டுவிட்டபடியால், அருகாமையிலுள்ள 'பொன்முகலி'

ஆற்றின் கரையிலுள்ள சோலையில் தங்கி இளைப்பாறி ஆகாரம் வாட்டியுண்டு போவதாகத் தீர்மானம் அவர்களுள் பிறந்தது. இப்படி எண்ணி ஆற்றை அணுகிப்போகையில் எதிரில் மலைச்சிகரத்தில் ஒரு கோயில் போலத் தென்பட அதனிடம் போவோம் என்று நாயனார் கூறியதும் கூடவந்த தோழன் நாணனிடமிருந்து ஒரு அருள் வாக்கு இத் திண்ணனார் விஷயமாகப் பிறந்தது.

நாணனே தோன்றுங் குன்றி
 னண்ணுவே மென்ன நாணன்
காண நீ போதி னல்ல
 காட்சியே காணுமித்தச்
சேணுயர் திருக்கா ளத்தி
 மலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவ
 ரிருப்பர்கும் பிடலா மென்றான்.

இது பசுமரத்தாணிபோல, தன் வேடர்குல தர்மத்தின்படியும் கடவுள் கட்டுப்பாட்டின்படியும் நடந்துவந்த திண்ணனார் செவிகளுள்ளும் மனதுள்ளும் ஊடுருவிச் சென்றது. வழிநடந்து களைத்ததருணத்தில் ஒரு ஆராமைஉண்டாயிற்று:—

ஆவதெ னிதனைக் கண்டிங்
 கணைதொறு மென்மேற் பாரம்
போவதொன் றுளது போலு
 மாசையும் பொங்கி மேன் மேன்
மேவிய நெஞ்சும் வேறோர்
 விருப்புற விரையா நிற்குந்
தேவாங் கிருப்ப தெங்கே
 போகென்றார் திண்ணனார்தாம்.

இவ்வாறு திண்ணனாருக்கு ஒருவாறு ஜாதி தர்மப்படி முன்னமே இருந்த ஒழுங்கு தவறா நடத்தை, ஈசனைப்பற்றிய ஒரு ஸ்தூலபாவம், எல்லாம் இத்தருணத்தில் ஒருவாறு முதிர, முடமாக அம்மலைமேல் தமது நாதன் உள்ளார் போய்க்காணவேண்டும் என்ற பரபரப்பு உண்டாகிவிட்டது. ஆற்றங்கரை சேர்வதும் பன்றியை ஓரிடத்தி லெறிவதும்; தீமூட்ட ஒருவனை ஏவுவதும் அரை நொடிவேலை போல முடிக்கப்பட, திண்ணனார் மற்றொரு தோழனோடு தன் மனம் கனிந்துருக நாதனைக் காணப்புறப்பட்டார் மலை உச்சியை நோக்கி. நடு மத்தியான ஸமயம். எல்லாம் நடு நிசியில் எப்படி ஒடுங்கி நிற்குமோ அப்படியே இருந்தது. 'நம் நாதனும் இவ்விடம் தனியாகவா இருக்கிறார்: இதுவரை இவரை அணுகி வாராது ஸாதாரணமாக இவர் கட்டளைப்படி மாத்திரம் நடந்து அனாதாவாயிருந்து விட்டோமே, இவரிடமே இருந்து இவர் கட்டளைப்படி நடப்பது எவ்வளவு சிறந்ததாக இருக்கும், இனி அப்படி இருக்கவே கூடாது,' என்ற எண்ணம் கதித்தெழுந்து மனதைக் கொள்ளை கொள்ள 'கருணையங்கடலைக் காணலாம் கிரி மேல்' என்ற ஆராமையுடன் நடப்ப துணராது நடந்து செல்வார் திண்ணனார் என்னப்பனை நோக்கி.

நாணனு மன்பு முன்பு
 நளிர்வரை யேறத் தாமும்
பேணுதத் துவங்களென்னும்
 பெருகு சோபான மேறி
ஆணையாஞ் சிவத்தைச் சார
 வணைபவர் போல வையர்
நீணிலை மலையை யேறி
 நேர்படச் செல்லும் போதில்
திங்கள்சேர் சடையார் தம்மைச்
 சென்றவர் காணு முன்னே

* * *

பொருவிலன் புருவ மானார், இத் திண்ணனார்.

இவருக்கு அங்கு விக்ரஹபாவனை தோற்றவே இல்லை: தம்மை இதுவரை ஸரிவர நடத்தி இந்த அன்பு நிலைகொண்டு சேர்த்த தோன்றாத்துணையான கருணைக்கடலான காப்போனைத்தான் அவருக்குப்பட்டது. இவ்

விடத்தில் ஈசனுக்கும் அவருக்கும் ஒருவித ஸம்பந்தம் ஏற்பட்டது: மற்றைய அங்கங்கள் முன்னரே ஒருவாறு அமைந்திருப்பினும் அவைகளெல்லாம் இதனல் திடப்பட்டு விட்டன. சற்று பரவசராக இருந்தார். (பெரிய புராணச் செய்யுள்கள் 105 முதல் 108 முடியப் பார்க்க) இது முடிந்ததும், பக்தி வெளிப்படத் தொடங்கியது. இதுவரை ஈசன் கட்டளைப் படி நடந்துவந்த திண்ணனுருக்கு, ஈசனைக் கண்டு எதிர் நிற்குங்கால் செய்வது இன்னது என்று புலப்படவில்லை வழக்கமில்லாததால். அருகி லிருந்த நாணன் தான் கண்டறிந்த பூஜையை:—

வன்றிற லுந்தையோடு
மாவேட்டை யாடிப் பண்டிக்
குன்றிடை வந்தோ மாகக்
குளிர்ந்த நீ ரிவரை யாட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி
யூட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தானின்று
மவன்செய்த தாகு மென்றான்.

இதுவும் கண்ணப்பருக்கு ஒரு உபதேசமாயது ஈச்வராராதன வழியில்.

உண்ணிறைந் தெழுந்த தேனு
மொழிவின்றி யூறா வன்பிற்
றிண்ணனர் திருக்கா ளத்தி
நாயனர்க் கினிய செய்கை
எண்ணிய இவைகொ லாமென்
றிதனைப் பிடித்துக் கொண்டவ்
வண்ணலைப் பிரிய மாட்டா
தளவிலா தரவு நீட.

கொஞ்சநாழிகை வரையில் ஈசனுடனேயே இணைபிரியாதிருந்துவிடவேண்டும் என்ற ஆராமையும் அவரை அவர் கட்டளைப்படிப் பிரியப் படுத்தவேண்டும் என்ற ஆராமையும் திண்ணனர் மனதைப்பற்றி இழுக்கத் தத்தளித்தார் திண்ணனர் (111, 112, 113, பெரியபுராணச் செய்யுள்களைப் பார்க்க). இங்கு திண்ணனர் ஆண்டவனை விட்டுப் பிரிந்துபோய் வழிபாடுகளுக்குத் தயார் செய்வதே, பக்திதனித்திருக்க இடமில்லை, ஈசன் நேரான வழிபாடும் அது போன்ற அவன் கட்டளைப்படி நடப்பதாகிய வழிபாட்டின் ஞுபாந்தரமும் கூடித்தானிருக்கமுடியும் என்பதைக் காட்டும். திண்ணனர் வேடர்ஜாதியாதலால் ஈசன் வழிபாட்டிற்காகச் செய்யவேண்டிய தொழில்களைவிட வேறு முன்பின் அந்த ஈசனையே வழிபடுவதாகிய கர்மானுஷ்டான ஒழுங்கு அவருக்கு அதிகமில்லை. ஆதலால்தான் திண்ணனரது கடவுள் வழிபாடு ஈச்வரபூஜை தன்னை மறந்து அவர் திரு உருவத்திடம் காத்துக் கிடத்தலுமேயாக இருந்தது. இந்த பக்திக்கு திண்ணனர் பிறவி விசேஷத்தால் ஆதாரம் அதிகம் வேண்டியதில்லையாயினும், ஆதாரமில்லாது இது யோகமே ஆகாது என்பதைக் காட்டவே இந்த சரித்திரத்தில் சிவகேசரியார் என்ற அக்கோயில் அர்ச்சகர் ஒருவர் அமைந்துள்ளார். அவர் வழிபாட்டை நாணன் வாக்கில் சேக்கிழார் கூறியதை முன்னர் காட்டியாகிவிட்டது. இந்த விஷயத்தை மேலும் சேக்கிழார் 130 முதல் 140-ம் செய்யுள்முடிய விவரிக்கிறார். ஆகவே குலத்திற்கேற்ற கர்மங்களை முன்னிட்டே பக்தி இருத்தல்வேண்டும்: அதற்கு மாறாக பக்தி குறுக்கிட நியாயமே இல்லை என்பது வெளிப்படை.

திண்ணனரே தம் குலத்திற்கு ஏற்ப, சிவகேசரியார் செய்த ஈசன் விரும்பும் தொழில்களை ஏற்றுச் செய்து, அன்று முதல் ஒருவழி நின்று, தன்னப்பன் ஈசன் என்ற அன்பு மேலீட்டால் வழிபட்டு எதிரே காவலிருக்கத் தொடங்கிவிட்டார். சேக்கிழார் மனமுருகிக் கூறுவார் இப்பூஜை வைபவத்தை 110-ம் செய்யுள்முதல் 128-ம் செய்யுள்வரை. இந்த அவஸரத்தில் தம்

தோழர் தமது நிலையைத் தம் தாய்தந்தையரி டம் சொல்லப்போனதுகூட அவருக்குத்தெரி யாது. இவ்வாறு வழிபட்டுவர எல்லா விஷய ங்களும் இவர் மனதைவிட்டகன்றது, ஈசன், வழிபாடு, வழிபடும் தான் மூன்றுமாத்திரமே நின்று, தன் எண்ணம் மங்கிக்கொண்டும் வந் தது. பக்தி முதிர்ந்து வந்தது வழிபாட் டொழுங்கால், இவர் பக்திப் பெருமையைப் பரமசிவமே எடுத்துப்பாராட்டி சிவகேசரி யார் மனக்குழப்பத்தை நீக்கினர் (158-163 முடிபவும், 147, 148 செய்யுட்களையும் பார்க்க). இந்த பக்திபரவசத்தில் திண்ணனாருக்குத் தம் தாய் தந்தையர்கள் வந்துபோனதுகூடத் தெரி யாது, தம் தேஹ உணர்வும் கெட்டது.

இவ்வாறு பக்தி முதிர்ந்து வருகையில் இத ன் முடிவு எதுவரையில் போகும் என்பதை தன் பக்தரான சிவகேசரியாருக்குக் காட்ட பகவான் ஆறும்நாளில் தமது கண்களில் ஒன்றி லிருந்து ரக்தத்தைப் பெருகவிட்டார். திண்ண னார் தம்மை அணுகிப் பூஜிக்க வரும்பொழுது இந்நிலையைக் கண்டதும் வழிபாடு நழுவிவிட்ட து கண்ணப்பரைவிட்டு ஈசபாவனையும் அவரை உள்ளபடி யாக்கவேண்டும் என்பதற்கு வேண் டிய அன்பாகாரமும்தான் மிஞ்சியது. இந்த அன்பு முதலில் ஆணவமாகச் சற்றுத்தடிக்க அதன் வழிபட்டு வன மூலிகைகளைத் தேடிச் சென்றுவந்து பிழிந்து முயன்று பார்த்தார் அ வர். இப்படிப்பலவாறு அன்பால் திண்டாடுகை யில் 'ஊனுக்கு ஊன் தாங்கல்' என்றபழமொழி சில வ்யாதிகளைத்திர்க்கும்வகையில் இருந்தது இவருக்கு ஞாபகம் வந்தது. உடனே தேஹா பிமானம் தமக்கு நீங்கியே இருந்ததனால் தம் கண்களுள் ஒன்றை வெகுலகுவாக அம்பால் பிடுங்கி உதிரம் பாய்ந்துகொண்டிருந்த கண் ணின்மேல் அப்பிவிட்டார். உதிரம் நின்று, கடவுள் கண் முன்போலானதைக் கண்டு ஆனந் தித்துக் கூத்தாடினர். இந்நிலை ஈசன் மாத் திரமாக மனம் பாய்ந்துகொண்டிருந்த போதி லும் இவர் மனம் சற்று காரியம் பலித்ததால் பூர்வவாஸனையின் முடிவான சேஷத்தின் வலி யால் தன்னைப்பற்றியும் சற்றுபாய்ந்தது. இது தான் பக்தியோகத்தில் முடிவிலுள்ள அபாய நிலை. இதன் வசமாகி பக்தன் பூர்வாப்யாஸ பல மில்லாது நின்றுவிட இடங்கொடுத்து விடுவா னுயின் அதோகதியையே அடைந்து பழைய இழிவுக்கு வந்துவிடுவன். தகுந்த கர்மஞானங் களால்நிலையாத வீண் மனக்கொதிப்பான பக்தி இந்நிலைக்குக்கூடவாராது, தவறி அப்யாஸபலத் தால் வந்தால் நழுவிவிடும். திண்ணனர் பக்தி அப்படி எல்லாம் இக்காலத்தில்கூறப்படும் மூழு மூட நாமஸங்கீர்த்தன பக்தியல்லவே. ஆதலால் இந்த நிலைவந்து அது திடப்படக் கூடியதானல் நிஜமான பக்தியோகம் இந்த நிலையோடு மாத் திரம் முடிந்துவிடுவதல்ல. இதன் முடிவில் அடுத்தபடியின் தன்மை சற்று வெளியாகும், தன்னை மறந்து வழிபடும் வஸ்துவாகமாத்தி ரம் தனித்திருப்பதால். இந்த முடிவு வருங்கால் தான் ஈச்வரன் ஸாக்ஷாத்காரம், ப்ரத்யக்ஷம் முதலிய அற்புத நிலைகள் ஏற்படும். இந்த நிலை யும் திண்ணனாருக்கு ஏற்பட்டு அவரது ஏகாக் ரம் முதிர்ந்து த்யேய வஸ்து மாத்திரமாக நிற் கக்கூடிய திறனை வெளிப்படுத்த பகவான் தமது இரண்டாவது கண்ணிலிருந்து ரக்தத் தைப் பெருக்கினர். திண்ணனர் மனம் வருந் தாது தமது இரண்டாவது கண்ணைப் பிடுங்கு வது என்று தீர்மானித்து, பின்னர் அதைப் பகவான் இரண்டாம் கண்ணில் ஸரியாக அப்ப உதவியாக இருக்கத் தமது இடது செருப் புக்காலை பரம்பொருள் கண்ணண்டை வை த்து அழுத்திக்கொண்டு தம் இரண்டாவது கண்ணைக் கீண்டுவிடத் தொடங்கினர். இச்சம யத்தில் திண்ணனர் மனம் தன்னைநோக்கியும்

பாய்ந்தோடவில்லை, வெகுலெகுவாகக் காரியம் பார்க்கத் தொடங்கி பூர்ணநம்பிக்கையுடனிருந்ததால், சுற்றுமுள்ள பிரபஞ்சங்கள் எல்லாம் அவர்மனதைவிட்டு முன்னரே ஒதுங்கியிருப்பினும் இத்தருணத்தில் அற அகன்றன. தம்வழிபாடும் கழன்றது, ஈசன் மாத்திரமாக திரிபுடியற்ற ஏகரூபமாக அமர்ந்து சுற்று சிவாகாரமாயது. இதுதான் பக்தியோக முடிவு: பகவான் ப்ரத்யக்ஷமானார்: அவர் கையைப்பிடித்து 'நில் கண்ணப்பா! நில் என் கண்ணப்பா!! நில் கண்ணப்பா!!!' என மும்முறை கூறிய மொழியொன்று கிளம்ப சிவகேசரியார் பரவசமானார். வானவர் பூமழை பொழிந்தனர். அப்படியே பகவான் தம் வலப்புறம் அவரை இருத்திக்கொண்டார். அவ்வாறே இன்றும் ஸ்ரீகாளஹஸ்தியில் அந்த கண்ணப்பர், கோயிலுள் அமர்ந்துள்ளார்: கிரிமேலும் அவருக்கு ஒரு கோயிலுண்டு. குன்றின்மேலிட்ட விளக்குப்போல அது முதல்தோன்றிப் பின்னர்தான் பகவான்கோயில் தோன்றும் காளஹஸ்தியை அணுகுவோருக்கு.

பக்தியோகம் இவ்வாறு தன் முடிவைப் பெறின் அடுத்தபடியாகிற ராஜயோகமாகிய ஏகாக்ர முடிவும் அதன் மேல்படி அப்யாஸத்திற்கும் கொண்டுசேர்க்கும் தன்மையுடையது என்பதை இக்கண்ணப்பர் கதைமுடிவே காட்டும். அவருக்கு பகவான் ஸாமீப்ய முக்தி கிடைத்தது: அதாவது வைதிகதர்மப்படி மேலான ப்ரஹ்மலோகத்தில் சிறந்த வேதாந்த விசாரம் செய்து முக்திபெறக்கூடிய பிரஹ்மதேவர் நெருங்கின சிஷ்யர் நிலையான உத்தம பிராஹ்மணநிலை கிடைத்ததென்பதாகும். இது மீளாநெறிதான்: ஆனால் அதன் முடிவு இக்கல்பாந்தத்தில் ஆசாரியனான பிரஹ்மாவுடன் தான். முன்னர் கூறிய ஹனுமார் சரிதத்திலும் இந்த பக்தியோக முடிவை இப்படியே கண்டோம்.

ஆகவே பக்தியோகமே நேரிட முக்திகொண்டு சேர்க்காது. ஆனால் உள்ளபடி அதில் முனைந்துவிட்டால் மீளா நெறியில் நடப்பதுதான் மறுபடியும் ஸம்ஸாராதி துக்கம் தாக்கும் நிலை வாராது என்பதாயிற்று. வேத ரஹஸ்யம் இப்படி இருக்க வெறும் நாம ஸங்கீர்த்தனமே முக்தி தந்துவிடும்என்று வெறும் சோம்பேரிகளாகக் காலங்கழித்து அநேகர் அதோகதியை அடைய முயல்கின்றனர். கர்மயோகம் பக்தியோகம் இரண்டின் உதவியின்றி நாமஸங்கீர்த்தனம் பயனே படாது. இதற்கு மாறாகப் புராணங்களிலிருந்து சில பக்தசரித்திரங்களை எடுத்துக் காட்டுவர் இக்காலத்தவர். அவைகளுள் சில பக்தர்கள் அடைந்த முடிவு இன்னவை என்பதை வெளிப்படையாகக் காட்டாதவையாயும், சில அவதார விசேஷ சரித்திரங்களாயும், சில மாற்றிக் காட்டப்படுபவைகளாயும் இருக்கும். பொதுவாக பக்தியால் பகவந்நாமத்தை ஒருதரம் உச்சரித்தால் போதும் பரமபதம் வந்துவிடும் என்பதைக் காட்ட ஸ்ரீமத் பாகவதம் ஆறும்ஸ்கந்தம் அஜாமிளன் உபாக்யானத்தைக் காட்டுவது வழக்கம். அதை நன்றாக வாசித்துப்பார்த்தால் இந்தச் சோம்பேரி ஸித்தாந்தத்திற்கு இடமே இல்லை என்பது விளங்கும். ஒருதரம் அவஸரமாக அஜாமிளன் உச்சரித்த நாராயணநாமத்தின் சிறப்பு அவன் மனதை பச்சாத்தாபப்படும்படி செய்ய அதை ஆதாரமாகக்கொண்டு அவன் தன் இழியோர் இணக்கம்விட்டு வெகுகாலம் ஹரித்வார க்ஷேத்ரத்தில் பக்தி அப்யாஸம் ஸரிவரச் செய்து நற்கதி அடைந்தானே ஒழிய, வெறும் நாம ஸங்கீர்த்தனத்தால் மாத்திரமல்ல. சில ஸ்தல புராணங்களில் இந்த யோகவிஷய விரோத கதைகளும் காணப்படும். அவைகளையெல்லாம் ஸ்தல விசேஷத்தை ஏற்றமாகக் கூறவந்த அர்த்தவாதங்கள் துதிகதைகளே ஒழிய ஸித்தாந்தம் வெளிப்படுத்தவந்தவைகளல்ல என்று உணரல்வேண்டும். ஆதலால் கர்மயோக ஸம்பந்தமின்றி பக்தி யோகமே யாகாது. இப்படி உள்ளபடி யோகமாகும் பக்தி அதன் முடிவான த்யானமூர்த்தமாக மாத்திரம் நிற்பதான முடிபிலிருந்து மேல் எப்படி ராஜயோகமாகும் என்பதை பின்னர் எடுத்து விவரிப்போம்.

---

நம் சந்தா நேயர்களுக்கு

சந்தாதாரர்கள் தங்களுக்கு அந்தந்தமாதப்பத்திரிகை ஒழுங்காகக் கிடைக்காவிட்டால் உடனே நம் ஆபீஸுக்கு [illegible] தகவலை தங்கள் ரிஜிஸ்டர் நம்பரைக் கண்டு தெரிவித்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தாலன்றி அவர்கள் கடிதத்தை உடனுக்குடன் கவனிப்பது ஸாத்தியமாகாது. தவிர, சந்தாநேயர்கள் தங்கள் கடிதங்களுக்கு ஜவாப் தேவையிருந்தால்ரிப்ளை கார்டாவது அல்லது அரையணா ஸ்டாம்பாவது அனுப்பவேண்டியது மிகவும் அவசியம்.

மானேஜர்.

# கலீலியோ—வான சாஸ்திரி

## GALILEO—The Astronomer

கலீலியோ என்பவர் வின்ஸென்ஸோ கலீலிலை (Vincenzo Galilei) என்பவருடைய புதல்வராய், இடாலி நாட்டிலுள்ள பைஸா (Pisa) பட்டணத்தில் 1564-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 18-உ அவதரித்தார். இவருடைய தந்தையார் உயர்ந்த வம்சத்தினராயினும் தனவந்தரல்லர்; ஆனால் விஷயங்களின் உண்மையை அறிய வேண்டுமென்னும் அவா மிகுதியாக உடையவர். மகனுக்கும் அதேமாதிரி ஆசை இளமைமுதல் இருந்தது.

முதன் முதல், இவரை அவ்வூர் பள்ளிக்குத் தந்தையார் அனுப்பினார். இவர் கொஞ்சம் படித்தபிறகு கம்பள வியாபாரம் செய்யவேண்டுமென்பது தந்தையாருடைய எண்ணம். இவர் அப்பள்ளிக்கூடத்தில் டாண்டி (Dante) டாஸோ (Tasso) அரியாஸ்டோ (Ariosto) முதலிய சிறந்த கவிவாணர்களது நூல்களை மாசறக் கற்றறிந்தார்; வீணை வாசிப்பதிலும் சித்திரம் எழுதுவதிலும் பழக்க மேற்படுத்திக் கொண்டார். இவரது கல்வியை யறிந்த தந்தையார் இவருக்குக் கம்பள வியாபாரம் உதவாதென்றும் கலாசாலைப்படிப்பு வேண்டுமென்றும் தீர்மானித்து பைஸா ஸர்வ கலாசாலைக்கு வைத்திய சாஸ்திரம் படிக்கும்படி இவரை யனுப்பினார். கணித சாஸ்திரிகளுக்கும் தத்துவ சாஸ்திரிகளுக்கும் அக்காலத்தில் நல்ல வருமானம் கிடையாததலால், வைத்திய சாஸ்திரம் படிக்க வேண்டுமென்பது தந்தையாருடைய நோக்கம்.

அக்காலத்தில் இவர் ஒரு நாள் அவ்வூர்க் கோயிலில் ஜபம் செய்து கொண்டிருந்தபோது ஒரு பெரிய விளக்கு ஆடிக்கொண்டிருந்தது. அது ஆடும் காலத்தை இவர் தன் நாடி அடிப்பதனால் கணக்கிட்டார். அதிலிருந்து அம்மாதிரியாக ஆடிக்கொண்டிருக்கும் ஒரு வஸ்து, ஒரு பக்கத்தினின்று மற்றோர் பக்கம் செல்வதற்கு, எப்பொழுதும், எவ்வளவு தூரமிருந்தபோதிலும் ஒரே காலந்தான் செல்லுகிறதென்று தீர்மானித்தார். இதை யறிந்ததனால்தான், பிறகு கடியாரங்களென்னும் காலத்தை யளக்கும் கருவிகள் செய்கிறார்கள்.

இஃது இங்ஙனமிருக்க, ரிஸ்ஸி (Ricci) என்னும் ஒரு கணிதசாஸ்திரி பைஸா நகரத்துக்குவந்தார். அவரிடம் நம் கலீலியோ கணிதம் கற்க ஆரம்பித்தனர். பிறகு தனது இருபத்தாறுவது வயதிற்குள் அக்காலத்தவர் அறிந்திருந்த கணிதம், தத்துவம், இயற்கை சாஸ்திரம், யாவற்றையும் தெரிந்து கொண்டார். அதே வயதில், ஒருநாளுக்கு $7\frac{1}{2}$-அணா சம்பளமுள்ள பைஸா ஸர்வகலாசாலை கணித போதகராக நியமிக்கப்பட்டார்.

எல்லா வஸ்துக்களுக்கும், கனமாயிருந்தபோதிலும், இலேசாயிருந்தபோதிலும் ஒரே உயரத்தினின்று பூமிக்கு விழுவதற்கு ஒரே காலம் பிடிக்கிறதென்பதை இவர் இப்போது கண்டுபிடித்தார். ஆனால் இது அக்காலத்தில் அனுஸரித்து வந்த கொள்கைகளுக்கு மாறானது. இவர் நிலைமையை நன்கறிய அக்காலத்தின் கல்வியின் நிலைமையை யறியவேண்டும். அரிஸ்டாடில் (Aristotle) என்னும் கிரேக்க தத்துவ சாஸ்திரியார் சிலவற்றைப்பற்றி எழுதியிருக்கிறார்; அவர் எழுதியவை யாவும் உண்மையென்றும், எழுதிவைத்தவைதவிர வேறொன்றும் உண்மையல்லவென்றும் அக்காலத்தவர் கருதியிருந்தனர். அரிஸ்டாடில் என்பவர் ஒரே உயரத்தினின்று பூமியில் விழுவதற்கு கனமான பதார்த்தங்களுக்கு இலேசானவைகளைக் காட்டிலும் குறைந்த காலம் செல்லுகிறதென்று எழுதிவைத்திருக்கிறார். அவர் ஏன் அம்மாதிரி எழுதிவைத்தாரென்பது ஒருவருக்கும் தெரியாதபோதிலும் இவர் சொல்வதை ஒருவரும் நம்பவில்லை. ஒருநாள் காலை அப்பட்டணத்து சாய்ந்துள்ள கோபுரத்தின்(Leaning Tower)மேல் சென்று அங்கிருந்து நூறுபவுன் எடை ஒன்றையும், ஒரு பவுன் எடை ஒன்றையும் ஒரே ஸமயத்தில் கீழே நேராக எறிந்தார். அவை இரண்டும் ஏககாலத்தில் நிலத்தின்மேல் யாவர் முன்னிலையிலும் விழுந்தன. அங்கிருந்தவர்கள் இதை நேரில் பார்த்தபோதிலும், நம்பாமல் கலீலியோவை வெறுக்க ஆரம்பித்தனர். ஆதலால் 1592-ம் வருஷம் இவர் வெனிஸ் (Venice) நாட்டைச் சார்ந்த பாதுவா (Padua) ஸர்வகலாசாலையில் ஒரு வேலையை ஒத்துக்கொண்டு அங்கு சென்றார்.

இதேகாலத்தில் மிடில்ஸ்பரோ (Middles-

burgh) பட்டணத்தில் கண்ணாடிக்கடையில் வேலை கற்றுக்கொள்ளும் ஒருவனால் விநோதமான கருவி ஒன்று செய்யப்பட்டது; மூக்குக் கண்ணாடிக்கு உபயோகப்படும் இரண்டு வட்டமான கண்ணாடிகளை ஒரு விதமாக சேர்த்ததனால் செய்யப்பட்ட அந்தக்கருவியானது தூரத்திலிருக்கும் வஸ்துவை அருகாமையிலும் தலைகீழாகவும் காட்டும் சக்தியுடையதாயிருந்தது. இந்த சங்கதி கலீலியோவிற்கு எங்ஙனமோ தெரிந்தது. இப்படிப்பட்ட விஷயங்கள் கலீலியோ போன்றவர்களுக்குத் தெரிந்தால் அதை அம்மட்டில் விட்டுவிடுவார்களா? அதைப்பற்றி இவர் உடனே தீவிரமாய் யோசனை செய்து, ஒரு குழாயை எடுத்து ஒரு முனையில் நடுவில் பள்ளமாயுள்ள ஒரு வட்டக் கண்ணாடியையும், மற்றொரு முனையில் நடுவில் மேடாயுள்ள ஒரு வட்டக்கண்ணாடியையும் புதைத்து, அதன் வழியாய் தூரத்திலுள்ள வஸ்துக்களைப் பார்க்க அவைகள் அருகாமையிலும் தலைகீழாக மாறாமலும் காணப்பட்டன. உடனே இவர் அந்த விநோத கருவியை எடுத்துக்கொண்டு வெனிஸ் பட்டணத்திற்குச்சென்று அந்நகரஜனங்களுக்கு அந்தக் குழாயின் வழியாக வஸ்துக்களைக் காட்ட ஆரம்பித்தனர். இந்தக் கருவியின் உபயோகத்தைக் கண்ட அவர், தங்களுக்கொன்று வேண்டுமென்று கேட்க அவ்வாறே செய்து தந்தனர். இவருக்குச் சம்பளமும் இருமடங்காக உயர்த்தப்பட்டது. தானே வேலை செய்து பெரிய நச்சுக்குழாய் (Telescope) ஒன்றைச் செய்து முடித்து ஆகாயத்திலுள்ள கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் பார்க்க ஆரம்பித்தனர். அவர் அதன் வழியாக ஆகாயத்தில் கண்ட அற்புதங்களை என்னவென்று கூறலாம்! சந்திரனை நன்றாகப் பார்த்ததில் பூமிமாதிரியே மேடு,பள்ளம்,மலை, குன்று, கடல், நிலம் முதலியவைகள் அதிலிருப்பதைக் கண்டனர். இதுமாத்திர மல்லாமல் பூமியும் மேகத்தால் மூடப்பட்டபோது சந்திரனைப் போலவே கொஞ்சம் பிரகாசமுடைய கிரகம் என்று அறிவித்தார்.

1610-ம் வருஷம் ஜனவரி மாதம் 7௳ பிரகஸ்பதிக் கிரகத்தை நச்சுக்குழல் வழியாக பார்த்துக்கொண்டிருக்கும்போது அதன் பக்கத்தில் மூன்று சிறிய நக்ஷத்திரங்கள் இருப்பதைக் கண்டனர். அடுத்த நாள் பிரகஸ்பதிக் கிரகம் அம்மூன்று நக்ஷத்திரங்களுக்கு அடுத்தபக்கத்திலிருந்தது. 10௳ இரண்டு நக்ஷத்திரங்களிருந்தன. 11௳யும் இரண்டு இருந்தபோதிலும் ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் பெரிதாக இருந்தது. 12௳ மூன்றும் காணப்பட்டன. 13௳ நான்கு நக்ஷத்திரங்களிருந்தன. பிறகு நான்கிற்குமேல் காணப்படவில்லை. உடனே, நமது பூமியைச் சுற்றி சந்திரன் செல்லுகிறதைப்போல், பிரகஸ்பதி கிரகத்தைச் சுற்றி நான்கு உபக்கிரகங்கள் செல்லுகிற தென்பதை வெளியிட்டார். இந்த விஷயம் நாடெங்கும் அதிசீக்கிரத்தில் பரவலாயிற்று. ஆனால் அநேகர் நம்பாமல் மறுத்தார்கள். சிலர் இதைத் தடுப்பதற்கு தங்களால் முடிந்த இடையூறுகளையெல்லாம் செய்தபோதிலும் கடைசியாக ஒத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. (1892-ம் வருஷந்தான் 5-வது உபக்கிரகமும் ஒன்று இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.)

இனிமேல் கலீலியோவின் வாழ்நாட்களின் நிலைமையை நன்கறிவதற்கு, அக்காலத்தின் நிலைமையை சற்றே அறிவது இன்றியமையாததாயிருக்கிறது. அக்காலத்திலிருந்த கிறிஸ்தவ மதக்கொள்கைகள் சாஸ்திர அபிவிருத்திக்கு இடைஞ்சலாயிருந்தன. ஸத்திய வேதத்தில் கூறியிருக்கிற விஷயங்களுக்கு மாறானவைகளும், அவர்கள் அனுஸரித்து வந்த எண்ணங்களுக்கு விரோதமானவைகளும், பெரும் பாவம் என்று கிறிஸ்தவமதத் தலைவர்களால் கருதப்பட்டுவந்தன. மேலும் அக்காலத்தில் கிறிஸ்தவ மதத் தலைவராகிய போப் (Pope) என்பவருக்கு ஸர்வாதிகாரம் உண்டு. எவனாவது புதியகொள்கையை ஸ்தாபிப்பானாகில் சிறைச்சாலையில் அடைத்துவிடுவார்; சிற்சிலசமயங்களில் அவனுக்கு மரண தண்டனை விதிப்பதும் உண்டு. போப் என்பவரும் அவரைச் சேர்ந்த மதாபிமானிகளும் பூமியே அண்டங்களுக்கெல்லாம் முக்கியமானதென்றும், சூரியனே பூமியைச் சுற்றிவருகிறதென்றும் நம்பியிருந்தார்கள். கோபர்னிகஸ் (Copernicus) போன்ற நிபுணர்கள், சூரியனையே பூமிமுதலிய மற்றகிரகங்கள் சுற்றிவருகின்றனவென்று கூறியிருந்தபோதிலும், அதை நம்பப்படாதென்றும், அதை நம்புகிறவர்க

ளுக்குத் தகுந்த தண்டனை விதிக்கப்படுமென்றும் போப் என்பவர் கட்டளையிட்டிருந்தார்.

இது நிற்க, கலிலியோ, சனிக்கிரகம் மூன்றுபாகமாக இருக்கிறதென்றும், வெள்ளிக் கிரகத்திற்குச் சந்திரனைப்போல வளர்பிறை, தேய்பிறை உண்டென்றும் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியால் கண்டுபிடித்து உலகத்தவர்க்கு அறிவித்தார்; சூரியனில் கருப்புப் புள்ளிகளிருக்கிற தென்பதையும் கண்டுபிடித்தார். இவைகளெல்லாம் கிறிஸ்தவ மதாசாரியர்களுக்கு நம் கலிலியோவின் பேரிலிருந்த விரோதத்தை அதிகப்படுத்தியது.

இவர், பாதுவாவில் தமக்கு வேலை அதிகமாயிருக்கிறதென்றும், தமக்கு ஓய்வுகாலம் கிடைக்குமானால் தாம் சாஸ்திர ஆராய்ச்சியை அதிகமாகச் செய்ய முடியுமென்றும், தம் நண்பரான டஸ்கனி (Tuscany) பிரபு காஸ்மோ (Casmo) என்பவருக்கு எழுதிக்கொள்ள அவர் இவரை உடனே பாதுவாவைவிட்டு ப்ளாரென்ஸ் (Florence) க்கு வரவழைத்துக் கொண்டார். இந்தச் செய்கைதான் இவருக்கு பின்னிட்டு விளைந்த ஆபத்துக்களுக்கெல்லாம் காரணமாயிருக்கிறது. ஏனெனில் வெனிஸ் நாடானது சுயேச்சையானகுடியரசாயும் டஸ்கனி போப்பிற்கடங்கிய ஒரு ராஜ்யமாயுமிருந்தது.

இவர் அக்காலத்துக் கொள்கைகளுக்கு மாறான அநேக விஷயங்களைக் கண்டுபிடித்ததும் கோபர்னிகஸ் எடுத்துக்காட்டியதை இவர் அனுசரிப்பதும், போப்பிற்குப் பிடிக்கவில்லை. இவர் மதத்துவேஷி என்று கருதப்பட்டார். மதாசாரியர்கள்இவருக்குச்சரியான தண்டனை விதித்து இவர் கண்டுபிடித்தவைகளை யெல்லாம் அடக்கிவிடவேண்டுமென்று நிச்சயித்தார்கள். 1615-ம் வருஷம் இவரை தன் சமுகத்திற்கு வரும்படி போப் உத்தரவு அனுப்பினர். இவரும் அங்ஙனமே சென்று ரோமாபுரியிலுள்ள கனவான்களுக்கும் மதாசாரியர்களுக்கும் தம்முடைய நச்சுக்குழலைக் காட்டித் தாம் அறிந்த விஷயங்களைப்பற்றி உபன்யஸித்தார். போப்பும் அவருடைய மந்திரிகளும், கலிலியோவை பூமிசுற்றுகிறதென்பதை நம்பக்கூடாதென்றும் அதை ஒருவருக்கும் போதிக்கக்கூடாதென்றும் உத்தரவளித்து ஊருக்கு அனுப்பிவிட்டார்கள். இவர் கொஞ்சகாலம் தமது இரண்டு புத்திரிகளுடன் சுகமாக வாழ்ந்து வந்தார்.

1623-ம் வருஷம் இவருடைய ஸ்நேகிதரான பார்பேரினோ (Barberino) என்பவர் போப்பாக நியமிக்கப்பட்டார். உடனே கலிலியோ ரோமாபுரிக்குச் சென்று தமது சிநேகிதருக்கு உயர்ந்த பதவி கிடைத்ததைப்பற்றி அவரை வாழ்த்தி உபசரித்தார். இருவரும் சிநேகிதராகவே பிரிந்தார்கள். இவர் ப்ளாரென்ஸை யடைந்ததும், "டாலமி, கோபர்னிகஸ் இவர்கள் கொள்கைகளுக்குத்தர்க்கம்" (Dialogues on the Ptolemaic and Copernican systems) என்று ஒரு புஸ்தகத்தை வெளியிட்டார். இதில் டாலமி கக்ஷிக்காரன் சொல்லும் வார்த்தைகளை யெல்லாம் கோபர்னிகஸ் கொள்கைக்காரன் மறுதளிப்பது மல்லாமல், அவனையும் மூடனாக்குகிறான். கலிலியோவின் சில விரோதிகள் போப்பினிடம் சென்று அப்புத்தகத்தில் மூடனாக்கப்படும் டாலமி கக்ஷிக்காரனைப்பற்றி எழுதினதெல்லாம் போப்பைக் குறித்தே கலிலியோ எழுதினதாகக் கூறினார்கள். உடனே போப்பிற்குக் கோபம் மூண்டுவிட்டது. கலிலியோவை ரோமாபுரிக்கு வந்து சேரும்படி கட்டளையிட்டார்.

1633-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 14உ இவரும் ரோமாபுரி வந்து சேர்ந்தார். உடனே இவரது கொள்கைகளை, போப்பும் அவரைச் சேர்ந்த மதாசாரியர்களும் பரீக்ஷிக்க ஆரம்பித்தனர். அக்காலத்தில் வழங்கி வந்த இன்க்விஸிஷன் (Inquisition) என்னும் ஹிம்ஸைப்படுத்திச்செய்யும் பரீக்ஷைக்கு உள்ளாக்கப்பட்டார். ஜூன் மாதம் 21உ இவரைக் கண்டிப்பாய்ப் பரீக்ஷிக்க ஆரம்பித்தார்கள் — அப்பரீக்ஷையின் நோக்கம் ஹிம்ஸை செய்தாவது, பயமுறுத்தியாவது கலிலியோ அதுவரையில் பிரசுரித்துவந்ததெல்லாம் தப்பிதமென்று ஒத்துக்கொள்ளச் செய்யவேண்டியது.— அது மூன்று நாள் நடந்தது. அந்த மூன்று நாட்களில் என்ன நடந்ததோ, என்ன கொடுமைகள் விளைத்தனரோ, பகவானுக்கே தெரியும். அப்மாதிரியாக இவரை நிர்ப்பந்தப்படுத்தி ஹிம்ஸை செய்யும்போது, ஹிம்ஸை பொறுக்கமாட்டாமல் அவர்கள் சொல்வதையெல்லாம் செய்வதாக ஒப்புக்கொண்டார். உடனே தாம் செய்ததெல்லாம் பிச

# ஸ்ரீராமர் ஆண்ட அயோத்தி

## THE REALM OF RAMACHANDRA

இப்பாரதகண்டம் முழுதும் பிரஸித்தி பெற்றிருக்கும் அயோத்திமாநகர் அநேக விசித்திர காட்சிகளால் நிரம்பப்பட்டிருக்கிறது. ஐரோப்பாமுதலான வெளிநாடுகளிலிருந்து இந்திய நாட்டைச் சுற்றிப்பார்க்க வந்துள்ள ப்ரயாணிகளின் நேர்மார்க்கத்தி லில்லாமல் ஒதுப்புறமாக விருந்தபோதிலும், இந்துதேசத்தின் ஸமஸ்தமான விடங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் வந்து அங்கு கூடுகின்றனர். கிறிஸ்தவர்கள் ஜெருஸேலம் எனும் பட்டணத்தையும், மகம்மதியர்கள் மேக்கா எனும் பட்டணத்தையும் எப்படிக் கொண்டாடுகிறார்களோ அப்படியே ஹிந்துக்கள் இந்நகரைக் கொண்டாடுகிறார்கள். வெகுகாலத்துக்குமுன் இவ்விடத்தில் ஸுமார் 96 சதுரமைல் விஸ்திரணமுள்ள ஒரு பெரிய பட்டணமிருந்தது. ஆனால் அதன் எல்லைகளென்ன வென்று அறியக்கூடவில்லை. இந்நகர் அப்பொழுது, மனுவை ஆதியாகக் கொண்ட ஸூர்யவம்சத்தரசர்கள்பரிபாலித்து வந்த கோஸல ராஜ்யத்தின் ப்ரதான நகரமாயிருந்தது. ஸூர்யவம்சத்துதித்தவர்கள் அநேக வருஷங்கள் அங்கே அரசாட்சி செய்துவிட்டுப் பிறகு சில காரணங்களால் நாட்டைவிட்டுப் பெயர்ந்து தேசசஞ்சாரஞ்செய்து கடைசியாய் ராஜபுதனத்தில் போய்த் தங்கினார்கள். உடைபூர், ஜாட்பூர் முதலிய ராஜபுதன ராஜ்யங்களை இப்பொழுதாண்டு வருகிற அரசர்கள், கோஸலவம்சத்தின் ஸந்ததியார்களென்று ஊகித்தறியவேண்டியிருக்கிறது. இவ்வயோத்திநகரில் ஒரு ஸமயம் பௌத்தமதஸ்தர்கள் விசேஷித்திருந்தார்களென்று நம்ப அத்தாக்ஷிகளிருக்கின்றன. அசோக மஹாராஜனுக்குப்பின்னாண்டவர்கள் காலத்தில் இப்புத்தமதமே உன்னதபதவியை யடைந்திருந்ததாகவும், பிறகு விக்ரமாதித்தன் இப்பொழுது கோக்ராவென்று சொல்லப்படும் ஸரயுநதியைக் கொண்டு அப்பட்டணமிருக்கு மிடமறிந்து, அங்கே ப்ராம்மணமதத்தை ஸ்தாபித்ததாகவும் நமக்கு சரித்திரமூலமாய்த் தெரியவருகிறது. விக்கிரமாதித்தனுக்குப்பிறகு ஜெயினமதத்தைத்தழுவின ஸ்ரீபாஸ்டம் வம்சஸ்தர்கள் அந்நகரத்தில் கொஞ்சகாலம் அரசுபுரிந்தார்கள்; என்றால் அவ்வற்புதபுரியில் ஜயினமதம், ப்ராம்மணமதம், புத்தமதம் எல்லாம் கலந்திருந்தன என்றாகிறதல்லவா?

ஆனால் இந்நகர் இந்தியாவில் விசேஷமானக்யாதியடைய ஏனையகாரணங்களைவிட முக்கியமானது ஒன்றுண்டு. அதாவது, ஸாக்ஷாத் ராமச்சந்திரமூர்த்தி அவதரித்தவிடம் இது என்பதே. அவர்காலத்தில் அப்பட்டணத்திற்கிருந்த சிறப்பைப்பற்றி அவருடைய திவ்யசரித்திரமாகிய ராமாயணத்தில் வர்ணிக்கப்பட் டிருக்கிறது. சத்துருக்கள் தாக்கி வெல்லக்கூடாத கோட்டைகள் நகரைச்சுற்றி எழுப்பப்பட்டிருந்தன. பார்க்கப் பதினாயிரங்கண்வேணுமெனும்படியான உப்பரிகைகளும், உருக்கிவிட்ட தங்கம்போல் ஜ்வலித்துக்கொண்டிருந்த கோபுரங்களும் ஆகாயத்தை அளாவி நின்றன. அங்கே தனவந்தர்களாயும், தர்மிஷ்டர்களாயும் ஸந்தோஷமே முகத்தில் குடிகொண்டவர்களாயுமுள்ள ப்ரஜைகள் வஸித்து வந்தார்கள். நாலா பக்கங்களிலும் விசாலமான வீதிகளும், வீதிகளின் இடையிடையே அழகிய பண்டசாலைக

---

(280-ம் பக்கத் தொடர்ச்சி.)

தென்றும் தம்முடைய கொள்கைகளெல்லாம் மாறானதென்றும், அவைகளை தாம் நம்புகிறதில்லையென்றும், கலிலியோவை ஒரு பத்திரம் எழுதச்சொல்லி அதில் கையெழுத்தும் போடும்படி செய்தார்கள். கையெழுத்துப் போட்ட போதிலும், இவருக்கு ஆயுள் பரியந்தம் சிறைச்சாலையி லிருக்கவேண்டுமென்று தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் கொஞ்சகாலத்திற்குப் பிறகு இவரை, ஆர்ஸெட்ரி(Arcetri) என்னும் கிராமத்திற்குச் சென்று, வெளியில் போகாமலும், ஒருவருடனும் வார்த்தையாடாமலும் தமது வீட்டினுள்ளேயே வசித்துவரும்படிக் கட்டளையிட்டு அவ்விடத்திற்கு அனுப்பப்பட்டார். இதற்குள்ளாக இவரது கண் பார்வையும் கெட்டுவிட்டது. இம்மாதிரியாக, அநேக கஷ்டங்களை அனுபவித்து கடைசியாக 1642-ம் வருஷம் ஜனவரி மாதம் 8உ தமது 78-வது வயதில் உயிர் துறந்தார். என்ன விநோதம்! மேனாட்டிலும் சாஸ்திர அபிவிருத்திக்கு இம்மாதிரியான இடையூறுகள் இருந்தனவென்பதைக் கேட்க நமக்கு ஆச்சரியமாகவிருக்கின்றது.

S. சீனிவாஸய்யர், பீ. ஏ.

னும், ரத்னமயமான அரண்மனைச் சிகரங்களும் கண்ணைக்கவர்ந்தன. கருப்பஞ்சாறுபோல்இனியநீரும், தான்யபலம்பத்தும் அக்ஷயமாகவேயிருந்தனவென்று பூர்வீக கிரந்தகர்த்தாக்கள் எழுதியிருக்கிறார்கள். இன்னும், யாகாதிகளின் தாத்பர்யமறிந்த பண்டிதர்கள், பாடகர்கள், மற்ற வித்வத்சிகாமணிகள் அங்கேகுடியிருந்தார்கள். பிரக்யாதிபெற்ற சிற்பசாஸ்திரிகளும் இதர வேலைக்காரர்களும் ஜனங்களின் சவுக்கியத்தை நாடினவர்களாய் அவர்களுக்குத் தங்களாலானமட்டும் உதவிபுரிந்தார்கள். வெகுபராக்ரமசாலிகளான யுத்தவீரர்கள் இவ்வற்புதபுரியை சத்துருக்களினிடமிருந்து காக்க வலியுற்றிருந்தார்கள்.

இவ்விதம் ஸகலவித ஸம்பத்துக்களுக்கும் ஆஸ்பதமாயிருந்த நகரத்தை, தேவாம்சமெனச் சொல்லவேண்டிய தசரதமஹாசக்ரவர்த்தி அறுபதினுயிரவருஷம் அஸஹாயசூராய்ப் பரிபாலித்துவந்தார். அவருக்கு வெகுகாலம்வரை புத்ர ஸந்தானமில்லாதிருக்க, அச்வமேதமென்னும் யாகத்தை மூன்று நாள் விக்கம் வராவண்ணம் விமர்சையாய் நடத்தி, நான்கு புத்திரர்களை அடைய வரன்பெற்றார். மஹாவிஷ்ணுவின் அர்த்தாம்சமாய், ஜகதகில ப்ரதாபனும் முதலில் ஜனித்த குமாரன் ராமன், கொஞ்ச காலத்திற்கெல்லாம் கைகேசியின் மாற்சரியத்தினுல் நாட்டைவிட்டுக் காட்டிற்கேக நேர்ந்து, அங்கே தன் ப்ரிய ஸகியான ஸீதையைப் பறிகொடுத்து, லங்கேச்வரனேடு கோரயுத்தஞ் செய்து, தன் நாயகியை ராமன் மீட்டு வந்தது எந்த இந்திய வாஸிக்குத்தான் தெரியாது! ஹிமோத் பர்வதம் முதல் கன்யாகுமரி வரைக்கும் ஜனங்கள் அவரை பரதெய்வமாகக் கொண்டாடுகிறார்களல்லவா? ஸாதாரண ஜனங்களின் நடையுடைபாவனைகளுக்குக் காரண பூதங்களாயிருக்கிற புராதன இந்திய சரித்திரங்களைப் படிக்க ஆவலுற்றவர்களுக்கு இந்த அயோத்தியில் ஆச்சரிய முண்டுபண்ணத் தக்கனவாய் எண்ணிறந்த விஷயங்களிருக்கின்றன; என்ருல் இப் புண்யபூமிக்குக் கோடிக் கணக்கான ஜனங்கள் வருவது ஒரு விநோதமாகுமா?

ஒருவர் இப்பொழுது அயோத்திக்குப்போக வேண்டுமானல், இருப்புப்பாதை மார்க்கமாய் பைஸபாட் (Fyzabad) என்ற பட்டணம் போய் அங்கிருந்து நான்கு மைல் தூரம் தூசிகளடைந்த ஒரு சந்தின் வழியாகப் போகவேண்டும். அப்படிப் போகும்பொழுது குரங்குக் கூட்டங்கள் வாவா விருத்தியாகிக்கொண்டு போவது தெரியும். பட்டணத்தில் புகுந்ததும் அதில் மர்க்கடங்கள்தான் குடிகளோவென்று திகைக்கும்படி ஒவ்வொரு வீட்டின் கீழ்த்தரை முதல் மேல்மாடி வரையிலும் அலைந்துகொண்டிருக்கும். இங்குதான் தேவர்களால் ராமனுக்குச் சகாயமாக வானர ஸைன்யங்கள் உண்டாக்கப்பட்டன. பசுவின் வாலுக்குமேல் நீளமாய்ப் பூமியிற் கிடந்து புரளும் வால்களோடு கூடி, பர்வதங்கள்போல் பருமனுடையதாய், வேண்டிய சமயங்களில் உருக்களை மாற்றிக்கொள்ளக்கூடிய திறமை பெற்ற வானரங்கள் இங்கே பல இருந்தன. விளையாட்டாக மலைச் சிகரங்களை யுருட்டவும், ஆகாயத்தில் கிளம்பி மேகங்களோடு போர் புரியவும், அலைகள் மோதும் ஸமுத்திரத்தில் குறுக்கே நீந்திச் செல்லவும் அவை வலியுற்றிருந்தன. அங்கே ஒரு கோயிலில் ஹனுமானைப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்கிறார்கள். கோயில், தோற்றத்திற்கு ஒரு கோட்டை போலிருப்பதால் அதற்கு "ஹனுமான்கோட்டை" யென்று பெயர். அக்கோயிலின் நாலா பக்கங்களிலும் நூற்றுக் கணக்காய் வானரங்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. சிலவற்றின் துஷ்டத்தனத்தைக் குறித்து, புதிதாய்ப் போகிறவர்கள் அவைகளிடம் அதிகமாய் நெருங்காமலிருக்க எச்சரிக்கை செய்யப்படுவது மன்றி, அவை தொந்தரவு செய்யாமல் தடுக்கப்பட வேண்டியதும் அவசியமாகிறது.

அயோத்திக்குப் போகும் ப்ரயாணிகள் முதலில் காண்பது மணற்றரையி லரித்தோடும் கோக்ரா நதி. பிறகு பொதி மணலால் நிறைந்துள்ள ப்ரதேசத்தைத் தாண்டினல், ராமன் பிரதிதினம் தீர்த்தாடனம் செய்து பாவன மடைந்திருக்கும் 'ராம கட்டம்' இருக்கிறது. இதற்கு ஸ்வர்க்க த்வார மென்றும் பெயர். இப்புண்ய நதியில் பல்லாயிரம் தேசாந்திரிகள் அநுதினம் ஸ்நானம் செய்கிறார்கள். சிலஇடங்களில் வித்வான்கள் ராமாயணத்திலிருந்து ச்லோகங்களைப் படித்து, ஜனங்களின் மனதில் பதியும்படி அவைகளின் தாத்பர்யத்தை விளக்கிக்கூறுவார்கள். ஆற்றின் மணற்றரையில் நின்றபடியே பல பல புராதனமாயும், சில நூதனமாயுமுள்ள கட்

டிடங்களையும், மசூதிகளையும், எவரும் காணலாம். இவ்விதக் கட்டிடங்களுக்கு முன்னிருக்கும் அரங்கவாயில்களின் நடுவே கட்டப்பட்டுள்ளசுவர்களில் குரங்குகள் ஒளிந்து விளையாடிக்கொண்டு அவ்வழி போய்வருபவர்களைப் பல்லிளித்துப் பயங்காட்டும். பட்டணத்தின் நடுவில் விக்டோரியா மஹாராணியாருடைய ஞாபகச்சின்னமாக, வெள்ளைச் சலவைக் கல்லால் ஓர் உருவம் செய்து, அதேகல்லால் செய்யப்பட்ட மேடைமேல் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கிறது. ஹிந்துக்களுக்கு இப்பிராசீனப் பட்டணத்தின் மேலிருக்கும் அபிமானத்தை உத்தேசித்து இவ்விடத்திலும் லக்நௌவிலும் அபூர்வ வேலைத்திறமையுடன் எழுப்பப்பட்டிருக்கும் இச்சிலைகள் ஒருவித ஆநந்தத்தை உண்டுபண்ணுகின்றன. இவ்வுருவத்துக்கெதிரே ஒரு கோயிலில் புத்தருக்கு விக்ரஹாராதனை நடந்து வருகிறது. புத்தமதம் இங்கு பரவியிருந்ததென்று ருசுப்படுத்த ரொம்ப ஸ்வல்பமாகயிருக்கும் ஆதாரங்களில் இது வொன்று.

அயோத்தியில் இப்பொழுதிருக்கும் பழைய கட்டிடங்களில் வெகு ச்லாக்யமெனக் கொண்டாடப்படுவது ராமன் ஜனித்த இடமாகிய ‘ஜன்மஸ்தானம்’ என்பது. அது இரண்டு மாடிகளையும், அகன்ற பிராகாரத்தையும் உடையது. சுவரின் கல் ஒன்றில் ராமன் ஜனனத்தைப் பற்றி சில விஷயங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் மதத்வேஷப் போராட்டம் ஜாஸ்தியாய் நிற்கிறது. இங்கிருந்த கோயிலொன்று மசூதியாக மாற்றப்பட்டு, ஹிந்துக்களும் மகம்மதியர்களும் சேர்ந்து பூஜைசெய்ய நேர்ந்து, 1885-ல் பெரியசச்சரவுண்டாகி 75 மகம்மதியர்கள் உயிரிழந்தார்கள். அவர்களுடைய ப்ரேதங்கள் அருகிலொரு சமாதியில் அடக்கம் செய்யப்பட்டன. பிறகு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கட்டிடத்தை விபக்தம் செய்து, ஒரு பாகத்தில் துலுக்கர்கள் தங்கள் விதிகளைச் செய்யும்படிக்கும், மற்றொன்றில் ஹிந்துக்கள் ராமனுக்கு பூஜைமுதலிய க்ரியைகளை அனுஷ்டிக்கும்படிக்கும் ஏற்பாடு செய்து தந்தும், சுமார் இரண்டு வருஷங்களுக்குமுன் இருமதஸ்தர்களுக்கும் சண்டையுண்டாகி, பாவம்! மூன்று மகம்மதியர்களும் மூன்று ஹிந்துக்களும் உயிர் நீத்தார்கள்!

இப்பொழுது அயோத்தியை ஆண்டுவரும்

# நம்பூதிரிமார்கள்

## NAMBUDRIS

தர்மராஜ்யமென்று எல்லோராலும் புகழப்படும் திருவிதாங்கோட்டு ஸமஸ்தானத்தில் நம்பூதிரிமார்கள் என்ற ஒரு ஜாதியாருண்டு. நமது பாரதவருஷத்திலுள்ள பிராம்மணர்கள் அனைவரும் பஞ்ச கவுடர்களெனவும், பஞ்ச திராவிடர்களெனவும் இரு பெரும் பகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுள் கவுடர்களைக்காட்டிலும் திராவிடர்கள், சிறந்த தர்ம மார்க்கங்களினாலும் மாமிசவுணவை முற்றும் தவிர்த்திருப்பதினாலும் மேம்பட்டவர்கள் எனப்படுகின்றனர். இந்தத் திராவிடர்களிலும் மலையாள பிராம்மணர்கள் எனப்படும் நம்பூதிரிமார்கள் வெகு வைதிகர்களாய் விளங்குகின்றனர். மற்றைத் திராவிடர்கள் பற்பல விடங்களில் பரவியிருப்பதாலும், அந்நிய மதஸ்தருடைய ஸம்பந்தத்தைப் பெற்றிருப்பதாலும், நம்பூதிரிகளைப்போலவே வைதிக மார்க்கத்தையே அனுசரிக்கின்றனரென்பதற்கிடமில்லை.

திருவிதாங்கோட்டில் பற்பல விடங்களில் பொதுவாக நம்பூதிரிமார்கள் காணப்பட்டாலும், அவர்களது விசேஷ ஸ்தானங்கள் மூவாற்றுப்புழையும், ஆலங்காடும், எட்மோனூரும், குன்னத்நாடுமேயாம். பகவான் பரசுராமரால் குடியேற்றப்பட்டதாகப் போற்றப்படும் இந்நம்பூதிரிமார்கள் சென்ற ஜனஸங்கி

(இதன் தொடர்ச்சி 284-ம் பக்கம்.)

அரசன் பால்ய வயதிலிருப்பதால் ராஜ்யவிஷயங்களை துரைத்தனத்தார் பார்த்துக்கொண்டு, அவன்பட்டிருக்குப் ஜாஸ்தியான ஒரு கடனைக் கொடுத்துவந்து கொண்டிருக்கிறார்கள். அரசன் வஸிக்கும் அரண்மனை அழகிய ஊற்றுக்கள், செடிகளால் நிறைந்து, அதில் அநேக ப்ராகாரங்கள், தாழ்வாரங்கள், வெள்ளைக்கல்லால் கட்டப்பட்டு, அத்யுன்னதமாயிருக்கிறது.

ஹிந்துக்களால் மீத ஸம்பந்தமாய் அயோத்தி நகரம் மிகக் கொண்டாடப்பட்டுப் பிரஸித்தி யடைந்திருந்தபோதிலும், இப்பொழுது அதன் மகிமை குறைந்து ஒரே தூக்கத்தில் அது ஆழ்ந்து கிடப்பது வ்யஸனிக்கத்தக்கதாயிருக்கிறது.

T. S. ராஜகோபாலன்.

யையில் 5,933 பேர்களிருந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறார்கள்.

"நம்பூதிரி" என்ற பதத்துக்குப் பொருள் இன்னம் தெரிந்தபாடில்லை. 'உண்மையானவர்' அல்லது 'பரிசுத்தமானவர்' என்னும் பொருளையுடையது என்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார், 'அறிவைப் புகட்டுவோர்' என்னும் பொருளையுடையதென்பர். இஃதெவ்வாறாயினுமாகுக. இவர்கள், பாரத வருஷத்தில் பலவிடங்களினின்றும் முனியும் வீரருமான பகவான் பாசுராமரால் கேரளநாட்டில் குடியேற்றப்பட்ட அறுபத்துநான்கு கிராமக்காரர்களின் ஸந்ததியார்களெனப்படுகின்றனர். இவர்களது மூலஸ்தானம் அஹிக்ஷேத்திரமென்றும் அங்கிருந்து அவர்கள் குருக்ஷேத்திரப் பிரதேசத்துள்ள ஆர்யபுரம் என்னும் நகரில் குடியேறினரென்றும், அவ்வாரிய புரத்திலிருந்து பரசுராமன் அவர்களைக் கூட்டிக் கொண்டுவந்து கேரள தேசத்தில் குடியேற்றி, அவர்களுக்கென்றே விடப்பட்ட அறுபத்து நான்கு கிராமங்களுக்கும் அவர்களைச் சாசுவத "ஜென்மி"களாக்கினரென்றும், அவர்கள் கேரளத்தைவிட்டுப் போய்விடாவண்ணம், அவர்களது நடையுடை பாவனைகளில் சிற்சில மாறுபாடுகளை பாசுராமர் உண்டாக்கினரென்றும் கர்ணபரம்பரைச் செய்தியால் தெரிகின்றது. இவர்கள் மலையாள நாட்டில் குடியேறிய காலம் திரேதாயுகமெனப்படுகின்றது.

அந்தஸ்திலும், ஜாதிய முக்கியத்திலும் நம்பூதிரிகள் எழுவகையாகப் பகுக்கப்பட்டுள்ளனர். அவராவார்:—1. ஆழ்வான்சேரி நம்பூதிரிகள். 2. ஆத்யநம்பூதிரிகள் 3. விசிஷ்டநம்பூதிரிகள். 4 ஸாமான்ய நம்பூதிரிகள். 5. ஜாதிமாத்ரநம்பூதிரிகள். 6. சாபகிரஸ்தநம்பூதிரிகள். 7. பாபிஷ்ட நம்பூதிரிகள். இவர்களுள் முதலாவதான ஆழ்வான்சேரி நம்பூதிரிகள் வெகு மேலானவர்கள். ஒரு காலத்தில் ஹிரண்யகர்ப்ப விசேஷத்திலிருந்து ஒரு பொற்பசுவைத் தானமாகப் பெற்றுக்கொண்டு ஆழ்வான்சேரி நம்பூதிரி தனதுவீட்டுக்குப் போகையில் எதிர்ப்பட்ட புலையன் ஒருவன், "இறந்த பசுக்கள் எங்களைச் சேர்ந்தவையே யொழிய பிராம்மணசிரேஷ்டர்களைச் சேர்ந்தவையல்ல. இந்தப் பசு உம்முடையதானல், இதை நடந்துவரச் செய்யும்" என்றனனாம். உடனே, நம்பூதிரி அப் பொற்பசுவின்மீது தண்ணீரைத்தெளித்து தன் மந்திரசக்தியால் அதற்கு உயிர் கொடுத்து உடனழைத்துச் சென்றனனும். இவ்வதிசயத்தைக் கண்டு ஆச்சரியமடைந்த புலையன், "ஐயனே! நீர் உண்மையிலேயே தம்புராக்கள் தான்" என்றதாகவும்! 'தம்புராக்கள்' என்ற பட்டம் அவர்களுக்கு அன்று முதல் கிடைத்ததாகவும் கர்ணபரம்பரைச் செய்தியால் தெரிகின்றது. இந் நம்பூதிரிகளுக்குப் பாசுராமர் நான்கு அரிய சுதந்தரங்களைக் கொடுத்தனராம். அவை (1) பத்ராஸனம் (ஸபையில் முதல் ஸ்தானம்) (2) ஸர்வமான்யம் (எல்லோராலும் பூஜிக்கப்படுந்தன்மை) (3) பிராம்ம ஸம்ராஜ்யம் (பிராம்மண அதிகாரம்) (4) பிரம்மவர்ச்சஸ் (சாஸ்திரப் பிரமாணம் சொல்லுதல்) என்பனவாம். இந்நம்பூதிரிகள் எப்போதும் தேவதா பிரார்த்தனையிலும், பகவத் கைங்கரியத்திலும் ஈடுபட்டு, பரம வைதீகர்களாய் ஆசார அனுஷ்டானங்களில் எள்ளளவேனும் குறைவுபடாது காலங் கழிக்கின்றனர். அவர்களைப்பற்றி அவதூறுபேசினவனே கிடையாது. 'ஆறுவருஷங்களுக் கொருமுறை திருவிதாங்கோட்டில் நடக்கும் முறை ஜபம்' என்ற பெரிய விசேஷத்துக்கு இந்த ஆழ்வான்சேரி தம்புராக்கள் தான் முதன்முதலில் மஹாராஜாவினல் அழைக்கப்படுவார். அவர், முறைஜபம் கழிந்து ஊருக்குத் திரும்பிப்போகும்வரையில் மிகுந்த கவுரவமாயும் ஸர்வ மரியாதையுடனும் பாராட்டப்படுவார்.

இரண்டாமவரான ஆத்ய நம்பூதிரிகள், நம்பூதிரிப்பாடு என்றும் அழைக்கப்பெறுவர். அவர்கள் பூவல்லி, ஒலப்பாமன், வரிக்கச்சேரி, கூடலூர், பொறையனூர், ஓளச்சேரி, மேப்பத்து, எடமண் என்னும் எட்டு இல்லங்களைச் சேர்ந்தவராவர். இவர்களும் வெகு தனிமையில் வாஸஞ் செய்துகொண்டு வேதாத்தியயனம் பண்ணுவதிலும் பக்தி காரியங்களைச்செய்வதிலும், தர்மத்தை யனுஷ்டிப்பதிலுமே காலங்கழிக்கின்றனர். இவர்களுக்கு யாகம் செய்யும் உரிமையும், ஸந்யாஸம் பெறும் பாத்தியமும் கிடையா. இவர்கள் எவ்வகையான தானத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை. இவர்களுள் இரண்டு இல்லத்தாருக்குப் பகவான் பாசுராமர் கேரளத்திலுள்ள பெரியகோயில்களில் ஸர்வாதிகாரம்செய்யும் குருக்கள் பாத்தி

யத்தைக் கொடுத்தனராம். இப்போது திருவாங்கூரிலுள்ள சிரேஷ்ட கோயில்களில் தாரணநல்லூர் நம்பூதிரிப்பாடு என்பவரே ஸர்வ அதிகாரம் வகித்துவருகின்றனர். மற்றைய நம்பூதிரிகளால் இந்த ஆத்யநம்பூதிரிகள் எப்போதும், அவர்களது குடிப்பெயருடன் "நம்பூரி" என்னும் பட்டத்தைச் சேர்த்து விளிக்கப்படுவார். ஆத்ய நம்பூரி ஸ்திரீகள் உடையுடுக்கும் விதத்தினாலும், நெற்றியில் தரிக்கும் புண்டாரங்களினாலும் மற்றைய நம்பூதிரி ஸ்திரீகளினின்றும் வேறாகத் தோன்றுவர். இவர்கள்மட்டுமே வெள்ளி வளையல்களைத் தரிக்கலாம்; மற்றைய ஸ்திரீகள் வெண்கலம் அல்லது வெள்ளீயத்தாலான வளையல்களைத் தரித்துக்கொள்ளவேண்டும்.

மூன்றாமவரான விசிஷ்ட நம்பூரிகள் அக்னிஹோத்திரி என்றும், பட்டதிரி என்றும் இருவகையாவர். முன்னவரான அக்னிஹோத்திரிகள் அக்னிசயன யாகத்தைச் செய்த அக்கிதிரியென்றும், அக்னியாதானத்தைச் செய்த அதித்திரியென்றும், ஸோமயாகத்தைச் செய்த ஸோமதிரியென்றும் மூவகுப்பினராவர். கிருகஸ்தர்கள்தாம் யாகம் செய்வதற்குரியர்கள். யாகங்களிலும் மற்றக் காரியங்களிலும் நம்பூதிரிகளுக்கு நாயன்மாரின் உதவி அவசியம் வேண்டும்.

பட்டதிரியென்பவர், தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம், பாரதம், பிரபாகரம் முதலியவற்றைப் படித்துச் சொல்லிக்கொண்டிருக்கும் தத்துவஞானிகளாவார். மலையாளத்திலுள்ள மதாசாரியர்கள் இவ்வகுப்பினர்தாம். இவர்களுக்கு அநேக சிஷ்யர்களுண்டு. வாத்யான், வைதிகன், ஸ்மார்த்தன் எனவும் மூன்று பகுப்பு இவர்களிடமுண்டு.

வேதம் ஓதிக்கொண்டும், கோயில்களில் வைதிக காரியங்களைச் செய்துகொண்டும், மந்திர வாதத்தை அனுஷ்டித்துக் கொண்டுமிருக்கும் நம்பூதிரிகள் நான்காமவரான ஸாமான்ய நம்பூரிகள் எனப்படுவர். இவர்களுள் சிலர் கோயில்களில் அதிகாரம் பெற்றவராகவுமிருப்பர்.

ஐந்தாமவரான ஜாதிமாத்ர நம்பூதிரிகள் அஷ்ட வைத்யரெனவும், யாத்ரகழிக்காரர் அல்லது சாஸ்திர நம்பூதிரிகள் எனவும், கிராமணி நம்பூதிரிகள் எனவும் மூவகுப்பினராவார். அஷ்ட வைத்தியர், பரசுராமரால் வைத்தியத் தொழிலையே மேற்கொண்டிருக்கும்படி கட்டளையிடப்பட்ட எட்டு வைத்தியக் குடும்பங்களைச் சேர்ந்தவராவர். அவர்களுக்கு நம்பூரி, நம்பி, மூசு என்று பெயர்களுண்டு. யாத்ரகழிக்காரர் பரசுராமனிடமிருந்து போர்த்தொழிலைப் பெற்றுக்கொண்டவரெனப் படுகின்றனர். இவர்கள் பாதி பிராம்மணர் பாதி க்ஷத்திரியராவர்கள். கிராமங்களைக் காவல் செய்ய ஏற்படுத்தப் பட்டமையின் கிராமணி நம்பூதிரிகள் என்ற பெயர் மூன்றாம் வகுப்பினர்க்குக் கிடைத்தது. இம்மூவகையினரும் பிரத்தியேகமாக வைத்தியத் தொழிலிலும், போர்த் தொழிலிலும், ஊராள்வதிலும் கருத்தைச் செலுத்தும்படி பரசுராமரால் விதிக்கப்பட்டமையின், இவர்களுக்கு வேதாத்தியயனம் செய்வதற்குப் போதுமான சவுகரியம் இல்லாது போயிற்று. ஆதலால், காலக்கிரமத்தில் இவர்கள் அந்தஸ்தில் குறைந்தவராகி, வேத மோதுவதற்கு அருகரல்லர் என்று கருதப்பட்டனர். ஆயினும் இவர்களுக்கு 'முதல் முறை' என்ற வேத படனம் இன்னுமுண்டு. இம்முறையில் வேதத்தை இவர்களே படிக்கலாம்; அல்லது வேறொருவர் படிக்கக் கேட்கலாம். இவர்கள் மற்றைய பிராம்மணரைக் காட்டிலும் அந்தஸ்தில் குறைந்தவரென்றாலும், அவர்களோடு ஒரே துறையில் நீராடவும், ஸகபோஜனம்செய்யவும், சமையல் செய்வதில் உதவி செய்யவும் அருகராவார். தரித்திரத்தினாலும், வியாதியினாலும், காமாதிகளாலும் வேதாத்தியயனத்தைக் கைவிட்டவர்கள் இவ் வகுப்பைச் சேர்ந்தோராவர்.

ஆறாமவரான சாபகிரஸ்தர்கள், பரசுராமருடைய தெய்வீகத்தை நம்பாமல்போனதின் நிமித்தம், அவரால் சபிக்கப்பட்டவராவர். இவர்களுக்கு யாதொரு ஜாதி மரியாதையும் கிடையாது; வேதாத்யயனம் செய்யக்கூடாது, முன்னர்க் கூறப்பட்ட பிராம்மணர்களுடன் சேரக்கூடாது, கோயில்களில் நைவேத்யம் செய்யப்பட்ட அன்னத்தில் இவர்களுக்குப் பங்கு கிடையாது.

ஏழாமவரான பாபிஷ்டன்மார், நடத்தையினால், மற்றைப் பிராம்மணர்களுடன் ஸமமான மரியாதையும் உரிமையையும் பெறுவதற்கு அருகரல்லரென விலக்கப்பட்டவராவார். பரசுராமரிடமிருந்து பூமி தானம் வாங்கிய ஊரில்

பரிஷ மூசன் மாரும், மலையாள அரசர்களுள் ஒருவரான பூதராயப்பெருமாளைக் கொலைசெய் தலைக் கடைக்கணித்தவர்களும், வராக மூர்த்திக்கு அவமரியாதை செய்து அதனால் மற்றைப் பிராம்மணர்களை அவமதித்த பன்னியூர் கிராம வாசிகளும், பிராம்மணர்களைத் திருப்திப் படுத்துவதற்காக அரசனைக் கொலை செய்த நம்பிடிகளும் இவ்வகுப்பினராவார்கள்.

இவ்வகுப்புக்களே யன்றி, பொதுவாக நம்பூதிரிகள் ஒத்துள்ளவரென்றும், ஒத்தில்லாதவ ரென்றும் இரு பெரும்வகுப்பாகவும் பிரிக்கப் பட்டிருக்கின்றனர். ஒத்துள்ளவர், வேதாத்தியயனம் செய்வதற்கும், சோடச கிரியைகளைச் செய்வதற்கும் அருகராவர். ஒத்தில்லாதவர் அவைகளைச்செய்வதற்கு அருகரல்லாதவர். ஜாதி மாத்ர நம்பூதிரியும் சாபகிரஸ்த நம்பூதிரியும் ஒத்தில்லா வகுப்பைச் சேர்ந்தோராவர். ஒரு வகுப்பு ஸ்திரீ மற்றொரு வகுப்பு ஸ்திரீயுடன் ஸக போஜனம் செய்யமாட்டாள்; மற்றைய விஷயங்களில் இரு வகுப்பாருக்குள்ளும் வேற்றுமை இல்லை.

பொதுப்படக் கூறுமிடத்து, நம்பூதிரிகள் அனைவரும் நல்ல நிறமுடையவராயும், புத்தி சாதுர்யத்தைத் தோற்றுவிக்கும் முகக்குறியுடையவராயும் காணப்படுவார்கள். கூன், முடம், முதலியவர்கள் காணப்படுவது அருமையிலும் அருமை. அவர்களுக்குப் பூர்வசிகையுண்டு; அதாவது தலையின் முன்பக்கத்தில் குடுமி வைத்துக் கொண்டிருப்பார்கள். நல்லுணவு உண்பதால் அவர்கள் அனைவரும் பெருத்தசரீரிகளாகவேயிருப்பார்கள். மெலிந்த நம்பூதிரியைக்காண்பதரிது. அவர்கள் கைவிரல்களின்நகங்களை, முக்கியமாக இடதுகை நகங்களை வெகு ஆசையோடு வளர்ப்பார்கள். சிற்சிலர்களுக்கு அந்நகங்கள் ஒரு அங்குலத்திற்கு மேலாகவே வளர்ந்திருப்பதுண்டாம். இவர்கள் முக்கியமாக கிராமவாஸிகளானபடியால், பட்டினங்களுக்கு வந்தால் பட்டிக்காட்டரர்களைப்போல விழிப்பதனால் இவர்களை இன்னாரென்று கண்டுபிடித்து விடலாமாம்.

உடை. நம்பூதிரியினுடைய உடை ஸர்வ ஸாதாரணமானது. கரைகளில் ஜரிகையேனும் வேறு நிறமேனும் போடப்பட்ட சுத்த வெள்ளை வஸ்திரத்தையே ஆண்பாலரும் பெண்பாலரும் உடுப்பார்கள். ஸாதாரணமாக, ஆண்பாலார், மலையாள சூத்திரர்களைப்போலவே அரையில் சுற்றி ஒரு வேஷ்டியையும் மேல் ஒரு வேஷ்டியையும் தரிப்பார்கள். வைதிக காரியங்களைச் செய்யும்போதுதான் அவர்கள் எட்டு அல்லது ஒன்பதுமுழ நீளமுள்ள வஸ்திரத்தைத்தட்டுடுக்கையாகக் கட்டிக்கொள்வார்கள். அதாவது முன்னும் பின்னும் கச்சம் வைத்துக் கட்டிக்கொள்வார்கள். ஸந்யாஸிகளுக்குக் காவி வஸ்திரமுண்டு. கால்களில் மரப்பாதுகைக ளிருக்கும். ஸ்திரீகளின் வஸ்திரத்துக்குப்புடவையென்றே பேர். ஸாதாரணமாக அது இருபது முழ நீளமும் இரண்டரை முழ அகலமும் உள்ளதாகவிருக்கும். அதுவும் முன் கூறப்பட்ட தட்டுடுக்கையாகவே தரிக்கப்படும். ஸ்திரீகள் வீட்டிலிருக்கும் போது தேகத்தின் மேல்பாகத்தைத் திறந்தே போட்டிருப்பார்கள். வெளியில் சென்றால் நன்றாக மறைத்துக்கொண்டு போவார்கள். நம்பூதிரி ஸ்திரீகள் ரவிக்கை போட்டுக் கொள்வதில்லை. அவர்கள் பிறர் கண்ணில் படக்கூடாத "கோஷா" ஸ்திரீகளாவர். தங்கள் தங்கள் புருஷர்கள், தகப்பன்மார், நெருங்கிய உறவினர் இவர்களின் முகத்தை மட்டும் தான் அவர்கள் பார்க்கலாம். வெளியே சஞ்சரிக்கும்படி நேர்ந்தால் அவீர்கள் நாயர் ஸ்திரீகளை முன்னிட்டுக்கொண்டு, பெரிய ஓலைக் குடையொன்றால் தேகத்தை மறைத்துக்கொண்டு செல்வார்கள்.

நகைகள். புருஷர்கள் தங்கத்தினால் செய்த மோதிரங்களையும், அரைஞாணில் கோர்க்கப்பட்ட ரக்ஷாபந்தன மொன்றையுமே நகைகளாக அணிவார்கள். அக்கிதிரி, ஹோமதிரி முதலிய வைதிகர்கள் காதுகளில் பெரிய குண்டலங்களை அணிந்துகொள்வார்கள். மற்றையோர்கள் காதுத்துளையுடையோராயினும் யாதொரு காதணியையும் தரிக்க மாட்டார்கள். ஸ்திரீகளும் அதிக நகைகளைத் தரிப்பதில்லை. கழுத்தில் தாலியும், குழைவைத்துப் பட்டுச்சரடு கோர்க்கப்பட்ட பொன் நாணயத்தாலான ஒரு மாலையும் இருக்கும். காதுகளில் ஒரு வித மான பொன்னோலைமட்டுமுண்டு; பித்தளையினலாவது வெண்கலத்தினலாவது செய்யப்பட்ட உள் கூண்டான காப்புகள் கைகளில் அணியப்படும்.

(இது அடுத்த ஸஞ்சிகையில் முடிவு பெறும்.)

# சுகாதார விதிகள்

## THE RULES OF HYGIENE

### ஸ்நாநத்திற்குத் தண்ணீர் வகைகளின் குணாகுணங்கள்

அதி குளிர்ச்சியான தண்ணீர்—"இது பலமுள்ள சரீரங்களுக்கே ஏற்றது. குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்வதாலுண்டாகும் நன்மைகள் என்னவென்றால் (i) ரக்தவோட்டம் வேகப்படும்; (ii) சரீரயந்திரங்களில் ரக்தக்கட்டுகள் நீக்கப்படும்; (iii) வியாதி, அதிகப்படிப்பு, தூக்க விழிப்பு, அதிக சிற்றின்பபோகம் முதலியவைகளால் சோர்வடைந்தவர்களுக்கு குளிர்ந்த ஜல ஸ்நாநம் நன்மையையும், பலத்தையும் கொடுக்கும்.

[குறிப்பு:—பலவீனர்கள் குளிர்ந்த ஜலஸ்நாநத்தால் தங்கள் தேகத்தைப் பலப்படுத்திக்கொள்ள முயன்றால், அவர்கள் ஸ்நாநத்திற்கு முன்பு, தேகத்தைத் தேய்த்து அனலெழுப்பிக்கொள்ளவேண்டும். சரீர முழுவதையும் ஒரே காலத்தில் தண்ணீரில் நனைக்காமல் முகம், கழுத்து, மார்பு முதலியவைகளை முதலில் நனைத்துக்கொண்டு, பிறகு ஸ்நாநம் செய்யவேண்டும். யாரும் கால் முதலிய சரீரத்தின் கீழ்ப்பாகங்களை நெடுநேரம் நனையும்படி இடங்கொடுக்கக்கூடாது. இப்படிச் செய்வதால் ரக்தாசயம் சுவாஸாசயம் முதலிய சரீரமத்திய யந்திரங்களில் அதிகரக்தம் கட்டி தீமையுண்டாகும். ஸ்நாநம் செய்தான பிறகு ஈர வஸ்திரங்களை யுடுத்திக்கொண்டிருக்கும் வழக்கம் கெடுதல்.]

மந்தோஷ்ணமான ஜலம்:—இது குளிர்காலங்களுக்கேற்றது. பலவீனர், கர்ப்பிணிகள், சிறு குழந்தைகள் இவர்களுக்கும் ஏற்றது. கடினமான தேகமுயற்சிகளுக்குப் பிறகு நல்லது.

வெந்நீர்:—பொதுவில் இது தேகத்தளர்ச்சிக்கு ஹேதுவாதலால் நன்மையல்ல. ரக்தக்கட்டுகள், சுளுக்கு, உழைப்பினாலுண்டாகும் சரீரச்சோர்வு முதலியன இருக்குங்காலங்களில் வெந்நீர் ஸ்நாநம் நன்மையைத் தரும். வெந்நீர் ஸ்நாநம் செய்தான பிறகு சரீரத்தில் குளிர்ந்த காற்றுப்படவிடக்கூடாது. சூடான வெந்நீர் குழந்தைகளுக்கு நன்மையென்றெண்ணும் ஸாதாரண ஜனங்களின் அபிப்பிராயம் முற்றிலும் தவறு.

கடல்நீர்:—சரீரத்திற்கு மிகவும் ஹிதமானது. ஜலத்தில் இறங்கினவுடனே ஓர்வித பயமும் திக்குமுக்காடும் உண்டாகும். சற்றுநேரத்திற்கெல்லாம் அவை மாறி, மன உத்ஸாகம் முதலிய இன்பமான உணர்ச்சிகள் உண்டாகும். அவை நிற்கும்வரையில்தான் கடல் ஸ்நாநம் ஹிதம் செய்யும். அவை குறைய ஆரம்பித்தவுடன் கரையி லேறிவிடவேண்டும்.

அப்பியங்கனம்:—எண்ணெயை ஸ்வல்பமாகச் சுடவைப்பதனால் மெல்லிதாகி சரீர த்வாரங்களில் பிரவேசித்து நன்மைபயக்கும். எண்ணெய் தேய்த்து வெகு நேரம் ஊறவைப்பது நன்மையன்று. குளிர்ச்சிக்குணமுள்ள பச்சிலைகள் சேர்த்துத் தைலங்கள் செய்து உபயோகப்படுத்தலாம். அப்யங்கன ஸ்நாநமானவுடனே, மிளகுரஸம் போட்டு சாதம் சாப்பிடவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்; அது பிசகு. ஸ்நாநத்தால் தேகம் குளிர்ந்திருப்பதால் ஜீரணத்தில் தீவிரமாய்ப் பிரவேசிக்க சரீரம் இடங்கொடுக்காது. ஆகையால் சரீரத்தில் அனல் ஸ்வபாவமாய் உண்டான பிறகு, லகு ஜீரண யோக்கியமான ஆகாரம் சாப்பிடுதல் நன்று.

பொதுவாக ஸ்நாநம் செய்யும்பொழுது நகங்கள் முதலிய மிக அல்பமான பாகங்கள் கூட நன்றாய் ஜலத்தால் சுத்தி செய்யப்பட்டு, அழுக்கு எடுக்கப்படவேண்டும்.

வஸ்திரம்:—நமக்கு விசேஷமாய் உபயோகத்திலிருப்பது பருத்தித் துணிகளே. வண்ணானிடம் கொடுக்கப்பட்டு, அவன் வெளுத்து, கஞ்சி போட்டு 'இஸ்திரி' செய்த உடைகள் மிகவும் நாகரிகந்தான், பார்வைக்கும் அழகுதான். ஆனால் அவ்வுடைகள் சரீரத்தின் வியர்வை முதலிய ஈரங்களை ஆகர்ஷித்து, கஞ்சிமா புளித்து, துர்க்கந்தத்திற்கு இடங்கொடுத்துப் பல விதமான சர்மரோகங்களுக்கு இடமாகிறது. மேலும் பல வியாதிஸ்தர்களின் உடைகளோடு நம்முடைய உடைகளும் வண்ணான் வீட்டில் ஒன்றாய்ச் சேர்ந்து கிடக்கிறபடியால், அது வியாதிகள் பரவுதற்கு ஸாதகமாயிருக்கிறது. ஆகையால், ரோக சரீரத்தோடு ஸம்பந்தப்படுகிற வஸ்திரங்களையாவது வண்ணான் மடியாக உபயோகிக்காமல் நனைத்துத் தோய்த்து உபயோகித்தல் நலம். அன்றன்றுடகம் வஸ்திரங்களை அவரவர் சுத்தமாய்த் தோய்த்துவிடும் பட்சத்தில், கோடிவஸ்திரங்கள் தவிர வேறு

வண்ணானுக்குப் போடவேண்டிய அவசியமேயில்லை.

பிளானல் (Gauze Flannel) என்ற மெல்லிய கம்பளியுடைகள் எப்பொழுதும் சரீரத்திலிருப்பது நலம். ஆனால் பிளானல்கள் சரீரத்தோடு நேராக ஸம்பந்தித்தல் அவ்வளவு நன்றன்று. வியர்வை, அழுக்கு முதலியவை ஸம்பந்தித்தால் அவைகளை வெளியில் உலர்த்தினால், அதனாலேயே பிளானல்கள் சுத்தமடையும் குணமுடையவை. மேலும் ஸோப்பினால் சுத்தம் செய்வதற்கு மிகவும் ஸுலபமானவை. ஆனால் கற்களில் அடித்துத்தோய்க்கக் கூடாது. கோடைகாலத்தில் பிளானல் உபயோகப்படுத்தக்கூடாதென்று சொல்வது மூடத்தனம். குளிர்காலத்தில் பிளானல் சரீர உஷ்ணத்தைவெளிவிடாமல் காக்கிறது. கோடைகாலத்தில் வெளியிலுள்ள உஷ்ணம் சரீரத்தில் தாக்காமல் காக்கிறது.

சிறுகுழந்தைகளுக்கு குளிர்தாங்குகிற சக்தி மிகவும் குறைவு. அவர்கள் சரீர உஷ்ணம் வெகு ஸுலபமாய் அல்ப காரணங்களால் குறைந்து விடுகிறது. சரீர அனல் குறைவது மிகவும் அபாயகரம் என்று யாரும் அறிவார். ஆகையால் தகுந்த உடைகளைக்கொண்டு குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாயிருக்க, நம்முடைய நாட்டில் இவ்விஷயத்தை அவ்வளவாய் கவனிக்காமலிருப்பது துக்ககரமானவிஷயம். குளிர்காலங்களில் பிளானல் முதலிய நல்ல துணிகளால் குழந்தைகளின் உடம்பைமட்டும்மூடி கைகால்களைத்திறந்துவிட்டு வைக்கும் வழக்கம் மிகவும்கெடுதல். குழந்தைகளுக்கு மெதுவான பருத்திநூல் உடைகள் தரிப்பித்துஅதன்மேல் பிளானல்உடைகளை தரிப்பித்தால், கரடுமுரடான பிளானல் துணியால், குழந்தைகளின் ஸன்னமும் மிருதுவுமான தோலுக்குச் சேதம் ஏற்படாது. குழந்தைகள் விஷயத்தில் இவ்விதஜாக்கிரதை யெடுத்துக் கொள்ளாததால்தான், நம் நாட்டுக் குழந்தைகளுக்கு விசேஷமாய் அஜீரணம், வாந்தி, வயிற்றோட்டம், பேதி, ஜலதோஷம், இருமல், காய்ச்சல், மந்தம் முதலிய பல மோசமான வியாதிகளுண்டாகின்றன.

சிறுவர்களுக்குச் சொல்லப்பட்ட விஷயங்களெல்லாம் விருத்தாப்பியர்களுக்கும் அந்வயிக்கும்.

பெல்ட் என்ற அரைக்கச்சைகளைக்கொண்டு வலுவாக இடுப்பில் பிணித்தலை நிறுத்தவேண்டும். அரைக்கச்சைகளின் உபயோகத்தையே நிறுத்துவதாயிருந்தாலும் நலந்தான். இப்படி இறுக்கிக் கட்டுவதனால் அரைநடி முதலிய வியாதிகள் வருகின்றன. ரக்தவோட்டம் தடைப்படுகிறது. கச்சையை பவிழ்த்தவுடனே அந்த விடத்தில் ஒருவிதமான குறுகுறுப்புண்டாவது யாவருடைய அநுபவத்திற்குள்ளும் வந்திருக்கலாம். தடைப்பட்டிருந்த ரக்தவோட்டம் மறுபடி ஸஞ்சாரத்திற்காரம்பிப்பது தான் அதன் காரணம்.

பொதுவாய்ப்பேசுமிடத்து,உடைகள் எவ்விடம் தரிக்கப்படுபனவாயிருந்தாலும், அவைகளை இறுகக் கட்டுவது மிகவும் தீமையானது. வஸ்திரங்களால் வயிறு இறுக்கப்பட்டால் ஜீர்ணேந்திரியங்களுக்கும், மார்பு இறுக்கப்பட்டால் சுவாஸாசயங்களுக்கும், கழுத்து இறுக்கப்பட்டால், கழுத்திலுள்ள பெரிய ரக்தக் குழாய்களுக்கும் தீமையேற்படுகிறது.

தலைகளில் தலைப்பாகை வைத்துக்கொள்ளுங் காலங்களிலும், உச்சித் தலையின்வழியாய், மற்றபாகங்களுக்குக் காற்றோட்டமிருக்கும்படியாக பாகைகள் கட்டப்பட்டிருக்கவேண்டும். குல்லா (Cap) க்களிலும் உச்சித்தலைக்கு நேராக துவாரங்கள் இருத்தல் நன்று; இல்லாவிட்டால் மண்டையும் அதன்மூலமாய் மூளையும் உஷ்ணப்படுவதோடு, தலையில் அகாலத்தில் வழுக்கை விழுவதற்கும் அது ஒரு காரணமாகும்.

ஈரமான வஸ்திரங்களையும் அழுக்கடைந்த வஸ்திரங்களையும் உடுத்திக்கொண்டிருப்பதால் உண்டாகும் தீமைகள் முன்னமேயே ஓரிடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆகாரம்:—நம்முடைய சரீரத்தில் ஓயாமல் வேலை நடந்துகொண்டிருப்பதனால், அநேகம் வஸ்துக்கள் உபயோகமற்றுக் கழிக்கப்படுவதினாலும், அக்குறைவை நிவர்த்திக்கப் புதுவஸ்துக்கள் உண்டாக்க வேண்டியதின் நிமித்தம், சரீரதத்துவ விருத்திக்கேற்ற ஆகாரங்களை மனிதன் உட்கொள்ளவேண்டியது அவசியமென்றாயிற்று.

எவ்விதமான ஆகாரங்களை நாம் உட்கொள்ள வேண்டுமென்று அறிவதற்கு ஸுஜீரணம் எந்த நிபந்தனைகளுக் குட்பட்டதென்று அறிந்துகொள்ளவேண்டும்.

முக்கியமாய் நாமுட்கொள்ளும் போஜனத்திற்கு இருவிதமான பிரயோஜனமுண்டு:—(i) சரீரத்திலிருந்து கழிந்துபோன பதார்த்தங்களுக்கு ஈடுசெய்வது; (ii) தேகத்தின் ஸ்வபாவ உஷ்ணம் மாறாமல் காத்துக்கொள்வது. இவை எப்பொழுதும் ஞாபகத்தில் இருக்கவேண்டும்.

ஆகாரம்:—மாப்பண்டம், அல்பூமின் பண்டம், நெய்ப்பண்டம் என மூன்றுவகைப்படும். இவைகளில் மாப்பண்டமானது வாயிலூறுகிற உமிழ்நீராலும், அல்பூமின் பண்டங்கள் குக்ஷிநீராலும், நெய்ப்பண்டங்கள் பித்தநீர், கணைநீர் இவைகளாலும் இவ்வளவிலும் ஜீரணிக்கப்படாதபாகங்கள் குடல்நீராலும் ஜீரணத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. ஜீரணமாக, ஆகாரங்களெல்லாம் தங்களுடைய ஸ்வரூபம் மாறிக் கரைந்து ரக்தத்தினால் ஆகர்ஷிக்கப்பட்டு, சரீராவயவங்களோடு தன்னினப்படுதலுக்குத் தகுந்த ஸ்திதிக்கு வருதலாம்.

ஆகார வகைகளை வேறுவிதமாகவும் பாகுபாடு செய்திருக்கிறார்கள். முதல் வகுப்பு: சதையை உண்டுபண்ணும் ஸத்துள்ள பதார்த்தங்கள்-உதாரணம்: இறைச்சிகள், பால், பயறுகள் முட்டைகள் முதலியன. இரண்டாவது வகுப்பு: கொழுப்புப் பதார்த்தங்கள்—உதாரணம். பலவகை நெய்களும் எண்ணெய்களும். மூன்றாவதுவகுப்பு: கரிஜலவஸ்துக்கள் (Hydro carbons); உதாரணம்—பலவகை மாக்கள், மாசத்துகள் (Extracts), சர்க்கரைகள். நான்காவதுவகுப்பு: உப்புகள். உதாரணம்—சாதாரண உப்பு காய்கறிகளிலுள்ள பலவிதமான உப்புகள், சுண்ணாம்பு, இரும்பு முதலியன

பின்சொல்லப்பட்டிருக்கும் பாகுபாடுதான் சாஸ்திர திருஷ்டிக்கு மிகவும் ஸம்மதமானது. எந்த போஜனத்தில் இந்நான்குவகைகளும் ஸரியான அளவு கலந்திருக்கின்றனவோ அந்த போஜனந்தான் பூரணமான போஜனமாகும். ஆகிலும் மூன்றாவது வகுப்புத்தவிர மற்றைய வகுப்புக்கள் போஜனத்திற்கு இன்றியமையாதவைகள். அதெப்படியென்று அறிந்துகொள்ளுவதற்கு அவ்வவ்வகுப்பு போஜனபதார்த்தங்களின் இயல்பு எப்படியென்று சற்று நிதானிக்கவேண்டும்.

(i) சதையை வளர்க்கும் வகை பதார்த்தங்கள் சரீரபலத்திற்கும் உறுதிக்கும் மனோபலத்திற்கும் அவசியமானவை. இவைகளால்தான் சரீரபந்திரங்கள் செழிப்பாக வளரவேண்டும். இவைகளை நாமெவ்வளவுக்கெவ்வளவு சாப்பிட்டு, அவை தன்னினப்பட்டு சரீரத்தில் சாருகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சரீரத்திற்குக் திடமும் மனோதத்துவங்களுக்குப் பலமும் ஏற்படுகின்றன.

(ii) கொழுப்புப் பதார்த்தங்கள் முதல் வகுப்பு ஆகாரங்கள் ஸரிவர ஜீரணமாவதற்கு வேண்டிய உதவி செய்கின்றன. சரீரத்திலுள்ள சிலவகை நரம்புகளை அவை ஒருவாறு போஷிக்கின்றன. முக்கியமாய் சரீரத்தின் ஸ்வபாவ உஷ்ணத்தைக் காப்பாற்றிவைத்துக் கொள்வதற்கு இவை மிகவும் அவசியமானவை.

(iii) இவ்வகுப்புப் பதார்த்தங்கள் சரீரத்தின் ஸ்வபாவ உஷ்ணத்தைக் காத்துக் கொடுக்கக் கூடியனவேயன்றி, சரீரவளர்ச்சிக்கு எவ்விதத்திலும் உதவி செய்யக்கூடியவையல்ல. என்றாலும் தேகம் பூரண ஸௌக்கியத்துடனிருப்பதற்கு இவை மெத்த அவசியம். இவை சரீரத்துடன் ஸம்பந்தப்பட்டு, வேண்டிய அளவு அனலை எழுப்பி மீதப்படும் பாகங்கள் கொழுப்பாகமாறி, சரீரத்திலேயே நிலைக்கின்றன. முதல் வகுப்புப் பதார்த்தங்களைக் காட்டிலும் இவை போஜனத்தில் மூன்று முதல் நான்கு மடங்குவரை சேரவேண்டுமென்று வைத்திய சாஸ்திரிகள் அபிப்ராயப்படுகிறார்கள்.

(iv) இவை இன்றியமையாத வகுப்புகளில் ஒன்று. தண்ணீரும் இவ்வகுப்பைச் சேர்ந்ததுதான். சிறு குழந்தைகளுக்குத் தகுந்த அளவு தண்ணீர் கொடுக்கப்படாததினாலேயே வளர்ச்சி ஸரிவர ஏற்படுகிறதில்லை. இவ்வகை போஜனங்கள் எலும்பு முதலிய சரீர யந்திரங்களின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவை. ஸாதாரண உப்பு சரீரத்திற்கு மிகவும் முக்கியமானது. ஒரு நாளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் உப்பு சரீரத்திற்குச் சேராவிட்டால், உடம்பிற்கு அஸௌகர்யம் உண்டாகக்கூடும். வயிற்றில் பூச்சிகள் உற்பத்தியாகும்.

---

ஒரு புதிய முனிஸிபாலிடி.—ராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த விருதுப்பட்டி 1915-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல்தேதி முதல், ஒரு முனிஸிபாலிடியாக ஆக்கப்படும் என்று கவர்ன்மெண்டு உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

# ஐரோப்பிய யுத்தம்

## THE GREAT EUROPEAN WAR

சிற்றுளியால் கல்லும் தகரும்!

முக்காலத்து தேவாஸுர யுத்தங்கள் போலவும், மஹாபாரதப் போரைப் போலவும், வெகு மும்முரத்துடன் தற்காலம் நடந்துவருகிற ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றி அறியாதார் யார்? நாம் இதுவரையில் கேட்டுள்ள யுத்தங்களில் இரு கட்சியாருக்கும் இடையிடையே ஒழிவுவேளை யிருந்ததெனவும், அப்பொழுதும் சிறு ஸமாதானங்களினால் சற்று களைப்பாறி மறுபடி பல விருத்தியுடன் போர்செய்தனரென்றும் அறிகிறோம். ஆனால் இப்பொழுது நடந்துவரும் பெரும் போரிலோ ஒழிவு என்பதும் இடையாது. ஸமாதானமும் இல்லை. யுத்தமுனைக்கு இன்னும் ஆட்கள் வேண்டும். தேசத்தின், ஜன்மபூமியின் பாதுகாப்பினிமித்தம் எல்லாரும் முன் வரவேண்டியது என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதே பெரும்பேச்சாயிருக்கிறது. இருகட்சிகளிலும் பின்னடைபவரைக் காணோம். ஆஸ்ட்ரியாபோன்ற சில நாடுகள் உள்நாட்டுக் கலஹங்களினால் ஸமாதானத்தைக் கோருகின்றனவென்று ஸமாசாரங்கள் அடிக்கடி வெளிவந்த போதிலும் "இந்த யுத்தத்தில் முதன்மையாய் வந்துள்ள ப்ரிடிஷ் ராஜ்யமும் ஜெர்மன் ராஜ்யமும் தங்களில் எவராவது தீர்மானமாய்த் தோல்வியடைகிறவரையில் போரை நிறுத்துவதில்லை" என்று போட்டி போட்டுக் கூறுவதுபோல் விஷயங்கள் தற்சமயம் நிற்கின்றன.

இவ்வாறு இவைகள் ஒன்றிற்கொன்று போட்டி செய்வானேன் என்ற சங்கை நிகழலாம். இந்தப் போட்டிக்குக் காரணமாகிற விஷயங்களைப்பற்றி சவிஸ்தாரமாய் நம் ஸஞ்சிகையில் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். ஆனபோதிலும் இங்கு இன்னம் வேறுசில காரணங்களைக் கூறி அவற்றின் இயற்கையை ஆராய்வோம். இப்பெரும்போரில் அகப்பட்டுத் தத்தளிக்கும் மனுஷ்யஸங்க்யையைப்பற்றி நினைத்தலும் மனஸிற்குப் பெரும் துக்கத்தைத் தருகின்றது. ஹா, கஷ்டம்! கஷ்டம்!! தம் நாட்டின்பொருட்டும், ஸத்தியத்தின்பொருட்டும், தர்மத்தின்பொருட்டும், தம் அரசன், இனத்தார், ஸ்வதந்திரம், ஸஹோதரத்வம் ஆகிய பல விஷயங்களின் நிமித்தமும் ரணகளத்தில் உயிர்நீத்தவர் எத்தனையாயிரம்பேர்! பத்திரிகைகள் மூலமாய் வரும் மரணஜாப்தாவில் இருக்கும் பெயர்களைத் தவிர இறந்து கிடப்பவர்கள் எத்தனை பேரோ! காயம்பட்டவர்கள் ஸாதாரண குடும்பத்திலுதித்து போருக்குச் சென்றிறந்து போனவர்கள் எத்தனை பேரோ! பகைவரது ஸைன்யத்திலும் இதேமாதிரி இவர்களினும் அதிகமாய் உயிர்நீத்த வீரர்கள் எத்தனை பேரோ! பகவானே கணக்கெடுத்தற்குரியர். இப்படி இறந்தவர்களின் ஸ்தானத்திலிருந்து போர்செய்ய இருகிறத்தாரும் அவ்வப்பொழுது ஸேனைகள் தயார் செய்கிறார்கள் என்று எல்லோருக்கும் தெரியவரும்.

அதுபோலவேதான் பொருட்செலவு விஷயத்திலும். எந்ததேசம் அதிகமான பொருளைச் செலவழிப்பதற்குத் தயாராய் இருக்கின்றதோ அதன்கட்சியில்தான் ஜயமும் உண்டு. நாகரிகம் முதிர்ந்த இருபதாம் நூற்றாண்டில் மனுஷ்யபலத்தினாலும் மனுஷ்ய ஸூக்ஷ்மத்தினாலுமே காரியங்கள் முடிகிறதில்லை. 'மந்திரத்திலே மாங்காய் விழுமோ?' என்பது பழமொழியல்லவா? எவ்வளவு ஆண்மை, வீரம், சௌர்யம்பொருந்திய எண்ணிக்கையில்லா ஆண்மக்கள் போர்முனைக்குச் சென்றிருந்தபோதிலும் அதற்குத் தகுந்த அவ்வெண்ணிக்கையினும் மிகுதியான பொருட்செலவு இருந்தாலொழிய யாதொரு கட்சியும் ஜயம்பெறாதென்பது திண்ணம். உதாரணமாக இந்தயுத்தத்தையே எடுத்துக்கொள்வோம். முதலில் ஜெர்மானியர் பாரிஸ் வரையிலும் வெற்றியுடன் முன்வந்ததற்குக்காரணம் என்ன? பெல்ஜியம் அவ்வளவுசீக்கிரத்தில் ஜெர்மானியர் வசம் ஆவானேன்? எண்ணிக்கையில் ஜெர்மானியர் அதிகமானவர் என்பதினாலோ? அல்ல அல்லது அவர்கள் ஸூக்ஷ்ம புத்தியுடையவர்கள் என்பதா? அதுவும் அல்ல. பின் எதனாலே அவர்களுக்கு முதலில் அவ்வளவு அனுகூலம் உண்டாயிருந்தது என்றால் அவர்கள் இவ்யுத்தத்தை முன்னோக்கி அதற்குத்தகுந்த பொருட்செலவு செய்திருந்தார்கள். அவர்களது ராஜசக்தி, வீரதீரம், பராக்கிரமம் இவைகளுடன் அவர்களுக்கு பொருள் அநுகூலம் ஏராளமாயிருந்தது. போவதற்கு வேண்டிய வாகனங்கள், புகைவண்டி, ஆகாயவிமானம், மோட்டார்வண்டிகள், தந்தி முதலானவைகளும், போர்வீரர் தம

க்குவேண்டிய உடை ஆகாராதிகளும் கட்டுத்தடையின்றி சேகரிக்கப்பட்டிருந்தன. யாதொரு கஷ்டமுமின்றி இருந்த விடத்தில் இருப்பது போல் இருந்துகொண்டே போர்புரிவதென்றால் யாருக்குத்தான் எளிதாயிராது. போர்தொடங்கி சிலகாலம் வரையில் ப்ரஞ்சுக்காரர் யாதொரு முஸ்தீப்புக்களுமின்றி வருந்தினர். சில ஆயுதங்கள்கூட அபலாரிடமிருந்து இரவல்வாங்க வேண்டியதாயிற்று. அநேகமா கிரிபே முதலில் நம்மவர்களுமிருந்துவிட்டனரென்றால் என் சொல்வது! ஆனால் அதிசீக்கிரத்தில் ப்ரிடிஷ்ராஜாங்கம் சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும் என்பதைக் கைக்கொண்டு எல்லாப் பொருள் வசதிகளையும் யுத்தத்திற்கென்று உபயோகித்து வந்ததினால் ஜெர்மானியரை மெதுவாய்ப் பின்நகர்ந்து செல்லும்படி செய்திருக்கின்றனர். ஜெர்மன் ராஜ்யமும், ப்ரிடிஷ் ராஜ்யமும், இந்த பொருட்செலவு விஷயத்தில் ஒன்றற்கொன்று பின்வாங்காமற் போனபோதிலும் ப்ரிடனே முன்னிற்பதை ஒவ்வொருவனும் கண்டறிவான். எத்தனை வருஷங்களாய் யுத்தத்திற்கென்று முஸ்தீப்புகளசெய்து வைத்திருந்தபோதினும் இடைவிடாமல் பொருட்குவிக்கக்கூடிய ராஜ்யத்தின் முன் ஜெர்மனி வரமுடியுமா? நாலாபக்கங்களிலும் சத்துருக்கள் சூழ்ந்திருக்கும்போது வெளிநாடுகளிலிருந்து ஸாமான்கள் அதனுள் யுத்தத்திற்கு அனுகுணமாய்க் கொண்டுபோக முடியுமா? அநேகமான பொருட் குவியல்கள் உள்ளிருந்தபோதினும் அவை எத்தனை காலந்தான் தாங்கி நிற்கும்? தற்காலம் ஜெர்மனியின் சாமக்ரிகைகள் குறைந்து வருகின்றன என்று கேள்விப்பட்டு வருகிறதே இதற்கு ஒரு அத்தாட்சி.

இங்கிலாந்தின் விஷயத்திலோ இப்படியல்ல. உலகமுழுதும் அதன் குடியேற்ற நாடுகளும் மற்று இந்தியா போன்ற ஆதீன நாடுகளும் இருக்கின்றன. மற்றும் அதற்கு அனுகூலமாய் உதவிசெய்ய வரும் நாடுகளும் பல இருக்கின்றன ஜெர்மனியில் வயல்களில் வேலை செய்து பயிரிட்டு தானிய அறுவடை செய்ய பல்லாயிர ஜனங்கள் வேலைசெய்து வருகிறார்கள் என்று சொல்லப்பட்டு வந்தன. அதுவும் தவிர, அவ்விடத்து தொழிற்சாலைகளில் லக்ஷக்கணக்கான தொழிலாளிகள் உழைத்து கணக்கற்ற யுத்தாயுதங்களையும் செய்து முடிக்கிறார்கள் என்று செய்திவருகின்றது. இதனாலேயே ஜெர்மானியர் எவ்வளவு பொருளைத் தம்தேசத்தின் நன்மைக்காக (தீமைக்காகவேதானோ!) செலவழிக்கிறார்கள் என்பதும் அப்பொருள்களை உபயோகப்படுத்துவதில் எவ்வளவு சூக்ஷ்மபுத்தியுடைய சாஸ்திர விற்பன்னர்கள் முயன்றிருக்கிறார்கள் என்பதும் வெளியாகும். அவர்கள் கட்டிமுடிக்கும் விநோதமான ஸெப்ளின் ஆகாய விமானங்களும் 'அவைகளிலிருந்து அழகிய நகரங்களுக்கு யமனைப்போல் வந்து குதிக்கும் வெடிகுண்டுகளும், பெரும் கோட்டைகளையும் க்ஷணநேரத்தில் நாசஞ்செய்து தவிடுபொடியாக்கும் யந்திர பீரங்கிகளும், அவர்கள் நாட்டு ஆண்மையையும் புத்திசூக்ஷ்மத்தையும் மாத்திரமே காட்டுவதன்றி அவர்கள் ஏராளமாய்ச் செலவழிக்கும் பொருட் செல்வத்தையும் குறிப்பிடுகின்றது. அவர்கள் நாட்டின் மீது ஒருவரும் படையெடுத்து வாராவண்ணம் அவர்கள் செய்துள்ள பல உபாயங்களும் கடற்படைகளை விருத்தியாக்கி கடலில் உண்டாக்கும் பெரும் சேதங்களும் ஜெர்மானியரது திறமையைப் பற்றியும் அவர்கள் முன்ஜாக்கிரதையைப் பற்றியும் எல்லோரும் வியக்கக்கூடிய வண்ணம் செய்துவிடுகின்றது. "ஆகவே அதற்கேற்ப, இக்கொடிய சத்துருக்கள்—ஜெர்மானியர் அல்ல—பலவித கொடிய யுத்தாயுதங்கள், ஸெப்ளின் ஆகாயக்கப்பல்கள், பெரும் க்ருப் பீரங்கிகள், கொடிய கடற்சுரங்கங்கள், ஸப்மெரீன்கள், வெடிகுண்டுகள்—இவைகளைச் செய்தற்குரிய பொருட்பேறுகள் வேருடன் அழியும்படியான வழியைநாட வேண்டும். நாம் எஸன் (யுத்தாயுதத் தொழிற்சாலையிருக்கும் பட்டணம்) தொழிற்சாலைகளுக்குப் பின்வாங்காமலிருக்க வேண்டும். கூடிய சீக்கிரத்தில் அந்நகரம் சென்று அத்தொழிற்சாலைகளை என்றைக்கும் தெரியாதபடி நாசஞ் செய்யவேண்டும். வெஸ்ட்பேலியா (Westphalia) வைத் தவிர பெர்லின் முக்யமான குறியல்ல இந்த மேலமர்க்களத்தில். இப்பொருட்போரில் அதாவது இந்த மேல் ஐரோப்பிய நாடுகளின் யுத்தத்தில் கைத்தொழிற் கிருப்பிடத்தையே தவிர ராஜதானியின் மீது பகைகொண்டு படைகளைச் செலுத்தல் நன்றன்று" என்று ஓராங்கில கனவான் கூறியிருக்கின்றனர். ஆகையால் தற்கால நாகரிகப் போக்கைமாற்றி மானிட அறிவை

(இதன் தொடர்ச்சி 292-ம பக்கம்.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### ஆத்திசூடி விளக்கம்

### 47. சீர்மை மறவேல்

சிறப்பை மறவாதே என்பது இதன்பொருள். சிறப்பு அல்லது சீர்மை என்ற சொல்லுக்கு சிறப்புதரக்கூடிய நடவடிக்கைகள் என்றாவது தன்னிடமிருக்கும் சிறப்பு என்றாவது பொருள் கொள்ளலாம். இதனால் சிறப்பு உண்டாக்கக்கூடிய காரியங்களை மறவாதிருந்து அவைகளை நடத்தி சிறப்புபெறத் தயாராகவிருக்க வேண்டும் என்றும், நமக்கு எவ்வளவு தாழ்ந்த நிலைவந்தாலும் மனம் அழியாதும், உயர்ந்த நிலைவந்தாலும் முழுகிமயங்கி விடாமலும், நமது சிறப்பை மறவாதிருந்து அதற்கேற்ப நடந்துகொண்டு அமைதியாக இருக்கவேண்டுமென்றும் இந்தஸூத்திரம் இருவகையாகப் பொருள்படும் என்பது விளங்கும். இப்படிப்பட்ட இருவகைப் பொருள்கள் பின்வருமாறு மூன்றுவிதமாகப் பிரிந்துநிற்கும்.

சிறப்பான காரியங்களை மறவாதிரு:—சிறப்புதரக்கூடிய காரியங்கள் இருவகைப்படும். அவையாவன லௌகிக சீர்மையாகிய சீர், சிறப்பு, புகழ், செல்வாக்கு, பணக்காரநிலை முதலியவை அடங்கியதும், வைதிகச் சீர்மையாகிய சித்தசுத்தி அமைதி முதலிய ஆத்மகுணங்கள் அடங்கியதுமே. இவை இரண்டின் ஸன்மார்க்கத்தில் பழகிவருபவன் முதலில் லௌகிகச் சீர்மையை மறவாது நடந்துகொண்டுவரவேண்டும் இடையிடையே வைதிகச் சீர்மையின் தன்மையையும் ஆராய்ந்து உணர்ந்துகொண்டு வரவேண்டும். இப்படிச் செய்துவந்தால் வைதிகச்சீர்மையின் ஏற்றம் விளங்கி அதில் பற்று ஏற்படத் தொடங்கும். சிற்சில ஸமயங்களில் இரண்டு சீர்மைக்கும் பொருந்தா தர்மஸங்கட நிலைகள் வர அவைகளில் வைதிகச் சீர்மையை மறவாது நடக்கவேண்டிய திடம் அப்யாஸம் முதலியன ஏற்பட இடம் உண்டாகும். இப்படிச் சிறப்புடைய காரியங்களை மறவாது முயலுங்கால் லௌகிகச் சிறப்பிலிருந்து வைதிகச் சிறப்பிற்குள் விருத்தியாகி நிலைத்துவிட முயலவேண்டும் என்பது இந்த ஸூத்திரத்தில் அடங்கிய கருத்து. இந்த மாதிரியான அபிவிருத்தி மனோநிலையிலிருந்துதான் த்ருவர் போன்றவரும் கோபிகைகள் போன்றவர்களும் முதலில் காம்யமாக தமது லௌகிக ஸுகச் சிறப்புகளைப் பெரிதாக எண்ணி பகவானை அணுகி பக்திசெய்யப் புகுந்தாராயினும் அது முதிரமுதிர அவர்களுக்கு நிஷ்காம்யமான வைதிகச் சிறப்பைப்பற்றி மறவாதிருக்கும் நிலைவந்துவிட்டது. த்ருவர் பகவானைக் கண்டதும் பரமபதம் வேண்டுமென்றார். கோபிகைகள் பகவானது பிரிவில் அவரிடமே தீவ்ரமான மனப்போக்குடையவராகி பின்னர் உத்தவரால் கொண்டாடப்பட்டனர். ஆகவே சிறப்புத்தரக்கூடிய ஒழுங்குக்கு விரோதமில்லாத காரியத்தை மனதார மறவாதிருந்தால் அவைகளில முயற்சி உண்டாகி மேல்படிகளில் போகும் திறன் நமக்கு உண்டாகும்.

(2) பிறவிச் சிறப்பை மறவாதிரு:—மானிடப் பிறவிக்கே ஒரு சிறப்பு உண்டு. அதற்குப் பகுத்தறிவென்று பெயர். இதனோடு தன்னையே உணரும் தன்மையும், தனக்கு வேண்டியவைகளை வகுத்து உணரும் தன்மையும் உண்டு. முற்கூறிய பகுத்தறிவை இவ்விரண்டிலும் செலுத்தும் திறன் மனிதனுக்கு மாத்திரந்தான்; மற்றைய பிராணிகளுக்கு இல்லை என்றே கூறிவிடலாம். நமக்குத் தேவையான வஸ்துக்களிலே மனதைச் செலவிட்டு வாணிபம் பொருள் தேடுதல் முதலிய லௌகிக வழிகளில் பகுத்தறிவை செலவிட்டால் சிக்கிரத்தில் பகுத்தறிவு தாழ்ந்துபோய் அந்தச் சிறப்பையும் மறந்துவிடும்படியான கொடியநிலையும் நமக்கு வந்து ஆபத்திற்கு இடனாகும். தற்காலத்தில் நடைபெற்றுவரும் ஐரோப்பிய மஹாயுத்தமே இதற்குத்தகுந்த திருஷ்டாந்தம். தற்காலத்தில் சீர்மை ம[illegible]தால் ஓங்கிவரும் நாகரிகத்தின் ஒழுங்கான முடிவு இதுதான். இப்படிப் பகுத்தறிவைச் செலுத்[illegible]து, மானிடர்களுக்கு தமது ஜீவனகாலம் வரையில் வேண்டுவது கொஞ்சம்தான்: அதுவும் அதிக[illegible]க

---

(291-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஸரியானவழியில் செலுத்தி எங்கும் ஒருவருக்கொருவர்சண்டை சச்சரவு செய்யாமல் தங்கள் பொருட்பேற்றை பெருமையுடன்போற்றி நல்வழிகளில் விநியோகப் படுத்தும்படியாய் அருள் செய்யும்படி பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

இல்லை: ஆதலால் எல்லோரும் ஸுகமாக எவ்வளவு குறைவான அளவில் ஜீவிக்க முடியுமோ அப்படி ஜீவிக்கவேண்டியதில் மாத்திரம் பகுத்தறிவைப் பாவவிட்டு, பின்னர் இப்படி ஜீவிப்பதில் ஸுகம் தருவதற்கு ஆதாரமாக உள்ள சீர்மை எது என்பதை அறிந்து அமர்ந்திருக்கத்தான் நமக்குப் பகுத்தறிவாகிய சீர்மை வந்தமர்ந்துள்ளது, ஈசன் கருணையால், என்றுணர்ந்து அதைமறவாது ஆராய்ந்து பழகித்தெளிந்து நம துஸநாதனதர்மத்திற் கூறியபடி, வந்தால் உண்மையான ஸுகமும் அபிவிருத்தியும் உண்டாகும். இப்படிப்பட்ட பிறவிச்சீர்மையை மறவாதிரு என்பதும் இச்சூத்திரத்தில் அடக்கம். வைதிகமதத்துள் வந்தால் பிறவிச்சீர்மைக்கு சிறந்த வேறு ஒரு பொருளும் உண்டு. இந்த நமது மதத்தில் பிறவிச்சீர்மையை மறவாதிருந்து பகுத்தறிவின் சிறப்பு ஓங்கிவர வர்ணாச்ரமாதிகள் ஏற்பட்டுள. இவைகளுக்குப் பொதுவாக நடை ஒழுக்குகளான தர்மகர்மங்கள் உள. இவைகளைப்போல பகுத்தறிவை லௌகிக விஷயங்களிலிருந்து ஸுகாதாரத்தில் திருப்பும் வேறு ஒழுங்கு உலகில் மானிடர்களிடம் இல்லவே இல்லை. இப்படிப்பட்ட நான்கு வர்ணத்துள் சீர்மை ஓங்கக்கூடிய கர்மாக்களை உள்ளபடி நடத்தக்கூடிய பிறவியை அடைந்தவர் அந்த சீர்மையை மறவாது அந்த கர்மாக்களின் தன்மைகளையும், அவைகளை நடத்தும் விதங்களையும் உணர்ந்து ஸரிவர அவைகளை அனுஷ்டிப்பதே பிறவிச்சீர்மையை மறவாதிருப்பதாகும். மேலும் இவ்வருணங்களுள் பிராஹ்மண வர்ணப் பிறப்பு மிகச் சிறந்தது. இதன் சீர்மையை மறந்ததால்தான் தத்காலத்து பிராஹ்மணர்கள், 'புலி பசித்தாலும் புல்லைத்தின்னுமா' என்று சீர்மை மறவாதிருப்பதை விட்டு, கண்டவிடங்களில் தின்னுவது, கண்ட நடைஉடை பாவனைகளைப் பின்பற்றுவது, கண்டதொழில்களை கைக்கொள்வது, கண்டவருடன் போட்டிபோடுவது, தம்கர்மம் விடுவது ஆகிய இவைகளைச் செய்து பிறர் த்வேஷத்திற் காளாகிவிட்டனர். நம் பாரதகண்டத்தில் ப்ராஹ்மணர் மாத்திரம் பிறவிச்சீர்மை மறவாது நடப்பாராயின், உலகத்திற்கே அதனால் ஒருவிதத்தில் க்ஷேமமே பிறக்கும். தத்காலத்திய நாகரிகத்தில் மோத்துண்டு பலவிதமாகத் திண்டாடும் வெளிநாட்டார் எல்லோரும் வைதிகவர்ணாச்ரம தர்மம் விவாகதர்மம் முதலிய இவைகளைக் கண்டு மலைத்து ஈடுபட்டுக்கொண்டு வருகையில், நம் நாட்டு ப்ராஹ்மணர் மாத்திரம் உயர்நிலை மயக்கத்தால் நமது வைதிகவர்ணாச்ரம விவாஹாதி தர்மங்களை, தமது சீர்மை மறந்து, பழித்து அழிக்கத் தொடங்குகின்றனரே என்ன காலக்கொடுமை இது! அவர்களிடம் சீர்மை மறவேல் என்ற ஸூத்திரத்தைத்தான் கூறி, அடிக்கடி அவர்கள் நிலையை நினைப்பூட்டவேண்டும். இக்குழப்ப காலத்தில் வேறு ஒன்றும் செய்யமுடியாது. இந்தஸூத்திரத்திலுள்ள மறவேல் என்ற சொல் கவனிக்கத்தக்கது. சீர்மை குலையக்கூடிய காலத்தில் மறவாதிருக்கவேண்டுமே ஒழிய எப்பொழுதும் சீர்மையை நினைத்துக்கொண்டிருக்கலாகாது. அப்படிச்செய்தால் வீண்கர்வமும் இறுமாப்புமாகத்தான் முடியும்.

(3) இயற்கைச்சீர்மை மறவேல்:—முற்கூறியபடி பிறவிச்சீர்மையில் பழகி வந்தால் நமக்குத் தேவையானவைகளைக் குறைத்து பொதுவாக எல்லோரும் ஸுகித்திருக்க இடம்தர, ஒழுங்காக ஜீவனம் செய்து பலஸுகிகளுக்கு இடையில் நாமும் மனுஷ்ய யத்னத்தில் ஸுகியாக மனச்சஞ்சலமின்றி இருக்கும் நிலை வரும். இப்படி இருப்பினும், இந்த ஸுகத்திற்கும் நமது முயற்சி இல்லாமலே இடையூறும் வரலாம், அல்லது உதவிகள்வந்து ஏற்றமும் வரலாம். அப்பொழுது இந்த ஸுகதுக்க உணர்வு நம்முள்ளேயே இருப்பதாக வெளியாகி இதன் ஆதார ஆராய்ச்சி ஸரிவரத் தொடங்கி நிகழ இடம் உண்டாகும் இந்த ஸமயத்தில் வர்ணாச்ரமாதி தர்மங்களும் மிகுந்த உதவியாக இருந்து வைதிகமத ஞானத்தை உண்டாக்கி திடப்படுத்தி, மனிதனுள்ளும் எங்கும்பரவியுள்ள ஞானானந்தப்பொருள் விளக்கம் ஏற்பட்டு உள்ளபடி ஸுகதுக்க அதீதப்பொருள்தான் எல்லாம் என்ற இயற்கை பொருட்சிறப்பு வெளியாகும்: இந்த இயற்கைச் சிறப்பை மறவாதிரு என்கிறது இந்த ஸூத்திரம், இந்நிலையை அணுகித்தேறும் ப்ராஹ்மணனை நோக்கி. அதாவது, காரியத்தில் இந்த அத்வைத பாவனையைக் கொண்டுவரமுடியாதாயினும் எப்பொழுதும் பாவனையில் அத்வைதமாகவே இரு என்ற ஞானி நடத்தைக்கு

ஏற்பட்ட வைதிக ஒழுக்குதான் இந்த ஸூத்திரத்தின் பொருள்: அதாவது வைதிக அத்வைதப் பொருளே தான், தான் வேறல்ல, என்ற உணர்வைத் தாங்கி ஒழுங்கு தவறாது நிற்பதற்கு வேண்டிய பிறவிச்சீர்மையை மறவாதிருந்து வைதிக தர்மப்படி ஒழுகி இந்தப் பழக்க விசேஷத்தால் வைதிக முடிவை அனுகிப் பிடித்து அதையும் மறவாது உலகில் ஒழுகி வந்தால்தான் முற்றிலும் சீர்மை மறவாது ஒழுகினதாகும். இல்லாவிடில் பெரும்பாலும் சீர்மைமறந்து ஒழுகி நிலை குலைந்தோ அல்லது சீர்மை நினைந்து ஒழுகி கர்வம் முதலிய மனக்கொதிப்புள் அகப்பட்டோ தத்தளிப்பதாயும் இடை இடையே சில ஸமயம் மறவாதிருந்த அலங்கோல நிலையும்தான் ஏற்பட இடமுண்டு.

ஆகவே சீர்மை மறவாமை என்பது கத்தி முனை மயிர்ப் பாலம்போன்ற நுட்ப வழி. சற்றுப்பிசகினால் முற்கூறிய இருபுற அபாய நிலையில்தான் விழவேண்டி வரும். இதில் ஸரிவர இயற்கையிலே நடக்க வல்லவன் இங்கு விஸ்தரிக்கப்பட்ட இயற்கைச் சிறப்பை அடைந்த முக்தன் ஒருவனே ஆகவே இவன் நடத்தைவிஷயத்தில் இந்த ஸூத்திரம் முற்றிலும் பொருத்த முடையது. இவன் ஒருவன்தான் இந்த ஸூத்திரப்படி அணுகூடப் பிசகாது நடந்தவனவன். நாம் எல்லோரும் முற்கூறிய பொருள்களில் நமக்குத் தகுந்தவைகளைப் பின்பற்றி நாளடைவில் நிஜவைராக்யம் உண்மை உணர்வு ஆகிய இந்த மஹானது நிலையை அடைய முயல்வோமாக.

---

√போர்முனையில் வெளிச்சங் கொடுத்தல்.— ஈஸர் கால்வாயண்டையில் இரவில் போர் புரியும்பொழுது தங்களுடைய ஸோல்ஜர்களுக்கு வெளிச்சங் கொடுப்பதற்காக ஒருவகை வாணத்தை ஜெர்மானியர்கள் உபயோகிக்கின்றனர். அந்த வாணம் பந்து போல் உருண்டை வடிவமாயிருக்கிறது. அதை ஆகாயத்தே தூக்கியெறிந்தால், உயரப் போகப்போக அதன் வெளிச்சம் அதிகரிக்கிறது. பின்பு, அது கீழே விழும்பொழுது, திடீரென விழாமல், மெதுவாக சக்ராகாரமாய்ச் சுற்றிக்கொண்டே வருகிறது. மேலும், அதன் வெளிச்சம் கீழேயுள்ள கால்வாயின் ஜலத்தில் பிரதிபலிக்க இன்னும் பிரகாசமாயிருக்கிறது. அதன் வெளிச்சம் 300-கஜதூரம் நாலு பக்கத்திலும் வீசுகிறது.

## உபநிஷத் ரத்னமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

### 47-ஸுபல உபநிஷத் (30)

ஆதியிலுள்ளது எது என்று ரெய்க்வர் கேட்க பகவான் விடை கூறுவார்:—ஆதியில் ஸத் (ப்ருதிவி அப்புதேயு) அஸத்(வாயு ஆகாயம்) இவைகளின் இன்மை(காரணநிலை) இருந்தது. இதிலிருந்து தமஸ் உண்டாயிற்று. இதிலிருந்தே பூதாதிகளும் முறையே ஆகாயம் முதல் ப்ருதிவி ஈறாகவுள்ள பஞ்சபூதங்களும் வெளிப்பட்டன ஒரு தேவவருஷத்தின் பின்னர் இவைகள் தாமிருந்த அண்டரூபத்திலிருந்து இரண்டாகப் பிரிந்தன. இடையில் அநேகம் சாலாதிகளுடைய அகண்ட புருஷனுடன்கூடிய மேலாகாயமாகவும் கீழ்ப்பூமிபாகவும், இதன்முன் பூதங்களிலிருந்து ம்ருத்யு உண்டாக்கப்பட்டான். இவன் புருஷனாகிய ப்ரஹ்மாவுள் புகுந்து அவரிடமிருந்து ஏழு புத்திரர்களையும் ஏழுப்ராஜாபதிகளையும் உண்டாக்கினான். ப்ராஹ்மணாதி வருணத்தவர்கள் அவரது முகாதி அங்கங்களிலிருந்து வெளிப்பட்டார். சந்திரன், ஸூரியன், வாயு, பிராணன் ஆகிய இவைகள் அவர் மனம், கண், காது, ஹ்ருதயம் இவைகளிலிருந்து உண்டாயின. இவ்வாறு எல்லாம் வெளிப்பட்டன. அவர் அபானத்திலிருந்து நிஷாதாதி ஜாதிகளும், எலும்புகளிலிருந்து மலைகளும், ரோமங்களிலிருந்து, மரம், செடி, கொடிகளும், நெற்றியிலிருந்து கோபத்தால் ருத்ரரும், மூச்சுக்காற்றிலிருந்து 4 வேதங்கள் 6 வேதாங்கங்களும், மூன்று தர்சனங்களும், வ்யாக்யானங்களும் உண்டாயின. எல்லாம் இந்தப் புருஷனுள்ளேதான் அடக்கம்; அது தன்னையே இருகூறாக்கி ஒன்றிலிருந்து பெண்ணையும் மற்றதிலிருந்து ஆணையும் வெளிப்படுத்தியது. இவை, தேவதைகளாகி தேவர்களையும், ருஷிகளாகி ருஷிகளையும் இவ்வாறே யக்ஷராக்ஷஸகந்தருவர்கள், காட்டு நாட்டு மிருகாதிகளையும் உண்டாக்கியது: பூமியாயும், ஆதாரமாயும் ஆயது, ப்ரளயத் தொடக்கத்தில் முறையே பின் ஒழுங்காய் எல்லாம் ஒடுங்கி ஸத் அஸத்தின்மை நிலையை அடையும் எல்லாம்.

முதலில் அஸத்(ஸர்வ தன்மையுமற்றது) இருந்தது, ஆத்ம ஸ்வரூபத்தின் தன்மை யுணரா[illegible]வுக்கு தக்கமேயிராது. அந்த ஆத்மாவுடன் ஒருவித குணமும் இல்லை; அது நிர்குணம். சிலர்தான் இதை ஸத்ய,

தான, தபஸ், அஹிம்ஸை, ப்ரஹ்மசரியம், அநாசகம் (நிஷ்காம்ய கர்மம்) இவைகளால் அதை அணுகுவார்க்கு வேறுவழியேயில்லை. அதை உணர்ந்தேன் என்ற அநுபவம் வந்தவன், மரணகாலத்தில் தேஹத்தை விட்டு வெளியேறாது அங்கே ப்ரஹ்மமாகிவிடுவன்.

ஹ்ருதய மத்தியில் சிவந்த சதைகண்ட முளது. அதில் தஹரபத்ம இருக்கிறது அநேகம் இதழுடன் இதற்குள் இருத்வாரம் உள. ப்ராணிகள் இங்குதான் நிலைபெற்றுள்ளன. ஆத்மா பிராணனுடன் சேர்ந்து உலாவுங்கால் பல உலக வஸ்துக்களைப் பார்க்கிறான். வியானனிடமிருந்து தேவ ருஷிகளையும், அபானனிடமிருந்து புவர்லோகத்தையும் உதானனிடமிருந்து ஸ்வர்காதிகளையும் ஸமானனிடமிருந்து குபேர லோகத்தையும், ரம்பா எனும் நாடியிலிருந்து எல்லாவற்றையும் காண்பன். இப்படிப்பட்ட ஹ்ருதய தஹ்ர ஆசாயத்தில் ஆத்மா எவ்விதப் பற்றுமற்று நிற்கும் ஸுஷுப்தியில், நாடிகள்வழி பாக அங்குசென்று, போன வழியே விழிப்பில் திரும்பிவிடும் முன்னிலைக்கும்.

| அத்யாத்மம் | அதிபூதம் | அதிதெய்வம் |
|---|---|---|
| கண் | ரூபம் | ஸூர்யன் |
| காது | சப்தம் | திக்கு |
| மூக்கு | கந்தம் | ப்ருதிவி |
| நாக்கு | ரஸம் | வருணன் |
| தோல் | ஸ்பர்சம் | வாயு |
| வாக்கு | பேச்சு | அக்னி |
| பாணி | பிடிப்பு | இந்திரன் |
| பாதம் | நடப்பது | உபேந்த்ரன் |
| பாயு | வெளிஒழிப்பன | ம்ருத்யு |
| உபஸ்தம் | வெளிவிடுவது | ப்ரஜாபதி |
| மனஸ் | எண்ணம் | சந்திரன் |
| புத்தி | நிர்ணயம் | ப்ரஹ்மா |
| அஹங்காரம் | அகம்பாவம் | ருத்ரன் |
| சித்தம் | தொடர்எண்ணம் | க்ஷேத்ரஞ்ஞன் |

நாடிகள்தான் இவைகளைப் பொருத்துவது. இங்கு காட்டப்படும் மூவகையுடைய ஒவ்வொன்றிலும் நாடி, ப்ராணன், விஞ்ஞானம், ஆனந்தம், ஹ்ருதயாகாசம் மற்றவைகள் எல்லாவற்றிலும்ஊடுருவிப்பாவிநிற்பது தான் ஆத்மா, இதைத்தான் வழிபடவேண்டும். இது ஜரை மரணம், பயம், துக்கம், லயமற்றது. இதுவேதான் ஐந்து கோசங்களிலும் பூதாத்மா, இந்திரியாத்மா ஸங்கல்பாத்மா, காலாத்மா, லயாத்மாக்களாகவும் இருப்பது. இதுதான் ஸர்வகுண ரஹிதமான நிர்குணம்.

ஆதியில் நாராயணன் தவிர வேறொன்று மில்லை. முற்கூறிய 14 வஸ்துக்களும், அதன் பிரிவுகளும், தேவதைகள், நாடிகள் வாயுக்கள், கால விசித்ரங்கள் முதலிய எல்லாம் நாராயணனே. இந்த நாராயணரையே தடையின்றி ப்ராஹ்மணர்கள் கண்டு துதிப்பர். (இங்கு அத்யாத்ம உபநிஷத் முதல்பாகம் காணப்படுகிறது) ஆத்மா தேஹ குஹையில் உள்ளது: அதைச் சுற்றியுள்ள விசித்ரங்களை எல்லாம் நீக்கிஅதின் உண்மையான அஹங்காரமில்லாமை உணர்ந்தவனே ஞானி.

'எல்லாம் எதில் ஒடுங்கும்? எவ்வாறு?' என்றரைக்வர் கேட்க பகவான் சொல்லுகிறார்:—முன்னர் கூறிய 14 தத்துவங்களும் முறையே தமது அதிபூத, அதிதெய்வங்களில் ஒடுங்கி அவைகளேயாம்; பின்னர் முறையே அவை விராட், ஸுதர்சனம், ஜயம், ஸௌம்யம், மோகம், குமாரன், அமிருதம், ஸத்யம், மது, நாஸீனம், சிசு, கிருஷ்ணம், அஸுரம், பாஸவதி இவைகளில் ஒடுங்கி இவைகளேயாய், பின்னர் ப்ராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன், வைர்யம், முக்கிய ப்ராணன், ச்வாஸநிரோதம் சண்டமாருதம், கூர்மிரம், ச்யேனம், ஸூர்யன், ச்வேதம், நாகன், ஆகிய இவைகளில் ஒடுங்கி இவைகளேயாகி முடிவில் எல்லாம் விஞ்ஞானம், ஆனந்தம், துரியம் இவைகளேயாகி துரீயத்தில் மறைந்தே போய்விடும். இந்த மரணம், பயம் துக்கம் முடிவு, முதல், இவைகள் அற்றதை அடைவாயாக. இதை இவ்வாறு உணர்பவனும் தன்னிலையடைவன். இவனுக்கு ஒருவித பாதகமும் ஏற்படாது. கோபம் கூட இவனிடம் அணுகாது. இப்படிப்பட்ட ஆத்மா பலதரம் கேள்வி, சாஸ்திரபடனம், நுட்பஉணர்வு, பலசொற்கள், விவேகத்தெளிவு, வேதப்பழக்கம், தவம், ஸாங்கியம், யோகம், வர்ணாச்ரமப்பற்று, மற்றுமுள்ளவழிகள் தனித்தனியாக இவைகளால்மாத்திரம் கைகூடாது. சிரத்தையுடன் ப்ராஹ்மணர்கள் ஒழுங்குப்படி வேதாத்யயனம்பண்ணி அவனைத் துதித்தே அடைவர் அவனை. அமைவு, அடக்க வைராக்யம், ஆத்மாவில் நிலைப்பு இவைகளுடையவனே எல்லாவற்றிலுமுள்ள ஸாரமான ஆத்மாவுடன் ஒன்றுபடுவோன்: அப்படியேமுற்கூறிய லய ஒழுங்கை உள்ளபடிஉணருபவனும் அடைவன். பின்னர் எல்லாம் ரஸாதலத்திலும் அதுமுறையே மேல்மேலான தலங்களை லோகங்களையும் பொருத்து நின்று ப்ரஜாபதி பிரஹ்ம, சர்வலோகங்களைப் பொருத்துநின்று ஆத்மாவையே ஆதாரமாக உடையன என்றுகாட்டப்படுகிறது. ஜீவன் தேஹத்தை விடுங்கால் ஏற்படும் கதிகள் கூறப்படுகிறது. ஹ்ருதயத்தில்நான்குநாடிகளுள. அவையாவன: ரமா, அரமா, இச்சா, புனர்பாவம் என்பவைகளே. ரமா புண்யலோக மார்க்கம், அரமா நரகமார்க்கம், இச்சா, இஷ்டா பூர்த்திமார்க்கம், புனர்பாவம்தான் தெய்வயான மார்க்கம் எனப்படுவது. இது ஒருவனை மோக்ஷத்திலே கொண்டு சேர்த்துவிடும்.

அன்னம் எல்லாம் நாராயணனே ஆதலால் ஒருவன் கிட்டினதை திருப்தியுடன் அனுபவிக்க வேண்டும், ஆசைப்பட்டு இதற்காக பிச்சையே எடுத்துக் கொண்டிருக்கலாகாது. ஞானி சிசுவைப் போல தனிமையாயும் குற்றமில்லாதவனுயும், மௌனமாயும், அறிவுடனும், அதிகார தோரணையை ஏற்காமலும் இருத்தல் வேண்டும். பரமபதத்தில் நிலைத்து, துணி முதலியவைகளைக் கவனியாது மாத்தடியில் ஸமாதியிலேயே மூழ்கிவிடவேண்டும். ஆத்மாவிலேயே ப்ரியத்துடன் ஆசையற்று நின்றுவிடவேண்டும், பயவஸ்துக்கள் அவனைச்சூழ்ந்திருப்பினும்

நிர்பயனாக இருக்கவேண்டும். எவ்வித ஆபத்தவந்தாலும் மரம், தாமரை, ஆகாசம் இவைகள்போலத் தாக்கற்றிருக்கவேண்டும்.

பஞ்சபூதங்கள் அவ்யக்தம் மிருத்யு இவைகளில் ஒவ்வொரு தன்மை உண்டு: மிருத்யுதான் முடிவானது. இவைகளில் முறையே முன்னது பின்வருவதன் விஷயமாகிவிடும். எல்லாம் மிருத்யுவிலடக்கம். விஞ்ஞானகனான ஞானி தேஹம் விட்டால் எல்லா தத்துவங்களையும் எரித்து அடக்கி ஸதஸத்தமில்லா வஸ்துவாக மிஞ்சிவிடுவன். இந்த ஸுபல பீஜ ப்ராஹ்மண உபநிஷத்தை கண்டவர்களுக்கு வெளியிடலாகாது. வைதிக ஒழுக்கு உடையவர் இதைக்கேட்டால்தான் உண்மை உள்ளபடி விளங்கும்.

## (48) தாரஸார உபநிஷத் (91)

இங்குமுதலில் ஜாபால உபநிஷத்துப்போல் தொடங்கப்படுகிறது குருக்ஷேத்ர ரகஸ்யம். பின்னர் பரத்வாஜருக்கு யாஞ்ஞவல்கியர் ஓம் நமோ நாராயணாய என்பதுதான் தாரகமந்திரம் (ஸம்ஸாரத்தி லிருந்து கரையேற்றுவது) என்று உபதேசிக்கிறார். ஓமிலிருந்து ப்ராஹ்மா; ந, விஷ்ணு; மோ, ருத்ரன்; நா, ஈச்வரன்; ரா, அண்டவிராட்; ய, புருஷன்; பகவான்: யா பரமாத்மா; ஆகிய இவர் உண்டாவர். இந்த அஷ்டாக்ஷரமே பரம புருஷன்; ஓம் ஆத்மா, நம: ப்ரகிருதி, நாராயணாய பரப்ராஹ்மம் இதுதான் ரிக்வேதமாகிய முதல் பாதஸ்வரூபம்.

ஓம் ஒன்றே எட்டு பாதங்களை அடக்கியுள்ளது அ, உ, ம், பிந்து கலை கலாதீதம் ஸர்வாதீதம் ஆகிய இவைதான்—இதுதான் தாரகம், இதை ப்ராஹ்மமாகவே வழிபடவேண்டும். அ விலிருந்து ஜாம்பவனாகிய பிரஹ்மா; உ ஹரியாகிய உபேந்திரன்; ம், ஹனுமானாகிய சிவன்; பிந்து சத்ருக்னனான ஈச்வரன்! நாதம், பரதனாகிய ப்ரபு; கலை, புருஷனாகிய லக்ஷ்மணன்; கலாதீதத்திலிருந்து ஸீதை; ஸர்வாதீதத்திலிருந்து பாமாத்மாவாகிய ராமன்; இந்த ஓமேதான் எல்லாம். இதுதான் யஜுர்வேதமாகிய இரண்டாம் பாதஸ்வரூபம்.

எப்படி பரமாத்மா திருப்திப்பட்டு பக்தர்களுக்கு விளங்குவர் என்ற கேள்விக்கு பதில் சொல்லப்படுகிறது. ஓம், யார் பரமாத்மாவாயும், நாராயணனாயும் முற்கூறிய எழுத்துக்களால் முற்கூறியபடி இருக்கிறாரோ அவரே பூ, புவ ஸுவாதிகளும், அவருக்கு நமஸ்காரம் என்று எட்டுதரம் மந்திரம் ஜபிக்கவேண்டும். இப்படி அஷ்டாக்ஷரம் ஜபிப்பதால் பரிசுத்தமடைவன்; ஸகல ஸத்காரிய பலனையும் பெறுவன், ஸகல ஜபபலனை அடைவன், பிதர்க்களை கரை ஏற்றுவன் நாராயணனே ஆகிவிடுவன், பரமபதத்தை நேரிடவே அனுபவிப்பன்.

———

# ரணகேஸரி அல்லது ராஜபக்தி

## RANAKESARI

### நாடக பாத்திரங்கள்

வீரமர்த்தனன்—பாண்டியநாட்டரசன்
கரிக்காலன்—சோழநாட்டரசன்
சேரன்—
ரணகேஸரி—பாண்டிய நாட்டு மந்திரி (நாடகத் தலைவன்)
தர்மநி—பாண்டியநாட்டில் ரணகேஸரிக்கு முன் மந்திரியாயிருந்தவன்.
நீலகண்ட சாஸ்திரி—பாண்டிய நாட்டு ஆஸ்தான வித்வான்
ஸுந்தரேசன்—ரணகேஸரியின் தோழன்.

குப்பனய்யங்கார், மஹாதேவராவ், சுப்பாசாஸ்திரி, ராமாதீக்ஷிதர் — பாண்டியநாட்டு மஹா ஜனங்கள்.
வாமேச பட்டர், ஸோமேசபட்டர் — சோழநாட்டு காளிகோவில் அர்ச்சகர்கள்.
தொந்திவீரன், பாவாடை, பல்லு சுந்தரம், வவுத்துப்பயல், சவட்டைக்காலன் — பாண்டிய நாட்டுக் குடிகள்.

அம்பாலிகை—வீரமர்த்தனன் மனைவி
விதூஷகன், நகரவாஸிகள் முதலாயினோர்.

## அங்கம் 1

### களம் 1

இடம்:—தெரு. காலம்:—மாலை.

சுப்பாசாஸ்திரி, குப்பனய்யங்கார், ராமாதீக்ஷிதர், மகாதேவராவ் பிரவேசிக்கிறார்கள்.

**மகாதேவ ராவ்.**—சாஸ்திரிகளே! பார்த்தீங்களா—நம் ராசா இருக்காங்களே அவன்கள் இத்தினி சீக்கிரத்திலே என்னமா மாறீட்டாங்கன்னு.

**சுப்பா சாஸ்திரி.**—ஆமான்னு எல்லாம் அவவனுக்கு வந்தாத்தானே தெரிகிறது. கேத்திக்கு வரையிலும் ஸுராபான கோஷ்டி—ஸதா ஸ்திரீகளின் ஸங்கம்—வேறென்ன? ராஜ்யம் எப்படிப் போனாலென்ன! இப்படியிருந்தது கதை. எதிரி வந்துவிட்டானுங்கவும் வந்தூடுத்து கவலை. ஓடேன். கவசத்தைப் போடேன். குதிரையிலே ஏறேன்! ஏக நடபிட v.

**ராமாதீக்ஷிதர்.**—என்னிக்கும் சீர் க்ருசானு * மாதிரி தோஷத்தைத்தானே சொல்லாது. எனக்கது பிடிக்காது. சண்டைக்குத்தான் புறப்பட்டாரே என்ன சௌரியம் காட்டினார்—என்ன தைரியம்! எந்த ராஜா அய்யா இப்படி யுத்தரங்கத்திலே முனையிலே நின்று சண்டைபோட்டவன்?—சொல்லுங்கோ ஐயா?

**குப்பனய்யங்கார்.**—அதெல்லாம் இல்லே இன்னு

யார் சொல்ரு? அதெல்லாம் ஸரி. இருந்தாலும் சேரன் சண்டைக்கு வரவரையிலே இந்த ராஜ்யத்தை இவர் சொஞ்சமாவது கவனித்தாரா? அதைபன்னு சுப்பா சாஸ்திரி சொன்னார்.

மகா.—என் அய்யா குளிப்பிள்ளைக்கு எடுத்த எளவு சொண்டாடரீங்கள். என்னமோ பால்யம், சொஞ்சம் விளையாடினார். மனிசனுக்குப் பட்டாத் தானே தெரியுது எல்லாம்.

ராமா.—பட்டாலும் பட்டார், நன்னுப் பட்டாரையா! என்ன தீரமாய் அவர் யுத்தம் செய்தும் முதலில் ஜயம் அடைய முடியவில்லை, எங்கேயோ போயிட்டு கூடனு வந்தாராம்.

மகா —ஆமய்பா! எங்கேயோ காணவே காணம். ஒரு நாக்களிச்சு மறுபடி ஒரு ஸேனையோடே வந்தாங்க அந்த ஸேனையைத்தான் நடத்தி வந்தானே அவன் மூஞ்சியைப் பார்த்தீங்களா? என்ன? ஞாபகமிருக்கிறதாங்கிறேன்.—என்ன கருப்பு? ஸரியா சனீசுவரன் கணக்குத்தானின்னு.

துப்ப.—ஆமய்பா என்ன வேடிக்கை! அடே ஸேனை வரப்போறதுன்னு யாருக்காவது தெரியுமா? வந்ததுதான் தெரியுமா? சண்டை போட்டது தான் தெரியுமா? என்னமோ ஸேனை வந்ததுன்னார்கள். சண்டையாரமிச்சு சேசாகள் இன்னு. சேரன் ஓட்டம் பிடிச்சானின்னு அவ்வளவுதான். அந்த ஸேனையையுங்காணோம். அந்த சனீசுவரனையுங் காணோம்.

ராமா.—ஆமய்யா, அப்ராக்ருதமாகத் தானிருந்தது. ரொம்ப ரொம்ப ஆச்சர்யமின்னு! அதென்ன மந்திரம் போட்டாப்போலத் தானிருந்தது. சேரன் ஸைந்யம் முதல் நாள் யுத்தம் பண்ணினதென்ன? மறுநாள் சண்டைகூடச் செப்பாமல் ஓடினதென்ன? இதென்ன வேடிக்கை?

சுப்பா.—அதானு அதிலே வேடிக்கை? ஒருவன் ஒரு ராஜாவுக்கு ஒத்தாசை செய்தால், பிறகு அவன் அரண்மனைக்கு வந்து விருந்து நடக்கிறது உண்டா இல்லையா! சண்டை செய்தார்கள். சத்ருக்களை காந்திசீகராய் ஓட்டினார்கள். அப்புறம் எங்கே என்று பார்த்தால் அவர்களையே காணோமே.

மகா.—நம்முடைய ராஜாவில் ஸேனை இருக்குதால்யா. அதிலே தளகர்த்தர் அய்யா—யாரு? ஹரிஹர தேவர்—அவர்கூடச்* சொன்னாராம், வந்த ஸேனை சோழராஜனுடைய ஆட்கள் என்று. அவன்கள் என்னமோ அந்தமாதிரி அடையாளம் வைச்சிருந்தாங்களாம்!

ராமா.—அதென்ன எழவும் பழுதையுமோ நமக்கொண்ணும் தெரியக்காணம். அது போறதுன்னு. அது முதல் நம்ம ராஜா எப்படியிருக்கார் பார்த்துவீர்களல்லவா?

சுப்பா.—ரொம்ப ஆச்சர்யம். இப்படி வேகமாக மாறுவார்களென்று நான் ஸ்வப்நத்திலும் எண்ணவில்லை. முதல்காரியம் தர்மதியை ராஜ்யத்திலிருந்து பஹிஷ்காரம் செய்தாரல்லவா? அவன் ப்ரதான மந்திரியாயிருந்து. விச்வாஸத்ரோஹம் செய்து தனக்கு இவ்வளவு கஷ்டத்தையுமுண்டுபண்ணினனென்று ஒரு நிமிஷத்தில் கண்டுகொண்டாரே

துப்ப —என்ன நீர்கூட ஸ்தோத்ரத்திற்கு ஆரம்பிச்சுட்டீர்! உங்களுக்குத் தோஷம்தானே தெரியும்.

சுப்பா.—நீர் ரொம்ப யோக்கியர் தானய்யா. இசாரய்யா உமக்குச் சொல்லிக் கொடுத்தது. இந்த ராமா தீக்ஷதரோ? அவருக்கென்ன தெரியும்: பிறத்தியாரை தோஷம் சொல்லத்தான் தெரியும்

ராமா —என்னய்யா வேடிக்கைக்குச் சொன்னு என்னமோ அஸாத்யமாக கோவித்துக் கொள்ளுகிறீர்களே-(சுப்பாசாஸ்திரிகள் முதுகில் தட்டிக் கொடுக்கிறார்.)

சுப்பா —பின்னே என்னய்யா வேடிக்கை. நீர் ஒருதரம் சொன்னீர், இந்த மூணு கொம்புப் பயல் மறுபடி சொன்னான். இவன் கண்டேட்டானேல்யோ தோஷத்தையும் குணத்தையும்.

துப்:—ஒய்-மேலே பேசாதேயுங்காணும் என்றேன். என்ன காணும் மேலே மேலே தவ்வரீர். கீறுத்தனமய்யா உம்ம கைவரிசையை. நான் ரொம்ப பார்த்திருக்கேனே ஹூ, ஹூ.

விதூஷகன்.—(ப்ரவேசித்து)சுப்பாசாஸ்திரிகளே வீண் வம்புக்கிழுக்காதேயுங்கள். நம்முடைய தர்மதி காலத்திலேயே ஜனங்களுக்குள்ளே கலகம் ஏற்படக்கூடாதென்று (மூன்று பேர்களுக்குமேல் கூடிப் பேசக்கூடாதென்று ரைபட் ஆக்ட (Riot act) பாஸ் Pass) செய்திருக்கார் தெரியாதா?

துப்ப.—ரையட் ஆக்டும் ஆச்சு —பாஸுமாச்சு—நான் என்ன சொன்னேன்?—என்னய்யா ப்ரமாசம்? இதுக்கு மூணு கொம்பப் பையலாம்—ரொம்ப கெட்டுப்போனாப்போலே யிருக்கு.

விதூ.—அய்யா சுப்பாசாஸ்திரிகளே—

சுப்பா —ஆமப்பா, நான் தான் சொல்றேனே அப்படித்தான் சொன்னேன் இன்னந்தான் சொல்ரேன் ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரண்டு கொம்பு—அய்யங்காருக்கு மூணு கொம்பு—இந்த மூட்டப்பூச்சிப் பயல் என்னய்யா பண்ணிப்பட்டது?

[குப்பணய்யங்கார் கோபத்துடன் கைவிரல்களை முஷ்டியா யிறுக்கிப்பிடித்து சுப்பா சாஸ்திரிகளையடிக்கப்போகிறார்.]

* க்ருசானு.—விசுவகுணாதர்சம் என்ற வடமொழி க்ரந்தத்தில் க்ருசானு விச்வாவஸு என்று இரண்டு கந்தர்வர்கள் உலக குணத்தை கண்டறியவேண்டி, தேசாடனம் செய்வதாகவைத்து, பலபல ப்ரதேசங்களின் தோஷங்களையும் குணங்களையும் அவ்விருவருக்கும் [illegible] மூலமாய் கவி வர்ணித்திருக்கிறார். அதில் க்ருசானுவின் கண்களுக்கு தோஷங்கள் [illegible] தென்பட்டதாகவும், விசுவாவஸுவிற்கு குணங்கள் மட்டும் தென்பட்டதாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

[விதூஷகன் தடுக்கிறான்.]

**விதூ.**—சுப்பா சாஸ்திரிகளே — உமக்கென்ன அய்யா இப்படிக் கோபம் வருகிறது. ஏன்—குப்பனய்யங்கார் முறச்சிக்கிண்டா—நீர் முன்னாலே நிற்பீரா?-என்னமோ மூன்று நாளைக்கொருதரம் ப்ராம்மணார்த்தம் கிடைக்கிறது. அந்த உளுந்து நெய்பலமிருக்கிறதூன்னு எண்ணீட்டீரோ? உமக்கு அதிசச் சாப்பாட்டிலே தொந்தி விழுந்து போச்சு. அவன்—குப்பனய்யங்கார் கோபிச்சுக்காதேயும் ஓய்-பெருமாள் கோவில் எண்ணெய்வழிகிற புளியோதரையும், நெய் வழிகிற வெண் பொங்கலையும் தின்னுப்பிட்டுக் கொழுத்துக் கிடக்கிறான். இந்தக் குத்து உம்ம தொந்தியிலே விழுந்திருந்தா—உம்ம தொந்திவடையெல்லாம், நேத்திக்குச் சாப்பிட்ட சாதமுள்பட சரிஞ்சு போயிருக்குமே ஓய்—சண்டை போடாதேயும்போம்.

**சுப்பா.**—பின்னே என்னய்யா—என்னை இப்படி குப்பனய்யங்கார் சொல்லலாமா?

**குப்ப.**—போனாப் போறது. இன்னிக்கு உம்மை விட்டேன். இனிமேல் ஆரம்பிச்சீரோ பார்த்துக்கும். மூளையை யுருஞ்சி விடுவேன்.

**விதூ.**—(சுப்பா சாஸ்திரியைத் தட்டிக்கொடுத்து) சும்மா இரும் ஐயா—சும்மா விருமையா எங்கிறேன்—குப்பனய்யங்கார், நீர்போய்விடும்—

(குப்பனய்யங்கார் போகிறார்.)

**மகா.**—இந்த எளவு சண்டை இன்னு வந்தூட்டா, எனக்கு பயமாயிருக்கிறது. எளவிலே நான் என்ன பண்றது.எங்கே ந்யாய ஸபைக்கு சாக்ஷிக்குப் போக வேண்டிவருமோ வென்று பயந்துக்கொண்டிருந்தேன் எளவு—தீக்ஷதரே—நானும் போய்வரேன்.

(மகாதேவராவ் நிஷ்க்ரமிக்கிறார்.)

**ராம.**—ஏனய்யா விதூஷகரே! அரண்மனையிலேதாவது விசேஷமுண்டோ?

**விதூ.**—ஆமா-உண்டு ராஜா என்னமோ யாகம் பண்ணப் போறாராம்.

**ராம.**—எப்போ ஐயா? என்ன யாகம்? நான் அத்வர்யுவாக இருந்து நடத்திவைப்பேனே—எனக்கு ச்ரௌதம்-மீமாம்ஸை- எல்லாம் வரும்; அச்வமேதாந்தம் பண்ணிவைப்பேன். ஐயா-உத்காதாவாகவாவது எனக்கு ஏற்பாடு செய்யவேணுமே.

**சுப்பா.**—சில யாகங்களிலே புராணங்கூட வாசிக்க வைக்கிறதுண்டு. அப்படியேதாவதுண்டோ ஐயா!

**விது.**—எல்லாம் உண்டு-சுந்தர காண்ட பாராயணம்.

**ராம.**—நீர்தான் ஐயா நமக்குக் கொஞ்சம் சிபார்சு செய்யணும்.

**சுப்பா.**—என்னை மறந்தூடுவீரோ?

**விதூ.**—தக்ஷிணை அபாரம்-தானங்கள் யதேஷ்டம் ஸமாராதனை, எல்லாம் நெய்தான், நல்லெண்ணெய்க் கலப்பே கிடையாது-லாடு, பேணி, ஹல்வா யதேஷ்டம்.

**ராமா.**—அது கிடக்குதையா! யாகத்திற்கு மொத்தத்தில் என்ன செலவாம்?

**சுப்பா.**—பாராயணம் கிடைக்காவிட்டாலும் சாப்பாடாவது எல்லாருக்குமுண்டோ கிடையாதோ?

**விதூ.**—சாப்பாடுமோனேஜ்மெண்டு எனக்குள்ளே. எல்லாம் டிக்கெட்டு-டிக்கெட்டிருந்தால்தான் உள்ளே வரலாம்.

**சுப்பா.**—தக்கடியா? அதென்ன அய்யா தக்கடி?

**விதூ.**—டிக்கெட்டு— சீட்டு ஐயா (Admit one) என்று எழுதியிருக்கும். அந்த சீட்டு உமக்குக்கொடுத்தால் நீர் மட்டுந்தான் வரலாம்-உம்ம பிள்ளையைக் கூட கூட்டிண்டு வாமுடியாது. தெரியுமா?

**சுப்பா.**—எனக்கு ரண்டு இக்கட்டையா சுந்தரகாண்டம் தக்ஷிணையில்லாமல் பாராயணம் செய்கிறேன்

**ராமா.**—என்ன ஐயா— உத்காதாவாவது எனக்குக் கிடைக்குமா? நீர் ஏற்பாடுபண்ணிக் கொடுத்தால் உமக்குத் தக்ஷிணையிலே பாதி தருகிறேன்.

**விதூ.**—தக்ஷிணை முழுக்கக்கூடக் கொடுத்து விடுவீர்கள்.

**ராமா.**—அப்படிச் சொல்லாதேயுங்கோ ஸ்வாமி. நான் ஸம்ஸாரியோ யில்லையோ-ஏதாவது நாலிலே இரண்டிலே ஆம்பட்டாத்தானே காரியம் நடக்கிறேன் என்கிறது.

**சுப்பா.**—ஐயா-எனக்கு இரண்டு தக்கடி ஐயா.

**விதூஷ.**—இல்லை ஐயா—யாகத்தையும் காணோம் ஒன்றையுங் காணோம். என்ன சொல்லுகிறீர்கள் என்று பார்த்தேன்.

**ராமா.**—என்ன கேலி ஐயா இது.

**சுப்பா.** அவர் சொல்ரபோதே எனக்குத் தெரியுமே.

(நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

## அங்கம் 1

### களம் 2

பாண்டியன் அரண்மனையிலோர் அறை.
காலம்—மாலை

**வீரமர்த்தனன்.**—அம்பாலிகா: நான் என்னசெய்வேன்? சந்தோஷப் படவேண்டிய ஸமயத்தில் என் துக்கப்படவேண்டுமென்று நீ யழுத்தியழுத்திக் கேட்கிறாய்? நான் அரசனாயிருந்தும், ஸகல ஸௌபாக்கியங்களையும் பெற்றிருந்தும், மிகுந்த செல்வாக்குடையோனாயிருந்தும், குருடன் கையிற் சிக்கிய ஒரு அப்ஸரஸ்போல எல்லாம் நிஷ்ப்ரயோஜனமாயின. இவையனைத்தும் எனக்கு மனதில் உத்ஸாகத்திற்குக் காரணமாகவில்லை நான் என்ன செய்வேன்.

**அம்பாலிகை.**—ப்ராணநாதா, ஸந்தோஷமானது, அதற்குரிய காரணங்களை ஆப்தர்களிடத்தில் சொல்லுவதால் இருமடங்காகிறதென்றும், அப்படியே துக்கமானது பாதியாகிறதென்றும் லோகவதந்தியேற்பட்டிருப்பதுடன் அநுப[illegible]மாகவுமிருக்கிறதே. அப்படியானால் தங்கள் மனதை சல்யப் படுத்துகிற காரணத்தை என்னிடம் சொல்லுவீர்களானால், அதனால் தங்கள் துக்கம் சாந்தமடையாதோ? எவ்வளவு ரஹஸ்யமாயிருந்தாலும், என்னிடம் சொல்லலா

மென்று தங்களுக்குத் தோன்ற நம்பிக்கைக்குப் பாத்ரமாகும்படி நான் நடந்து கொள்ள வில்லையோ? ப்ரபு—தங்களுடைய துக்கம் இன்ன விதம் என்று சொல்லலாகாதா?

வீர.—ப்ராண நாயகி—நீ இவ்விதம் சொல்வது ஏற்கெனவே வெந்த புண்ணில் கோலையிடுவது போலிருக்கிறது. நான் சொல்லாமலிருப்பதற்குக் காரணம் உன்னிடம் நம்பிக்கைக் குறைவென்பதல்ல. நானுன்னைக் கைப்பிடித்தது முதல் சென்ற மூன்று வருஷகாலங்களுக்குள் என் மனதிலோர் பாரமாய் நின்று, சல்யப்படுத்துகிற இந்த ரஹஸ்யத்தை உன்னிடம் சொல்லிவிடவேண்டும் என்று ஆயிரம் தடவைகளில் வாயெடுத்திருக்கிறேன். ஆனால் அந்த ஸமயங்களிலெல்லாம் அப்பயங்கரமான விஷயங்களை உன்னிடம் சொல்லி அதனால் உன்னையும் துன்புறுத்துவதில் என்ன லாபமென்றெண்ணியே சும்மாயிருந்து விட்டேன். இப்பொழுதும் சொல்ல வேண்டுமென்கிற எண்ணம் பூரணமாயிருந்தாலும், அதைப்பற்றிப் பேசவரும்பொழுது நாவெழேனென்கிறது. நான் என்ன செய்வேன். இதோ பார். என் சரீரம் நடுங்குகிறதை!

அம்பா.—நாதா! ஆனால் என்னைக் காணும் பொழுதெல்லாம் நீங்கள் துக்கப்படுவதால், எனக்கும் துக்க முண்டாகாமலிருக்கிறதென்று நினைத்து விட்டீர்களா? நாதா! தனிமையில் நான் எத்தனை தடவைகளில், தங்களுடைய ஸந்தோஷமற்ற ஸ்திதியை நினைந்து கண்ணுங் கண்ணீருமாய் உட்கார்ந்து துக்கப்பட்டிருப்பேன். நாதா—இந்த துக்கத்திற்குக் காரண மின்னதென்று தெரிந்துகொண்டால், அது எத்தனை பயங்கரமானதாயிருந்தாலும், எப்படியாவது ஸமாதானம் செய்து கொள்ளலாமென்று தோன்றுகிறது. இன்னதென்றறியாமல், மனதைப் பலவிதத்திலும் கவலைப்படவிட்டு, துக்கப்படுவது எனக்கு ஸஹிக்கவேயில்லை, நாதா.

வீர.—ஐயோ அம்பாலிகா! உன்னையேன் நான் விவாகம் செய்தேன்! ஆதியில் நான் ஸங்கல்பித்திருந்தபடி ஏன் விவாகம் செய்து கொள்ளாமலே இருந்து விடவில்லை! என்னுடைய கார்யதர்சியான ரணகேஸரிதான் ஏன் பல படங்களைச் சேகரித்து வைத்திருந்தான்! எப்படியிருந்தாலும், உன்னுடைய படத்தை ஏன் நான் பார்த்தேன்! ஐயோ தெய்வமே! என்னையேன் இப்படிப் பரிசோதிக்கிறாய்!

அம்பா.—நாதா! ஐயோ! நான் ஒரு அபராதமும் மனதாறச் செய்யவில்லையே! ஐயோ! தங்களுடைய துக்கம் இவ்வளவிற்கும், நானா காரணமாயிருந்தேன்! ப்ரபு—உங்களுக்குப் பாக்கியதை யில்லையா? என்னைத் தங்கள் கட்கத்தால் ஒரே வெட்டாக ஏன் வெட்டியிருக்கக் [illegible]! தங்களுக்கு அபராதம் செய்து, இவ்வளவு துக்கத்திற்குக் காரணமான பிறகு நான் ஜீவித்திருத்தல் யோக்கியமா? ப்ரபோ—நான் என்ன அபராதம் செய்தேன்?

வீர.—ப்ராணகாந்தே! அவ்விதம் நீ அர்த்தம் கொள்ளும்படி என்னுடைய வார்த்தைகள் இடங்கொடுத்தனவா? நீ யொருத்திதான் என்னைப்பற்றி நல்லெண்ணமெண்ணுவானேன்! அடே பாழுந்தெய்வமே! பட்டகாலிலே படும் என்பதுபோல் என் வார்த்தைகளே எனக்கிப்படி விரோதமாகிறதென்றால் அப்புறம் நான் என்ன செய்வேன். ப்ராணகாந்தே! என்னுடைய துக்கத்திற்கு நீயணுவளவும் காரணமல்ல. ஆனால் இந்தத் துக்கத்தின் மத்தியிலும் சில நேரங்களில் எனக்குக் கிடைக்கிற ஸந்தோஷம் ஐயோ அதுவும் எவ்வளவு அல்பகாலம்—உன்னாலேயே எனக்குக் கிட்டியது. இந்த துக்கம் அனைத்தையும் தருவித்துக்கொண்ட மகாபாதகன் நானே. ஒருபாவமும் அறியாதவுன் தலையிலும் இந்த ஸகிக்கொணாத துக்கபாரத்தைக் கொண்டுவந்து வைத்த மகாபாபியும் நானே! (என்று அழுகிறான்)

அம்.—ஐயோ நாதா, அறிந்திருந்தும் இந்தப் பேச்சை மறுபடி யெடுத்ததனாலல்லவோ இத்தனை துக்கமும். நாதா, என்னை மன்னிக்கவேண்டும். இந்தப்பேச்சைஇனிமனதாலுங்கூட ஸ்மரிக்கவில்லை.

வீர.—(சற்று தைர்யத்தை யவலம்பித்து) அம்பாலிகா! நான் என்னமோ முட்டாள்தனமாய்த் துக்கித்தேன். இந்தப் பேச்சையே ஸ்மரிக்காமல் விட்டுவிடுவதென்பதும் அஸாத்யமான கார்யம். ஆகையால் என்னுடைய துக்கத்தையும்—உன்னுடைய துக்கத்தையும் அது அதிகப்படுத்தினாலும் ஸரி,—நான் சொல்லிவிடுகிறேன் கேள்.

அம்.—நாதா, நானறிய விரும்பவேயில்லை. இப்பொழுது தைர்யமாகப் பேசுகிறீர்கள். சொல்லிக்கொண்டு வரும்பொழுது உங்களுக்குத் துக்கம் அதிகமாகி விடக்கூடும். அப்பொழுது ஸஹிக்க மாட்டீர்கள். நீங்கள் அநேகந் தடவைகளில் சொல்லியிருக்கிறபடி, மிகவும் பயங்கரமான அந்தக் கதையைச் சொல்லுவதற்கு அவச்யமான திடம் உம்மனதில்லை. இப்பொழுது வேண்டாமே!

வீர.—ப்ராணஸகி, அப்படியல்ல, இதுதான் அதற்குத் தகுந்த ஸமயம். ஏனெனில் துக்கம் அதிகப்பட்டு மறைந்துவிட்டது. ஆகையால் சொல்லுகிறேன் கேள். ஆதியில் உன்னை, நான் விவாகம் செய்துகொள்ளுவதற்குமுன் சில துஷ்டர்களுடைய ஸஹவாஸத்தால், புத்திகெட்டு, ராஜ்யகாரியங்களை நான் கொஞ்சமும் கவனிக்காமலும், கள்ளிலும் ஸ்திரீகளிடத்திலும் சூதிலும் பொழுது போக்கிவந்தேன்.

அம்.—யார் நீங்களா? நாதா! நீங்களே சொல்லியும் நம்பக்கூடாததாயிருக்கிறதே!

வீர.—ஆம். அப்படித் தானிருக்கும் என்னுடைய தத்கால நடப்பை பார்க்கிறவர்களுக்கு ஆயினும் அது முற்றிலும் வாஸ்தவமே. என்னுடைய மந்திரியாகிய தர்மநிதி யென்பவன் எனக்கு அக்காலத்தில் ப்ரியமாயிருந்த இம்மூன்றிலும் குறை யொன்றில்லாது செய்துவைத்ததனால், எனக்கு என் ராஜ்ய ஸ்மரணையேயில்லை. என்னருமை ப்ரஜைகள் சொல்லொணாத் துயரத்தை இந்த மஹா பாபியான தர்மநியால்

அனுபவித்தது எனக்குத் தெரியாது. அவர்கள் என்னை வெறுத்ததும் எனக்குத் தெரியாது. அநேகர் என்னுடைய ராஜ்யத்தைவிட்டே வெளியேறினதும் எனக்குத் தெரியாது. இப்பொழுது ப்ரதான மந்திரியாயிருக்கும் ரணகேஸரியை என்னிடம் வரவொட்டாமல் தந்திரம் செய்ததுமன்னியில் ப்ரஜைகளுக்கு எவ்விதத்திலும் ஒரு குறைவுமில்லையென்று என்னிடம் சொல்லிக்கொண்டே வந்தான். நான் அத்தனையும் நம்பினேன்.

அம்.—நம்முடைய விவாஹத்திற்கு மூன்று வருஷங்களுக்கு முன்னால் தங்களுடைய ராஜ்யத்தில் ஏதோ கலஹம் நடந்ததாகவும், அதன் பலத்தைக்கொண்டு, சேரன் படையெடுத்து வந்ததாகவும், முதலில் தங்களுக்கு அபஜயம் நேர்ந்தாலும், பிறகு சேரனை புறங்காட்டியோட அடித்தீர்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

வீர.—ஆம் காந்தாமணி! நான் சொல்லவந்த கதையின் பெரும்பாகத்தைச் சுருக்கமாய்ச் சொல்லிமுடித்தாய். ஆனால் முதலில் சேரனால் தோற்கடிக்கப்பட்டு; இனி நமக்கு ராஜ்யம் போயிற்றென்று எண்ணிவிட்டேன். முட்டாள்தனமாய், அகார்யங்களில் ப்ரவர்த்தித்ததற்கும் கடவுளுடைய தண்டனையது என்று எண்ணினேன். இதுவும் எனக்குப் போதாதென்று தோன்றினாலும், ஒருபலமான ராஜ்ய வைபவத்தை யிழப்பதென்றால் மனது வரவில்லை.

அம்.—மனது வருமா?

வீர.—என்னுடைய துர்ப்புத்தி மூலமாயானாலும் எனக்கு நேர்ந்ததொரு அவமானத்தை அறத்தீர்க்க வேண்டுமென்கிற ஒரு கவலையும் உண்டாயிற்று.

அம்.—தாங்கள் மானதனர்களன்றோ!

வீர.—அவமானத்தை யழிப்பதற்கு வேறொரு வழியுங் காணேன். என் படைகளோ சேரன் படைகளால் முறியடிக்கப்பட்டு, நாலாபக்கங்களிலும் ஓடிக்கொண்டிருந்தன. நான் என்ன செய்வது என்று, தோன்றவில்லை. என்னைப் பிடித்து, எனக்கிவ்வளவு கஷ்டங்களையு முண்டாக்கி, என் புத்தியையும் மாற்றின சனீசுவரனை ஸ்தோத்ரம் செய்து, "ஹே பகவந்! என்னை இந்த ஆபத்தினின்றும் நீக்கி என் அவமானத்தைத் துடைப்பீர்களானால் தங்களிஷ்டப்படி செய்வேன்" என்று பைத்தியம் கொண்டவன்போல பலமாய் அலறினேன். அம்பாலிகா! நான் என்ன சொல்லுவேன் அப்புறம் நடந்ததை! (அழுகிறார்.)

அம்.—நாதா, நடந்துபோன கார்யத்தைப்பற்றி துக்கிப்பதில் என்ன லாபம்? தைர்யத்தைக் கைப்பற்றுங்கள். மேல்நடந்ததைச் சொல்லுங்கள் எதுவாயிருந்தாலும் அதை கேட்கத் தக்கபடி என்மனதை திடப்படுத்திக்கொண்டேன்.

வீர.—அம்பாலிகா! நீ தைர்யசாலிதான். இருந்தாலும் நானிவ்விஷயத்தை உன்னிடம் சொன்னால் நீயும் பயப்படுவாய்! ஐயோ? நானேன்பிறந்தேன்! இவ்வளவு துன்பங்களுக்கும் ஆளாகவா?

அம்.—நாதா அப்பொழுதே சொன்னேனே. இப்பொழுது துக்கவேகம் வந்து நெஞ்சடைக்கிறது பார்த்தீர்களா? வேண்டாம் அத்துடன் நிறுத்துங்கள். உத்யானத்திற்கு விதூஷகனை யழைத்துக்கொண்டு போவோம் வாருங்கள்.

வீர.—இல்லை அம்பாலிகா! இனி எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லாமல் முடியாது. வந்து நின்றான் சனீசுவரன் என்கண் முன்னாக. உனக்கு முதற்பிறக்கும் குழந்தையை எனக்குப் பலிகொடுப்பதானால் இந்தச் சேரனை இருந்தவிடந் தெரியாமல் பஞ்சாய் * *

அம்:—(காதுகளைப் பொத்திக்கொண்டு) சிவசிவ, சாந்தம். பாபம்- நீங்கள் என்ன சொன்னீர்கள்?

வீர:—அம்பாலிகா! என் கண்ணே. என்னை மன்னிக்கவேண்டும். எனக்கு அந்த ஸமயம் புத்தி ஸரியாகவேயில்லை, எனக்கு நேர்ந்த அவமானமொன்றே என் கண்முன் நின்றது என்னை மன்னிப்பாயா!

அம்,—அப்படியே யாகட்டும் என்று ஒப்புக்கொண்டீர்களாக்கும்! அதனால் அது எனக்குச்செய்த அபராதம் எப்படியாகும்? அதற்கு மூன்று வருஷத்திற்குப்பிறகல்லவோ நமக்கு விவாகமானது.

வீர.—ஆம். ஆயினும் நான்செய்த வாக்குத்தத்தம் பயங்கரமானது. உலகத்தில் பிறந்து அவற்றின் சில போகங்களையேனும் அனுபவித்த நான் என் ராஜ்ய ஆசையால் இனியுலகில் பிறக்கப்போகிற ஒரு குழந்தையை பலியிடுவதாக வாக்குத்தத்தம் செய்து அதனால் ஒரு பாவமு மறியாத அதன்தாய்க்கு ஆற்றொணாத் துயரத்தை உண்டுபண்ணிவைக்கிறதென்பது எவ்வளவு க்ரூரமான கார்யம்? அப்படிசெய்யத் துணிந்த மஹாபாபியான நான் அப்பொழுதே இறந்திருந்தாலன்றோ லோகத்திற்கு க்ஷேமம்.

அம்:—ப்ரபு, நீங்கள் உங்களையே வீணில் நொந்துகொள்ள வேண்டாம். இவ்வளவு யோசனையும் அந்த ஸமயம் தங்களுக்குத் தோன்றக்கூடியதா? நீங்களும் மனித ப்ரக்ருதிதானே. அது கிடக்கிறது. எனக்கு விஷயம் தெரிந்து விட்டதால் என் மனது ஒருவாறு சமனமடைந்தது மேலே சொல்லுங்கள்.

வீர:—என்பேரில் நீ வருத்த மடையாதிருப்பதற்காக வந்தனம் கோடிகோடி செய்கிறேன். நிற்க. இப்பொழுது நீ பூர்ண கர்ப்பமாயிருப்பதை நினைக்குந்தோறும் எனக்குத் துக்கம் மேலிடுகிறது ஆச்சர்யமல்லவென்று உனக்கே தோன்றும். (பெருமூச்செறிகிறான்.)

அம்:—நடந்தவற்றைப்பற்றி விசாரப்படுவது ப்ரயோஜனமற்ற காரியம். நீங்கள் ஆதியில் செய்த வாக்குத்தத்தம் மிகப் பயங்கரம…த்தானிருக்கிறது. உங்களைத் தவிர வேறு யாராவது இம்மாதிரியான விஷயம் என்னிடம் சொன்னால் நான் …ம்பவே மாட்டேன்.

வீர.—என்றாலும் இதெல்லாம் வாஸ்தவம் என்

கண்ணே. அதோ ப்ரகாசிக்கும் சூர்யமண்டலத்திற்குக் கீழ் நாமிருக்கிறோ மென்பது எத்தனை வாஸ்தவமோ அத்தனை வாஸ்தவமிது. இதோ பார் என்கையை (தன் மணிக்கட்டிலுள்ள கங்கணம் போன்ற ஒரு கரிய கோட்டைக் காண்பிக்கிறான்)

அம்.—(உற்றுப்பார்த்து) இதென்ன ப்ராணநாதா, இதென்ன?

வீர.—இதுதான் அந்த சனீசுவரனுக்கு என் மீது ஏற்பட்டிருக்கும் அதிகாரத்தை நினைப்பூட்டும் ஓர் அடையாளம். நீ கர்ப்பமாகி ஐந்து மாதமானதை நானறிந்தவுடனே முதலில் சொல்லுதற்கரிய ஸந்தோஷத்தை யடைந்தேனாயினும், அடுத்த நிமிஷமே, மழைக்காலத்தில் பளிச்சென்று ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ஸூர்யனை மேகங்கள் திடீரென்றெழும்பி மறைத்தாற்போல், அந்த ஸந்தோஷத்தை சனீசுவரனுக்கு நான் செய்துகொடுத்த வாக்குத்தத்தத்தின் நினைவு வந்து கெடுத்துவிட்டது. யோசனையிலமுழ்ந்தினேன். இவ்விதம் நான் வாக்குத்தத்தம் செய்து கொடுத்தது ஸ்வப்னமாகத்தானிருக்கவேண்டுமென்றுகூடத் தீர்மானம் செய்துவிட்டேன் அந்தோ! அந்தஸமயம் என் முன் வந்தது அந்த சனீசுவரன் உருவம். 'இவ்வளவு சீக்கிரத்தில் என் ஞாபகம் உனக்கு மறைய ஆரம்பித்ததா' வென்று சொல்லி என் கையை இந்த விடத்தில் (மணிக்கட்டைக் காண்பித்து) பிடித்தது உடனே ஆயிரம் ஊசிகொண்டு அக்கையில் குத்தினதுபோலிருந்தது. சனீச்வரன் கையை விடவேயில்லை, என்னை அநேக இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போய், அநேகம் பயங்கரமான சித்ரவதை ஆயுதங்களை எல்லாம் காண்பித்து என்னை இந்த மறுபடியிந்தகாளில்கொண்டுவந்து சேர்த்தது. அப்பொழுதுதான் என்னைக் காணோமென்று நீங்கள் பல விடங்களிலும் தேடி விசாரப்பட்டது.

அம்.—இவ்வளவுதானா இந்தப் பயங்கரமான கதை? இன்ன மிருக்கிறதா?

வீர.—இனி என்ன இருக்கிறது. சனீசுவரனுடைய பலத்தை அல்ப மானிடர்களான நாம் எதிர்க்க முடியாதாகையால், நாம் கொடுக்காவிட்டாலும், தனக்குபலியாகும் ப்ராணியை சனீசுவரன்எவ்விதத்திலும் பெற்றுக் கொள்ளுவான் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆயினும் கிருபாநிதியான உன்னை யந்தத் துக்கம்பீடிக்கவும், நீ கஷ்டமடையவும் காரணமாயிருந்து நான் இருந்தென் இறந்தென்! நீ கஷ்டப்படுவதைக் கண்ணால் காண்பதற்குமுன் நானிறப்பதே தான் மேன்மையென்று தீர்மானிக்கிறேன்.

அம்.—நாதா இந்த வார்த்தை தாங்கள் சொல்லுவது தங்களுக்கு அழகாயிருக்கிறதா? நீங்களாகத்தான் சொன்னீர்களா, யாராவது சொல்லச் சொல்லிக்கொடுத்தார்களா? அந்த வார்த்தையைத் தயவு செய்து மறுபடி என் காதில் போடாதேயுங்கள் நிறக, இந்த ஆபத்திலிருந்து தப்புவிக்கிறது அஸாத்யமல்லவென்று எண்ணுகிறேன்.

வீர.—ஆ! கண்ணே! அஸாத்யமல்லவென்று நினைக்கிறாயா? என்ன யுக்தி செய்யலாம்! ஐயோ! இதற்கு முன்னமே உன்னிடம், சொல்லாமற் போனேனே!

அம்.—ப்ரபோ! எனக்கு யுக்தி தெரியாது. ஆனால் க்ரஹாதிகள் வக்ரமாயிருக்குங் காலங்களில் சாந்திகள் ஹோமங்கள் முதலியன செய்து க்ரஹங்களின் ப்ரீதி செய்வது உலக ப்ரஸித்தம். அப்படியே இந்த சனீசுவரனும் ஒரு க்ரஹந்தானாகையால் சாந்தியாதிகளால் அவருடைய ப்ரீதியை ஸம்பாதித்து, இவ்வாபத்தினின்றும் தப்பலாமென்றெண்ணுகிறேன்.

வீர.—அடி. என் கண்ணே, எனக்கிந்த யுக்தி தோன்றவில்லையே. பலே. அப்படியே செய்வோம். இப்பொழுதே புரோஹிதரை வரவழைக்கிறேன் (மடமடவென்று இழிவுதோன்றிய ஓர் சிரிப்புக் கேட்கிறது.) ஐயோ! அது சனீசுவரன் குரலல்லவோ. நாம் செய்யும் யோசனையைக் கேட்டிருந்து, உங்கள் எண்ணத்தைப் பலிக்கவிடுவேனா என்று சொல்வது போலவன்றோ விருக்கிறது. ஐயோ என் ப்ராணகாந்தே! எது இந்தசனீசுவரன் பாதையிலிருந்து நாம்தப்புவிக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லையடி! நான் என்னடி செய்வேன்? ஹதபாக்யன்! (அழுகிறான்).

அம்.—(ஸ்வகதம்) ஐயோ! அந்தப்பாழும் சிரிப்பு என்காதிலும் விழுந்ததே (ப்ரகாசம்) நாதா நீங்கள் திடுக்கிட்டதைக்கண்டு நானும் திடுக்கிட்டேன். அவ்விதம் சிரிப்புத்தோன்றினது மனதின் ப்ரமமாகவேயிருக்கும் வேறொன்றுமில்லை. கவலைப்படாதேயுங்கள். என் தகப்பனார் ராஜ்யத்தில் நீலகண்டசாஸ்த்ரி என்றொரு மகாவித்வான் இருக்கிறார், அவரைத் தருவித்தால் நம்முடையகவலையைநீக்குவார், அவருடைய ஸாமர்த்யத்தைப்பற்றி என்தகப்பனார்அஸாத்தியமாய் சொல்லியிருக்கிறார்.

வீர.—என்னமோ செய்து பார்ப்போம். எனக்கு மட்டும் நம்பிக்கையில்லை. எல்லாம் வல்ல ஈசன் செயல். (நிஷ்க்ரமிக்கிறார்கள்.)

---

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு க்ராண்ட்.—எலிமெண்டரி பாடசாலைகளுக்காக, கட்டடம் கட்ட ஆரமபித்து அரைகுறையாயிருக்கும் கட்டடங்களைக் கட்டிமுடிக்கவும் முன்பே கட்டப்பட்டுள்ள அப்பாடசாலைக் கட்டடங்களை சீர்திருத்தவும் பழுதுபார்க்கவும் ரூ. 4, 23,977 நமது கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட 22 டிஸ்ட்ரிக்ட் போர்டுகளும் 31 முனிஸிபல் கவுன்ஸில்களும் அத்தொகையைப் பெற்று அவ்வேலைகளைச் செய்து முடிக்கும். இனி புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்காக தற்சமயம் பணம் கொடுத்துதவ முடியாதென்று கவர்ன்மெண்டார் அறிவித்திருக்கின்றனர். இது தவிர, வெளி ஜில்லாக்களிலிருக்கும் மாணவர்கள் விளையாட்டுக் கம்பவுண்டு விடுதிக்காக ரூ. 98,900-ம் கொடுத்திருக்கிறார்கள்.

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
## CHILDREN'S & LADIES' PAGES

# மாதவீ கங்கணம்

### ஆக்ராநகரத்து அடிமைப் பெண்ணின் சரித்ரம்

(269-பக்கத் தொடர்ச்சி)

### முதல் பாகம்
### அத்யாயம் 2
### பரஸ்பரம் வைரமூற்ற வம்சங்கள்

ராஜா தோடர்மால் எந்தக் காரியத்தையும் உள்ளூற ஆய்ந்தோய்ந்து பார்த்துச்செய்பவர். ஆழ்ந்த ஆராய்ச்சியும் தீர்க்காலோசனையுமின்றி ஒரு தொழிலிலும் அவர் தலையிட்டுக்கொள்ளார். இந்த குணாதிசயத்தாலன்றோ அவர் இணையற்ற ரணசூரரென்று பெயரெடுத்தார்? ஸம்ப்ரதி உத்யோகத்தில் அவருக்கு ஸமானமானவர் ஒருவரும் அக்காலத்தில் கிடையாது. இவ்வளவு ஸாமர்த்யமுடையவர் வீணில் ஜனங்களை மடிக்க இஷ்டப்படுவாரா? அவர் வங்காளத்துக்கு வந்த சில தினங்களுக்கெல்லாம் ஒரு சண்டையாவதின்றி கலகக்காரரை அடக்கிவிட்டார். ஹிந்து ஜமீன்தாரர்களை ஒருவர்ஒருவராகத் தன்வசப்படுத்திக்கொண்டார். வாகல்பூரிலிருக்கும் கலகக்காரர்களுடைய சேனைக்குப்போகும் போஜனபதார்த்தங்கள் தடைப்பட்டுவிட்டன. ராஜா தோடர்மால்பக்சம் நவகுமாரரைப்போல் வேறெந்த ஜமீன்தாரரும் அவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கவில்லை. அவர் அக்பர்சக்ரவர்த்திக்காக அதிக சிரமம் எடுத்துக்கொண்டார். ப்ரதி ஜமீன்தாரரிடமும், பாளையக்காரனிடமும் போய் அவர் அதிக ப்ரயாஸப்பட்டு அவர்களை அக்பருக்குக் கீழ்ப்படியும்படிச் செய்தார். அவர் வார்த்தையைக் கேட்டுச் சிற்றரசர்கள் யாவரும் ராஜா தோடர்மால் கக்ஷியில் சேர்ந்தனர். ப்ரதி இரவும் மாறுவேஷம் பூண்டு நவகுமாரர் மாங்கீருக்குள் ப்ரவேசித்து மொகலாய சிற்றரசர்களுடைய அந்தரங்க ஏற்பாடுகளையும் அவர்களுடைய செய்கைகளையும் தெரியப்படுத்தி வந்தார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். அவர் எடுத்த காரியம் கைகூடிற்று. மொகலாயர்களுடைய நண்பர்கள் ஒருவர்பின் ஒருவராக சத்துரு பக்கம்போய்ச்சேர்ந்தனர். மொகலாய படைவீரர்களுக்கு ஆகாராதிகள் வருவதற்கு வழியில்லாமற் போய்விட்டது. சோற்றுக்கு வழியில்லாமல் பசியாலலைந்துநெல்லிக்கனிபோல் நாலாதிசையுஞ் சிதறியோடலாயினர்.

கலகக்காரர்களுடைய கொட்டமெல்லாம் அடங்கிப் போய்விட்டது. நாடுமுழுதும் ஸமாதானம் நிலைபெற்றது. அக்பருக்கு உதவிசெய்த சிற்றரசர்கள், ஜமீன்தாரர்கள், வீரர்கள் முதலியவர்களுக்குப் பரிசளிக்கும் உற்சவத்தை யாவரும் ஆவலாய் எதிர்பார்த்திருந்தனர் ராஜா தோடர்மால் நவகுமாரர் செய்த உபகாரமே எல்லாவற்றிலுஞ் சிறந்ததென்று கருதி ஸபையில் அவரை யழைத்து,

"நவகுமாரரே, நமது காருண்ய அதிபதியவர்களுக்காக இம்முறை நீர்செய்த உபகாரம் ஸாமான்யமானதல்ல. சக்ரவர்த்தியவர்கள் உம்மை என்றைக்கும் மறக்கமாட்டார். உம்முடைய மனதில் குறைகள் ஏதாவதிருப்பினும் ஸரி, இல்லாவிட்டால் நீர் உன்னத பதவி எதற்காவது ஆசைப்பட்டாலும் ஸரி, உம்முடைய வேண்டுகோளைப் பூர்த்திசெய்கிறோம்" என்று சொன்னார்.

"எனக்கென்ன வேண்டுகோள் இருக்கிறது? நான் செய்துள்ள குற்றத்தை மன்னித்தால் அதுவே எனக்கு ஆயிரம்பரிசுக்கு ஸமானம். தலைமுறைதலைமுறையாக என்னுடைய முன்னோர்கள் கீழ்ப்படிந்துவந்த ஆப்கானியர்பக்ஷம் நானும் சேர்ந்து தங்கள்மீது படையெடுத்தேன்."

"நீர் சொல்வது அதிசயமாயிருக்கிறதே! நவகுமாரரே, வங்காள நாடு மொகலாயர் வசமாகும் வரையில் அதன் பூர்வஅரசர்களாகிய ஆப்கானியர்பக்கம் உழைத்ததற்காக நீர் பெறவேண்டியது வெகுமானம். அப்படியிருக்க மன்னிக்க வேண்டுமென்கிறீரே; தங்களுடைய பூர்வ அரசர்களுக்காக சண்டைசெய்த சுத்தவீரர் எவரையும் அக்பர் இதுவரைக்கும் தண்டித்ததாகக் காணோம்."

நவகுமாரர் பதில் சொல்லத் தெரியாமல் திகைத்தார். அவர் வாய்திறவாமல் ப்ரமையடைந்தவரைப்போல் நின்றார் அவருக்குப் பின்னால் தோடர்மாலிடம் பேசவேண்டியவர்கள் பலர் இருந்தனர். தான் அநேக நாட்களாகக் காத்திருந்த தருணம் வந்தும் நவகுமாரருடைய மௌனத்தால் அத்தருணம் தவறிவிடுமென்று கோகிலதாஸ் பயந்தார். அவர் தோடர்மாலுடைய குணாதிசயங்களை அறிந்தவர் அவருடன் எவ்விதம்பேசினால் காரியஸித்தியாகுமென்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். தன் மனோபீஷ்டம் பூர்த்தியாவதின்மேலேயே கண்ணுங்கருத்துமாயிருந்த கோகிலதாஸ் அதிகவணக்கத்துடன் மனதிலொன்று வெளிக்கொன்றாக இல்லாமல் யதார்த்தமாகப் பேசலுற்றார்.

"என் எஜமானருடைய குற்றம் அதனுடன் நிற்கவில்லை. தாயுதகான் தான் சக்ரவர்த்தியினிடம் செய்த வாக்குதத்தத்திற்கு மாறாக மஹாகனம் பொருந்திய அக்பர் மகிபருடன் ஆக்மஹலில் போர்புரிந்தபோது என் எஜமானரும் தாயுத்கானுக்குத் தம்பியாய்த் தங்கள்மீது படையெடுத்துவந்தார்."

தோடர்மாலின் முகம் கறுத்தது. அவர் கண்கள் சிவக்க, "அந்த ஆப்கானியன் செய்தது கேவலம் நம்பிக்கை த்ரோகம்; விசுவாஸகாதகம் அத்தகைய த்ரோகச்செயலுக்காக கடவுள் அவனை ஸரியானபடி தண்டித்தார்" என்று கோபாக்ராந்தராக உரத்துப்பேசினார்.

"ஆம் வாஸ்தவந்தான். ம[illegible] ராஜா, அந்த தாயுத்கானுடன்கூடிய எனது எஜமானரும் நம்பிக்கை த்ரோகிதான். ஆனால் அவர் தான் செய்த குற்றத்தை ஒளிக்காமல் இந்த ஸபையில் ஒத்துக்கொண்டு அதற்காக மிகவும் பச்சாத்தாபப்படுகிறார் மூன்று வருஷ

காலமாக ஆப்காரிய அரசர்களுக்குக் கீழ்ப்படிந்து நன்றியறிவுடன் உழைத்துவந்த எனது எஜமானர் ஏதோ கண்மூடித்தனமாய்க் குற்றமென்றறியாமல் தன் கடமையையே பெரிதாகக்கொண்டு செய்தபிழையை மஹாதயாளுவாகிய மொகலாய வள்ளல் கருணை கூர்ந்து பொறுத்தருளவேண்டும். தயைசெய்து குற்றங்குறைகளைப் பொருட்செய்யாமல் எங்களைத் தங்களுடைய ஊழியர்களாக்கிக் கொள்ளவேண்டும். நவகுமாரருடைய வம்சத்தார் இதுவரைக்கும் ஆப்காரியர்களுக்கு உழைத்ததுபோல் இனிமொகலாயருக்கு உழைக்கும்படிக் கருணைபுரிவது தங்களுடைய பொறுப்பு" என்று விண்ணப்பித்துக்கொண்டார் கோகிலதாஸ்.

ராஜா தோடர்மால் மௌனம் ஸாதித்திருப்பதைக் கண்ட கோகிலதாஸ் தன்னுடைய வார்த்தைகள் ராஜபுத்ர வீரனுடைய மனதை உருக்கியதென்று தெரிந்துகொண்டு பின்னும் பேசலானார்.

"வீரநகரமும் தேவிபுரமும் ராஜபக்தியிலும் ஸைந்யபலத்திலும் ஒன்றுடனொன்று போட்டிபோட்டுக்கொண்டு ஆப்கரீயர்களுக்காகப் பலவருஷகாலம் உழைத்து வந்தன. மேல் ஸமுத்ரம் முதல்கொண்டு கீழ் ஸமுத்ரம்வரையில் வ்யாபித்திருக்கும் மொகலாய ராஜ்யத்தின் ப்ரதான நகராகிய ஆக்ரா பட்டணத்தில் செங்கோல் செலுத்தும் மஹா பலாட்யராகிய அக்பர் பெருமானுக்கும் அவருடைய ஸந்ததியாருக்கும் இவ்விரு ஜமீன்களும் ஆப்காரியரின் கீழ் இருந்தது போலவே இப்போதும் ராஜபக்தியிலும் இதர ராஜசின்னங்களிலும் ஒன்றுக்கொன்று பின்னடையாமல் செழித்துவரும்படி ஆஞ்ஞாபிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

"வீரநகரமா? நன்றாய் ஞாபகமிருக்கிறது. இந்த ப்ராந்தியத்தில் இதர அரசர்கள் அனைவரும் எதிரிபக்கம்போய்ச் சேர்ந்தபோது, அவர்களுக்குப் பயப்படாமல் தர்மத்தையே கடைப்பிடித்து எங்கள்பக்கம் தனியாயிருந்து போர்புரிந்த ஜெயஸிம்ஹரை எப்படி மறப்பேன். அவர் நாட்டிற்கு நான் எத்தனையோ முறை சென்றிருக்கிறேன். அவருடன் அநேக நாட்கள் பழகியிருக்கிறேன். அவருடைய வீரத்தையும் நன்றியையும்பற்றி அக்பரவர்கள் மெச்சிப்பேசியதைக் கூடுமானால் இன்னொருமுறை அவருக்குத் தெரிவிக்கவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை".

"இவ்வுலகத்தில் பெரும்புகழும் வாய்ந்து வசித்திருந்த அவர் தாங்கள் இந்நகரத்தை விட்டுச் சென்ற சிறிது காலத்[illegible]ாம் பரலோகமடைந்தார். அவருடைய [illegible]பின்னைதான் இப்போது வீரநக[illegible] [illegible]காலம் தேவிபுரத்திற்கும் [illegible] கேட்டு தோடர்மால் [illegible] ஸபாமண்டபமுழு[illegible] [illegible] ஒருவராவது வாய் திற[illegible] அந்த்யகாலத்தில் வைத்யர் கைபார்[illegible] [illegible] போசி ஞரோமென்று ஆவ[illegible] [illegible] நோயாளியின் நெருங்கிய சுற்றத்தார்களைப்போல் நவகுமாரர் ராஜா தோடர்மால் வாக்கிலிருந்து வரப்போகும் மொழிகளை எதிர்ப்பார்த்திருந்தார்.

சற்றுக்கெல்லாம் ராஜா தோடர்மால் தன் தீர்ப்பைக் கூறத்தொடங்கினார்.

"நவகுமாரரே, உமது நம்பிக்கையுள்ள அமைச்சர் உமக்காக ஸாமர்த்யமாகப் பரிந்துபேசினார். அதைவிட அதிக பலமான சிபார்சு நீர் நடந்த போரில் செய்திருக்கும் உதவியொன்றிருக்கிறது. அந்த உபகாரத்துக்கு ஏற்ற ஸம்மானம் உமக்குக் கிடைக்கும். நான்கு வருஷங்களுக்குமுன் நாங்கள் செய்த த்ரோகத்தின் ஆந்தரிக காரணங்கள் தெரியவேண்டியது அவசியமில்லை. நீர் செய்த பிழைகள் யாவற்றையும் அக்பர் சக்ரவர்த்தியவர்கள் முழுவதும் மன்னித்துவிட்டார். இனி நீர் அவ்வித நடத்தைக்கு உட்படாமல் என்றைக்கும் ராஜபக்தியில் சிறந்து விளங்குவீரென்று நம்புகிறோம். வீரநகர ஜமீன்தாருக்குப் பரிசாகக் கொடுத்ததை இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி எடுத்துக்கொள்வது சக்ரவர்த்தியவர்களுடைய பெருமைக்கும் அந்தஸ்துக்கும் சிறிதும் ஒவ்வாத கார்யம். இன்னுஞ் சொஞ்சகாலம் கழிந்த பிறகுதான் உமது ஜமீன் உமக்குக் கைவசமாகும். அதற்குள் நீர் உமது நல்நடத்தையால் சக்ரவர்த்தியவர்களுடைய தயையைப் பெறவேண்டும். வீரநகர ஜமீன்தாருக்கு இன்னும் யுக்தவயது வரவில்லை; அவரை ராஜ்ய வ்யவகாரங்களில் பழக்கவும் அவருடைய ஜமீன் விஷயங்களை ஸரிவர பார்த்துவரவும் ஒரு நம்பிக்கையான உத்யோகஸ்தர் தேவை. அவ்விரு உத்யோகங்களையும் நீர் பார்த்துவாரும். நீர் சக்ரவர்த்தியவர்களுடைய மனதுக்கு த்ருப்தியாய் உமக்கிட்ட காரியத்தைச் செய்துவந்தால், அந்த பால்ய ஜமீன்தார் யுக்த பருவமடைந்தவுடன் தேவிபுரம் உமக்குக் கிடைக்கும். உமது வம்சத்தைப் போன்ற புராதன வம்சங்கள் க்ஷீணித்துப்போகாமல் கூடியமட்டும் நெடுங்காலம் தழைத்தோங்க வேண்டுமென்பது சக்ரவர்த்தியவர்களுடைய மனப்பூர்வமான கோரிக்கை. ஆதலால் நம்பிக்கையாய் ஊழியஞ்செய்து உமது ஜமீனைத் திரும்பப்பெற்றுக்கொள்ளும் வழியைத் தேடும். என்றைக்கும் கனவில்கூட நினைக்கவேண்டாம் நம்பிக்கை த்ரோகம் என்பதை. நண்பரையும் அவர்கள் புரியும் உதவியையும் எப்படி என்றைக்கும் மறப்பதில்லையோ, அப்படியே நாம் நமது சத்ருக்களைப் பூண்டற நாசம் செய்யும் வரையில் அவர்களை மறப்பதில்லை. இது உமக்கு ஞாபகத்திலிருக்கட்டும்."

தோடர்மாலவர்கள் செய்த ப்ரஸங்கம் ஆஸ்தான மண்டபமெங்கும் ஒலித்தது. அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நவகுமாரர் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. அவர் மனம் துடித்தது. தன் ஜன்ம சத்ருவீட்டில் திவானாயுங் கார்யஸ்தனாயும் வேலைபார்க்கத்தான் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தோடர்மால் கூறியது அவருக்கு நாராசங் காய்ச்சி நடுச்

செவியில் வைத்தது போலிருந்தது. அவர் மனம் பெரிதும் துன்பப்பட்டது. அவர்க்கு அடங்காக் கோபமும் ஆத்ரமும் உண்டாய்விட்டது. அவருடைய உதடுகள் சிறிது அசைந்தன. அவர் ராஜ கட்டளையை மீறிப் பேசுவார் போலிருந்தது. ஆனால் அவர் பக்கத்திலொருவர் இருக்கவில்லையா? கோகிலதாஸ் அப்போது இருந்திராவிட்டால் கைக்கெட்டிய பழம் வாய்க்கெட்டாமற் போய்விட்டிருக்கும். நவகுமாரர் ஏதாவது பதட்டமாய்ச் சொல்லிவிட்டிருப்பார். சக்ரவர்த்தியவர்கள் நவகுமாரர் செய்த பழைய த்ரோகங்களை யெல்லாம் மன்னித்து விட்டார், திவான் உத்யோகம் அவரை உண்மையில் வீரநகரத்துக்கும் தேவிபுரத்துக்கும் தலைவராக்கியது. மேலும் சில வருஷங்களுக்கெல்லாம் தேவிபுரமும் தமது எஜமானர் கைவசமாகும் என்னும் உறுதிமொழியும் கிடைத்தது. இவ்விஷயங்களை யெல்லாம் ஆறத்தீர யோசித்த கோகிலதாஸ் இப்போது மௌனமாயிருப்பது விபரீதபுத்தியென்று துணிந்து, தோடர்மால் முன்னிலையில் ஸமஸ்கரித்து மலர்ந்த முகத்துடன்

“கருணையே உருவாய் எடுத்துவந்த உத்தமரே தங்களுடைய தயாளகுணத்தால் என் எஜமானர் பேசச் சக்தியற்றவராயிருக்கிறார். அவர் ஆநந்த பரவசமாய் விட்டார், தங்களுக்கு வந்தனமளிப்பதைக்கூட அவர் மறந்துவிட்டார். இந்திய சக்ரவர்த்தியவர்கள் அந்தஸ்துக்கே தகும் இம்மொழிகள். உமது திருவாய் மூலமாய்வெளிவந்தது சர்க்கரைத்தன்றில்தேன்மாரி பொழிந்ததுபோலிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் போர்முகத்தில் தங்களுக்குத் தீங்கிழைத்த எங்களுடைய யோக்யதைக் கதிகமான இம்மரியாதையை என் எஜமானர் மிக்க மனஸ் ஸந்துஷ்டியுடனும் வணக்கத்துடனும் ஏற்றுக்கொள்கிறார். இந்த உதார செயலுக்காக நவகுமாரர் தங்களுக்கு என்றைக்கும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார். அவர் உயிருடனிருக்கும் வரையில் மனப்பூர்வமாய் டில்லி ராஜனுக்கு உழைத்து வருவார் என்பதில் ஸந்தேஹமில்லை. இன்னும் கொஞ்சகாலங் கழிதது ஆப்கானியர்கள் கீழ் இருந்தது போலவே தேவிபுரம் வீரநகரம் இரண்டும் மொகலாயரின் கீழும் ஒன்றுக்கொன்று பின் வாங்காமல் நம்பிக்கையாய் உழைத்து வருவதைக் காண நீங்கள் நெடுங்காலம் வாழ்ந்திருக்க வேண்டும்.”

நவகுமாரர் தம் மனைவியுடனும் தம் பெண் ஹேமலதையுடனும் வீரநகரத்துக்கு வந்து சேர்ந்தார். அவரும் ஸகல நற்குணங்களும் அமையப்பெற்றவளாகிய அவரது மனைவியும் நரேந்த்ரன், ஹேமலதை இருவரையுங் கருத்தாய் வளர்த்துவந்தார்கள். ஹேமலதை அழகிற் சிறந்தவள். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக இரண்டு குழந்தைகளும் வளர்ந்துவருங் காலையில் இருவருக்கும் ஸ்நேஹம் அதிகரித்தது. தன் முன்னோர்கள் உழைத்தபடியே இன்னும் தேவிபுரத்து ராஜ குடும்பத்தாருக்கு மனப்பூர்வமாய் உழைத்து வரும் கோகிலதாஸும் நவகுமாரருடன் வீரநகரம் வந்தார்.

இவைகளெல்லாம் நடந்து இப்போது பத்து வருஷமாயிற்று. அக்பர் சக்ரவர்த்தியின் இன்னொரு ஹிந்து தளகர்த்தராகிய ராஜா மான்ஸிங் அப்போது வங்காளத்துக் கவர்னராயிருந்தார். ஆக்மஹாலைத் தலைநகராக்கி அதன்பெயரை ‘ராஜமஹால்’ அதாவது அரசர்கள்வசிக்குமிடம் என்று மாற்றினர். நரேந்த்ரனும் ஹேமலதையும் விளையாடிக் கொண்டிருந்த வீரநகரம் இந்த ராஜமஹாலுக்கு, அருகில்தான் இருக்கிறது. ஆனால் இந்த பத்து வருஷகாலத்துக்குள் விரீஷ்த என்னும் ஓர் அந்நியன் அவர்களுக்கிடையில் வந்து தோன்றினன்.

## அத்யாயம்.—3

### ஸௌந்தர்ய மந்த்ரி

தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட ஜமீன்களை நவகுமாரர் அதிக சிரத்தையுடன் ஸாமர்த்யமாய்ப் பரிபாலித்துவந்தார். பத்துவருஷகாலத்துக்குள் வீரநகரம் தேவிபுரம் இரண்டும் ஸமாதான நிலைக்குவந்தன. நாடெல்லாம் ஸுபிக்ஷமடைந்தது. ஆப்கானிய மொகலாய யுத்தம் நடந்தகாலத்துப் பாழடைந்துபோன க்ராமங்களிலெல்லாம் ஜனங்கள் மறுபடியும் வந்து குடியேறினர். பீதியடைந்து வீடுவாசல்களை விட்டோடிய குடித்தனக்காரர்களும் தொழிலாளிகளும் சண்டைச் சரவுகள் அடங்கி ஸமாதானம் நிலைபெற்றவுடன் தத்தம் க்ராமங்களுக்குத் திரும்பிவந்து பழையபடித் தம் வீடுகளைச் சீர்ப்படுத்திக்கொண்டு, ஜீவிக்கத் தலைப்பட்டார்கள். புல்பூண்டு செடிகொடிகளால் மூடப்பட்டுப் போன நிலங்களும் வயல்களும் மறுபடி சாகுபடி செய்யப்பட்டன. சிறு பிள்ளைகள் வயல்புறங்களில் சுற்றித்திரியும்போது அவர்கள் கையில் அகப்பட்ட பீரங்கிக் குண்டுகளையும், உடைந்துபோன துப்பாக்கிகளையும்கொண்டுவந்து அவைகள் அங்கே கிடக்கவேண்டிய காரணமென்னவென்று தங்கள் தகப்பன், பாட்டன்மார்களை ஆவலுடன் கேட்டார்கள். பெரியவர்களும் தங்கள் இளம்பருவத்தில் கண்ணுற்ற சேனைகளுடைய போக்குவரவுகளைப்பற்றியும், அவர்கள் புரிந்த யுத்தங்களைப்பற்றியும் ஞாபகமிருந்தவரையில் கதையாகச் சொன்னார்கள். அப்பெரியவர்களில் சிலர், தாயுத்கான் அல்லது தோடர்மால் பக்கமிருந்து சண்டை செய்த யுத்தவீரர்கள். அவர்கள் மா நிழலில் உட்கார்ந்து அதிக உத்ஸாஹத்துடன் தங்களைச் சுற்றியிருந்த சிறுவர்களிடம் தாங்கள் செய்த ஸாஹஸங்களை எடுத்துச் சொல்லிக் களித்தனர். எத்தனை முறைதான் திரும்பத்திரும்பச் சொன்னாலும் கதைகள் ஸ்வாரஸ்யத்தில் கிஞ்சித்தேனும் குன்றவில்லை. ப்ரதிதினமும் ஊரார்கள் அக்கதைகளை ஆவலுடன்கேட்டு அவர்கள் புரிந்த வீரச்செய்கைகளில் ஒன்றிரண்டை நடத்த [illegible]னால் ஆகாதென்றெண்ணி, அவர்களுக்கு மரியாதைசெலுத்திவந்தார்கள்.

பிறர் செய்யும் ப்ரதிகார்யத்திலும் குற்றங்குறை

கண்டுபிடிப்பதே தொழிலாக இருப்பவர்கள்கூட நவகுமாருடைய ராஜ்யகார்யங்களில் பிழை கூறமுடியாது. வீரநகரத்துப் பழைய உத்யோகஸ்தர்களையும் சேவகர்களையும் வேலையில் நிறுத்திக்கொண்டு அவர்களுக்குத் தக்க சம்பளங்களையும் பரிசுகளையும் அளித்துவந்தார். நரேந்த்ரனுடைய பாட்டனார் ஏற்படுத்திய தர்மகைங்கர்யங்கள், தேவாலயங்கள், தர்மசாலைகள் யாவற்றையும் சீராய்ப் பரிபாலித்துவந்தார். ஸகல ராஜகார்யங்களையும் டம்பமின்றி அமரிக்கையாய் நடத்திவந்ததனால் அவர் தன் அதிகாரத்தை வெளிப்படையாய்க் காண்பித்துப் பொதுஜனபீதியை உண்டுபண்ணவில்லை. வங்காளத்துக்கவர்னராய் ராஜா மான்ஸிங் வீரநகரம் வந்தபோது ராஜா தோடர்மால் செய்த ஏற்பாடு ஒழுங்காயிருப்பதைக் கண்டு த்ருப்தியடைந்தார். நவகுமாருடைய ராஜபக்தியையும், ராஜ்யபரிபாலன முறையையும் மெச்சி, ராஜா மான்ஸிங் அவருக்குத் தகுந்த மரியாதைசெய்து, வீரநகரத்து இளவரசனுக்கு யுக்தவயதுவந்தவுடன் தேவிபுரத்தை அவருக்கு அளிப்பதாகத் தோடர்மால் காலத்தில் செய்த வாக்குத்தத்தத்தை ஸ்திரப்படுத்தினர்.

நரேந்த்ரனுடைய பாட்டனாரிடத்தில் நெடுங்காலம் உத்யோகஞ்செய்து இப்போது அதிக வ்ருத்தாப்யதசையிலிருப்பவர்களுள் இரண்டொருவர்மாத்ரமே நவகுமாருடைய ஆந்த்ரிக எண்ணத்தை அறிந்திருந்தார்கள். அவர்கள் நவகுமாரரிடத்தில் உள்ளும் புறமும் ஒத்திருக்கவில்லை என்பதை நன்குணர்ந்தனர். நவகுமாரர் வெளிக்குச் சிரித்தமுகமும், அன்பும் உடையவராகத் தோற்றியபோதிலும், அவர் மனமதில் ஏதோ வித்யாஸமான யோசனைகளும், ஆழ்ந்த கருத்துகளும் வைத்திருக்கிறாரென்று அவர்கள் ஸம்சயித்தார்கள். இரண்டு ஜமீன்களிலுமுள்ள ப்ரதான ப்ரபுக்களையும் உத்யோகஸ்தர்களையும் ரஹஸ்யமாய் அவர் தன் வசப்படுத்திக்கொண்ட விஷயம் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். வீரநகரத்து வேவுக்காரர்களும் ஒற்றர்களும் தங்கள் எஜமானர் இட்ட கட்டளைகளை ப்ரதி க்ராமங்களிலும், சந்தைகளிலும் அதிகசுறுசுறுப்பாக நடத்திவந்தார்கள். தேவிபுரத்தில் நூதனமாக சில கோட்டைகள் கட்டப்பட்டன, பழையகோட்டைகளும் மதிற்சுவர்களும் பழுதுபார்க்கப்பட்டன. போர்வீரர்களுடைய தொகையும் தினேதினே விருத்தியுடைந்துவந்தது. இந்த மாறுபாடுகள் ஏற்பட்டதின் காரணங்களை அவர்கள் நன்கு யூகித்தபோதிலும் அவைகளை வாய்விட்டுப்பேசத் துணியவில்லை. நரேந்த்ரன் பால்யபருவம் நீங்கும் ஸ்திதியிலிருந்தான். அவன் இப்போது நல்லஅழகும், அஞ்சாநெஞ்சமும், வீரதீரமும் பொருந்திய ஒரு வீரசிகாமணியாக விளங்கினான். அந்நரேந்த்ரனை எவ்[illegible] [illegible]ட்டமற்ற இடத்தில் ஸந்தி[illegible]ல் அப்[illegible] [illegible]வர்கள் தங்கள் மனதில் [illegible] அவன் செவிகளில் வற்புறுத்[illegible] [illegible].

“ராஜா தோடர்மால் அதிக தைர்யஸ்தர். அவருக்கு இணையானவர் சௌர்யத்தில் வேறெவருங்கிடையாது. ராஜா மான்ஸிங்கைப்போல் ஸாமர்த்யவான் இம்மொகலாய ராஜ்யத்தில் காண்பதரிது. ஆனால் அவர்களிருவரும் நவகுமாரர் மனதில் சூழ்கொண்டிருக்கும் மோசக்கருத்தை அறிந்திலர். உனது பாட்டனாருடைய ஜமீன் இப்போது அவர்கையில் நன்றாய்ச் சிக்கியிருக்கிறது. நவகுமாரர் பிடி உடும்புப்பிடிதான். அவர் ஸாமாந்யரல்ல. தன் எண்ணத்தை எவ்விதத்திலாவது நிறைவேற்றிவிடுவார். ராஜகுமாரா. நாங்கள் சொல்வதை அசட்டை செய்துவிடாதே, ஜாக்ரதை!” என்று அவ்வயோதிகர்கள் பலமுறையும் நரேந்த்ரனிடத்தில் கூறியதுண்டு.

ஜமீன்தாரரின் அரண்மனைகடைத்தெருவுகளுக்கு மத்தியில் அமைந்திருந்தது. அவ்விடம் ஜனநெருக்கம் அதிகம். அந்த விசாலமான அரண்மனையின் சில பாகங்கள் இருநூறு முன்னூறு வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டவைகளாதலால் கொஞ்சம் சிலமாயிருந்தன; இன்னும் சிலபாகங்கள் அதற்குப் பின்னர் கட்டப்பட்டவைகளாதலால் அவைகள் அவ்வளவு ஜீரணஸ்திதியிலில்லை. இவ்வாறு சிலபாகங்கள் [illegible]த்தியில் சிலமடைந்தவை, அவ்வப்போதைய ஜமீன்தாரர்கள் புதிய அறைகளும், கூடங்களும், கொலுமண்டபங்களும் கட்டிவந்தனர். பரம்பரையாய் வழங்கிவரும் ஸம்ப்ரதாயப்படியே நரேந்த்ரனது பாட்டனார்காலத்திலும் கட்டப்பட்ட கொலுமண்டபம் கடைத்தெருவை நோக்கி அதிக கம்பீரமாய் அமைந்திருந்தது. பழைய ஜமீன்தாரர் ராஜா தோடர்மாலை வரவேற்று உபசரித்ததும், இப்போது சில நாட்களுக்கு முன்னர்தான் நவகுமாரர் ராஜா மான்ஸிங்குக்கு விருந்தளித்ததும் இவ்வழகிய கொலுமண்டபத்தில்தான். அரண்மனையைச் சேர்ந்ததுபோல் ஒரு பெரியமுற்றம் ஒன்றிருந்தது. அம்முற்றம் நாலுபக்கத்திலும் சித்திரவேலை செய்யப்பட்டிருக்கும் ஸ்தம்பங்களால் சூழப்பெற்றிருந்தது. முற்காலத்திய அதிபதிகள் தனிமையாயும் ஏகாந்தமாயும்காலங்கழிக்க விரும்பாதவர்களாதலால், அம்முற்றத்தில் ஸதா ஸர்வகாலமும் ஜமீனின் நாலாபக்கத்து ஜனங்களும் கூடியிருந்தனர். அக்காலத்தில் ப்ரதி ஜமீன்தாரர் வீடும் ஒரு பெரிய கச்சேரிபோல்தானிருக்கும் ஏனெனில் ஜமீன்தார்கள் எப்போதும் தங்கள் குடிகளுடைய ஸுகதுக்கங்களை நேரில் விசாரித்துப் பரிஹாரம் செய்தும், அவர்களுடன் அடிக்கடி ஸம்பாஷித்து அவர்களுடைய அபிப்ராயங்களையும் நோக்கங்களையும் அறிந்தும் வருவதுவழக்கம். முற்றத்தைச் சுற்றியிருக்கும் விசாலமான அறைகளில்தான் ஜமீன்வ்யவஹாரங்கள் நடைபெற்று வந்தன. க்ராமாதிகாரிகள் தாங்கள் வசூல்செய்த பணத்தையும் தங்களுடைய கணக்குகளையும் ஒப்புவிக்க இவ்விடம் வருவார்கள். அதிக மழையினாலாவது அல்லது மழையில்லாததனாலாவது ஸாகுபடி த்ருப்தியாயிராத நிலங்களுடைய தீர்வையை தள்ளுவதற்கும், ஏரிகள் மராமத்துசெய்வதற்கும், புது ஏரிகள்கட்டுவதற்கும் கால்நடை விதைதான்யம் வாங்கவாவது, வீடு கட்டவாவது முன்பணம் கடன் கேட்பதற்கும் க்ராம மஹாஜனங்

கள் அடிக்கடி ஜமீன்தாரிடம் வந்து விண்ணப்பஞ் செய்துகொள்வது வழக்கம். இவ்விடத்தில்தான் ஜமீன் உத்யோகஸ்தர்களும், ந்யாயாதிபதிகளும் கேஸ்களை விசாரித்துக் குற்றவாளிகளைத் தண்டிப்பது வழக்கம். சில ஸமயங்களில் ஜமீன்தாரர் நேரிலேயே இவ்வ்யவஹாரங்களை நடத்துவதுமுண்டு. இவ்வாறு துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனஞ்செய்து நாட்டை ஸுபிக்ஷமாக அரசுபுரிந்துவரும் காருண்ய அதிபதியைக் கண்டுபோக வேண்டுமென்ற ஆசையினால் கிராமான ஜனங்கள் இந்த ஸபைக்கு ப்ரதிதினமும் வருவார்கள்.

முற்றத்தைச் சுற்றியிருக்கும் மாடி அறைகள் ராஜகுடும்பத்தினர்களுடைய இருப்பிடம். மேலேவிவரிக்கப்பட்ட கொலுவறைகள் முற்றத்தின் முன்புறத்திலிருந்தன. அதன் பின்புறம் ராஜஸ்த்ரீகளினுடைய அந்தப்புரம். ஆண்மனைக்குள் மிகவும் அழகிய அறையில் நரேந்த்ரன் இருந்தான். அந்த அறையைப் போல் அவ்வளவு அழகுவாய்ந்திராத வேறு இரண்டு அறைகளில் ஹேமலதையும் அவனுடைய தாயாரும் இருந்தனர். ஜமீன்தாருடைய பந்துக்கள் பலர் அந்த மாளிகையின் இதரபாகங்களில் தங்கள் குடும்ப ஸஹிதராய் வசித்துவந்தனர்.

அந்தப்புரத்துக்குப் பின்புறத்தில் இன்னொரு அந்தஸ்து கட்டடமிருந்தது. அவ்விடத்தில் ஸ்திரீகள்தான் நடமாடுவார்கள். அவ்விடத்தில்தான் அரிசி, பருப்பு முதலிய போஜன பதார்த்தங்கள் வைத்திருந்தன. ப்ரதிதினமும் பால், தயிர், மோர், கறிகாய் ஏராளமாய்வரும். ஸூர்யோதயம் முதல் அர்த்தராத்ரி வரைக்கும் அடுப்பு எரிந்தபடியே இருந்தது. வயது முதிர்ந்த சமையல்கார ஸ்த்ரீகளும் இதர வேலைக்காரர்களும், அதிகக் கஷ்டப்பட்டுத் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள், அந்தக் கட்டில் குழந்தைகள் குதூஹலமாய்க் குதித்து விளையாடிக்கொண்டிருந்தன. கூடத்தில் பூஜைமண்டபம் இருந்தது. ஸூர்யோதய ஸூர்யாஸ்தமன காலங்களில ப்ரதிதினமும் ஒரு வைதிகப்ராமணர் அவ்விடத்தில் தேவதாபூஜை செய்துபோவது வழக்கம்.

வீட்டுக்குச் சிறிது தூரத்துக்கப்பால் உத்யானவனம் இருந்தது. அவ்விடத்தில் ஒரு பெரிய ஏரி ஒன்றிருந்தது. அதன் கரையில் நல்ல இனிப்பான பழமரங்கள் வளர்ந்திருந்தன. அந்த ஏரியின் நாலுபக்கத்திலும் ஒரு பெரிய சுவர் எழுப்பப்பட்டிருந்தது. அச்சுவரில் பல வாயில்கள் அமைந்திருந்தன. அவ்வாயிலின் வழியாக ராஜஸ்த்ரீகளும் இன்னும் இதர உயர்குல மாதர்களும் நதிக்குப்போய் ஸ்நானஞ்செய்துவிட்டு, தேவாலயஞ்சென்று ஈசனை நமஸ்கரித்துத் தங்கள் நண்பர்களைக்கண்டு பேசி வருவார்கள். ஜமீன்தாரர் அகத்து ஸ்த்ரீகள் வழக்கமாகப் பின்கட்டு வாசற்படியாகத்தான் நதி தேவாலயம் முதலிய இடங்களுக்குப் புறப்பட்டுப் போவார்கள்.

பூர்வகாலத்து ஜமீன்தாரர்களுடைய மனைவிகளிடம் காணப்படும் குணாதிசயங்கள்யாவும் ஒருங்கே திரண்டு உருவெடுத்துவந்தவள் நவகுமாரரின் மனைவி. குலத்துக்கேற்ற கம்பீரமும், அந்தஸ்துக்கேற்ற பெருந்தன்மையும் அமைந்தவளாய் அம்மாது சிரோமணி வைதிக க்ரியைகளிலும் ஆசாரவ்யவஹாரங்களிலும், வ்ரதாதி அநுஷ்டானங்களிலும் கிஞ்சித்தேனும் பிறழாமல் அந்தப் பெரிய குடும்பத்தின் அதிபதியாகத் தான் செய்யவேண்டிய கார்யங்கள் எல்லாவற்றையும் சற்றும் சலிக்காமல் செய்துவந்தாள். ஸூர்யோதயத்திற்கு முன்னமே புண்யதீர்த்தமாகிய கங்காநதியில் ஸ்நானஞ் செய்துவிட்டு அரண்மனை நந்தவனத்தில் நரேந்த்ரனது பாட்டனார் கட்டிய திருக்கோயிலிற்குச் சென்று ஸ்வாமி தர்சனஞ் செய்துகொண்டு வீட்டுக்குத் திரும்பிவந்து செய்யச் செய்யத் தொலையாமல் வளர்ந்துகொண்டே வரும் வீட்டு வேலையில் தலையிட்டுக்கொண்டு பாதிராத்ரி வரையில் ஓயாமல் உழைப்பாள். ஸ்த்ரீகள், குழந்தைகள் உள்பட வீட்டிலுள்ளோர் யாவரும் போஜனஞ் செய்தபின் அவள் ஸரியாய் உச்சிவேளைக்குக் கொஞ்சம் போஜனம் உட்கொண்டு சற்று கண் அயர்வாள். மறுபடியும் ஸாயந்த்ரம் வீட்டுவேலைகளை மேல் பார்த்துவிட்டு மத்யானம் போலவே ஸகலரும் சாப்பிட்டானபிறகு தானும் ஒரு வாய் அள்ளிக்கொண்டு அவள் நித்ரை செய்வதற்குள் ஏறக்குறைய நிசியாய் விடும். இவ்வளவு அந்தஸ்தும் பதவியுமிருந்தும் அவள் சற்றேனும் டம்பமில்லாமலிருந்தாள். அரண்மனையில் வசிக்கும் ஜமீன்தாரருடைய பந்துமித்ரர்கள் யாவரும் அவளது மொழிகளை வேதவாக்காகக்கருதி அவள்மனது சற்றுங் கோணாமல் நடந்து கொள்வார்கள். சில ஸந்தர்ப்பங்களில் நவகுமாரர் கூட ராஜாங்கவிஷயங்களைப்பற்றி அவளுடைய சாதுர்ய புத்திமதியைக் கேட்டு அதன்படி நடப்பார். தனக்கு ஈடு எவருங்கிடையாதெனக் கருதி இரண்டு ஜமீன்களையும் விமர்சையாய்ப் பரிபாலித்துவரும் நிபுணராகிய நவகுமாரர் அவளுடைய மனோபீஷ்டத்துக்கு மாறாகச் செய்ய அஞ்சுவாரென ராஜஸ்த்ரீகள் தங்களுக்குள் அடிக்கடி ரஹஸ்யமாய்ப் பேசிக்கொள்வதுண்டு.

தானும் வீரகாத்து ராஜவம்சத்தில் உதித்த காரணத்தினாலேயோ; அல்லது உயர்குலத்தில் அவதரித்து மன்மதனைப் பழிக்கத்தக்க உருவத்தையுடைய அவ்வாலக்குழந்தையின் பரிதபிக்கத்தக்க நிலைமையைக்கண்டு மனம் இளகியோ நவகுமாரருடைய மனைவி நரேந்த்ரனைத் தன் ஸொந்த புத்ரனாகப்பார்த்துச் செல்வமாய் வளர்த்துவந்தாள்: அவள் தன்வயிற்றிற் பிறந்த ஹேமலதையையும் அவ்விளங்குமரனையும் ஒரு சீராக வளர்த்துவந்தாள். அவர்கள் இருவரும் தோட்டத்திலாவது, ஏரிக்கரையிலாவது கூடி விளையாடுவதைக் காணும்போதெல்லாம் மனம்பூரிப்பாள். ஒரு தாய்வயிற்றுக் குழந்தைகளைப்போல் அவர்களை அன்பாக ஆதரித்துவந்த அவளுக்கு அவர்கள் ப்ரக்ருதத்தில் இருப்பதற்கேற்ப வருங்காலத்திலும் இருக்க வேண்டுமென்ற விருப்பம் ஸஹஜமாய் உண்டாயிருக்கும்,

ஹேமலதைக்குப் பன்னிரண்டு ப்ராயமாயிற்று. விவாஹகாலம் நெருங்கிவிட்டது. நரேந்த்ரனுடைய வயது பதினாறு. ஒருநாள் காலை ஸ்நானஞ் செய்துவிட்டு ஆலயத்துக்கு வரும்வழியில் அரண்மனை நந்தவனத்தில் குழந்தைகளிருவரும் செடிகளுக்குஜலம் பாய்ச்சுவதை அவள்கண்டாள். நரேந்த்ரன் தடாகத்திலிருந்து நீர் கொண்டுவர, ஹேமலதை அதைவாங்கித் தான் நட்ட மல்லிகைச்செடிகளுக்குக் கொட்டிக்கொண்டிருந்தாள். ஹேமலதையின் தாயார் சற்று நிதானித்துக் குழந்தைகளிருவரும் ஒருவரை யொருவர் நேசித்துக் குதூஹலமாயிருப்பதைக்கண்டு அந்த க்ஷணமே அவள் தன்மனதில் தீர்மானித்துக்கொண்டாள். ஆலயத்துக்குட்சென்று தன் மநோபீஷ்டத்தைப்பூர்த்திசெய்து வைக்கவேண்டுமென அம்பிகையை வேண்டிக்கொண்டாள்.

அன்றையதினம்பகல் நவகுமாரர் போஜனஞ்செய்து 'உண்ட அலுப்பு தொண்டருக்கும் உண்டு' என்ற வசனத்தின்படி இளைப்பாறிக்கொண் டிருக்கும்போது அவருடையமனைவி அவர்படுக்கையண்டை வந்து தன் கணவனைத் தன் கரியவிழிகளால் அன்பாய் நோக்கி, 'தங்களுடைய முகம் அதிக கவலையாலும் வேலையாலும் வரவர வெளுத்துக்கொண்டு வருகிறது. உமது கண்களும் நாளுக்குநாள் காந்திகுன்றி உள்ளுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. நீங்கள் அதிக சிரமம் வைத்துக்கொள்கிறீர்கள். உமது தேகம் மிகவும் இளைத்துப்போயிற்று'' என்று பணிவாய்க்கூறினாள்.

"புருஷர்களுக்கு எத்தனையோ வேலைகளும், எவ்வளவோ மனக்கவலையும் இருக்கின்றன அதுவும் ஒரு நாட்டுக்கு அதிபதியென்றால் அவனுக்கிருக்கும் கவலைக்குக்கேட்பானேன். ஸ்திரீஜாதியாகிய உனக்கு அவைகளெல்லாம் எவ்வாறு தெரியும்?"

"ஆம், நீர் சொல்வது உண்மைதான். ஒரு ஸ்திரீ தன்புருஷனுடையமனக்கவலையைத் தானும் பாகித்துக்கொண்டு அவைகளைக்கூடியமட்டும் நீக்குவதற்காகத் தன்ப்ராணநாதருடைய மனக்கவலைகளை அறியவிரும்பாளோ? சென்ற சில வாரங்களாக ஏதோ புதிய கஷ்டம் ஒன்று தங்கள் மனதை வருத்துகிறதென்று நினைக்கிறேன். இதற்குமுன் இரண்டொருதடவை தாங்கள் தங்கள் கஷ்டத்தை என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள். இம்முறைநான் தங்களுடையகஷ்டத்தைப் பாகித்துக்கொள்ள யோக்யதையற்றேனோ?"

"ப்ரதிவருஷமும் புதியபுதியகவலைகள் எனக்கு ஏற்படுகின்றன. எப்போதும் உனது யோசனையைக் கேட்க மறக்கமாட்டேன். நரேந்த்ரனுக்கோ யுக்த வயதுவந்துவிட்டது. வீரநகரத்தை இன்னும் கொஞ்ச காலத்துக்குள் அவனுக்கு ஒப்புவிக்கவேண்டும்."

"திக்கற்ற, [illegible] இருந்தகுழந்தையை வளர்த்து, அவனுடைய ராஜ்யத்தையும் சிரத்தையாய்ப்பரிபாலித்து யுக்தவயது வந்தவுடன் அவனுடைய பித்ரார்ஜ்ஜித [illegible] அவனிடம் சேர்ப்பதைக்கண்டு ராஜமஹலை இப்போது அரசாட்சிபுரியும் சக்ரவர்த்தியவர்கள் [illegible] ஜனங்களும் உம்மை மெச்சுவார்கள். நாடெங்கும் உமது பெருமையும் ப்ரதாபமும் ஸூர்யனைப்போல் ப்ரகாசிக்கும்."

"ஆஹா! என்ன பெருமை, என்னப்ரதாபம்! ஐஸ்வர்ய ஸமானமாகவோ அல்லது ஒருபடி உயர்ந்தோ—ஒருபோதும் தாழாமல்—மட்டுமே விஜய வீரர்களாகிய எனது முன்னோர்கள் அடியெடுத்துவைத்த நாட்டில் நான் கார்யதர்சியாக வேலைபார்த்து வருவது ஒரு பெருமையன்றோ! நன்றாய்ச் சொன்னாய்! தேவிபுரத்து மகிஷியாக ஒருகாலத்தில் நீ இருந்ததைக்கூட மறந்து விட்டனையோ? தேவிபுரத்து ராணியைப்போல் நீ பேசவில்லையே?"

"நாதா, நான் ஒன்றையும் மறக்கவில்லை. நமது தேவிபுர வம்சத்தாரின் நோக்கங்கள் அந்தஸ்து, மரியாதை எல்லாம் என் ஞாபகத்திலிருக்கிறது. அந்த ஒன்றான பகவானது திருவருளால் நாம் நமது ராஜ்யம் பதவி, அந்தஸ்து யாவற்றையும் திரும்பிப் பெறுவோம் என்பதற்கு ஸந்தேஹமில்லை."

"கடவுள் க்ருபையிருந்தால் அடைவதற்கு ஸந்தேஹமா? நவகுமாரன் மாத்ரம் தன் பழைய ஸாமர்த்யத்தை இழக்காதிருக்கவேண்டும், தேவிபுரம்முன்னிலும் பதின்மடங்கு அதிக பெருமையுடன் விளங்காதா?"

"அப்படியே ஆகுக, நம்மை இதுவரைக்கும் எவ்வளவோ கஷ்டங்களினின்றும் விடுவித்த பகவான், நமக்கு வருங்காலத்தில் முன்னிலும் அதிகமான கீர்த்திக்கு வழிசெய்துகொண்டிருக்கிறார்."

"மனதிலுள்ளதை ஒளிக்காதே. உள்ளதை விட்டுப்பேசு, நீ பேசுவதைப்பார்த்தால் ஏதோ உன்மனதில் சில எண்ணங்கள் குடிகொண்டிருக் கிறதுபோல் தோன்றுகிறது; இதுவரைக்கும் உன் யோசனை வீண் போனதில்லை. பலமுறையும் நான் உன் யோசனையைக் கேட்டு பயனடைந்திருக்கிறேன்."

"நாதா, நமது குழந்தை ஹேமலதைக்கு என்ன வயது?"

"என்னத்திற்கு? இப்போது அவளுக்கு வயது பன்னிரண்டு. நாம் தேவிபுரத்திலிருந்து வரும்போது அவள் இரண்டுவயது குழந்தை. நாம் வந்து பத்து வருஷம் ஆகவில்லையா"

"அவளுடைய விவாஹ விஷயத்தைப்பற்றி யோசிக்கக் காலமாயிற்றல்லவா?"

"ஆம், அதைப்பற்றி நான் இதுவரைக்கும் யோசிக்கவில்லை. நமது ராஜ்யம் நம்வசமிருந்தால் நாட்டிலுள்ள சீமான்களெல்லாம் அவளை எனக்கு உனக்கென்று கேட்பார்கள். நாம் வீரநகரத்தில் உத்யோகத்திலிருக்குமட்டும் நம்மை யார் மதிப்பார்கள்?"

"அப்படிச் சொல்வானேன்? தேவிபுரத்து இளவரசியைத் தகுந்த சீமான்கள் பலர் விரும்புகின்றனர். தூரதேசங்களிலிருந்துகூட பல ராஜகுமாரர்கள் அவளை நாடி வருகின்றனர். ஈசுவரனது அருளால் நமக்கு இருக்கும் இந்த ஒரு குழந்தையையும் விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியாது. ஹேமலதையை அனுப்பிவிட்டு என்னால் ஒரு நிமிஷமும் உயிர்த்திருக்க முடியாது."

"ஹேமலதை உனக்கு எப்படியோ அப்படியே தான் எனக்கும் உனக்கு எவ்வளவு அருமையோ அதைவிட ஜாஸ்தி எனக்கு. எனக்குப் பின்னர் என் ராஜ்யத்துக்கு அவள்தான் அதிபதி. அவளை மணம் புரிந்து நமக்குபின் நமது நாட்டை அரசுபுரிய எவன் தான் மறுப்பான்? கரும்புதின்ன கூலிவேண்டுமோ?"

"நரேந்த்ரனை ஸமீபத்தில் எப்போதாவது பார்த்தீர்களா?"

"ஏன்? ப்ரதிதினமும் பார்க்கிறேன். அதைப்பற்றி என்ன கேள்வி இப்போது"

"அவன் எவ்வளவு ஸௌந்தர்யமாயிருக்கின்றான்? அவ்வளவு ப்ரகாசமான முகமும், பெருந்தன்மையான நடத்தையும் வேறெவரிடத்திலும் நான் இதுவரைக்கும் கண்டதில்லை."

"நல்ல ரூபவான்தான், தன்னைவிட அழகிலும், ஸாமர்த்தியத்திலும் சிறந்தவர் ஒருவரும் கிடையாது என்ற எண்ணம் பூர்த்தியாயிருக்கிறது. அவன் சொல்வார் வார்த்தைகளையெல்லாம் கேட்டுக் கெட்டுப்போயிருக்கின்றான், கர்வம் தலைக்குமேல் ஏறியிருக்கிறது. சில பழங் கதைகள் அவன் செவியில் கண்டதெல்லாம் போதனை செய்திருக்கின்றன. அதைக் கேட்டு அவன் சிறிது மனோராஜ்யத்திலிருக்கிறான்."

"நாதா, அவன் பிறந்த வம்சத்தையும், அவனுடைய அந்தஸ்தையும் நாம் யோசிக்க வேண்டாமா? அவனுக்கு அவ்வித எண்ணங்கள் உதிக்க ஹேதுவில்லையா? அவனுடைய பாட்டனார் வீற்றிருந்த ஸ்தானத்தில் அவன் வீற்றிருக்கக் காலம்வரும்போது அப்பெருமையும், காம்பீர்யமும் அவனுக்கு ஏற்றிருக்காதோ?"

"ஆஹா, பாட்டனார் அந்தஸ்துக்கு இவன் வரமாட்டானோ? அவர் என்ன, இவன் என்ன? எனக்குச் சில ஸமயங்களில் தீங்கிழைத்துள்ள போதிலும் அவரைப்போல் ஆண் மகன் இனி எவனாவது அகப்படுவானோ, சொல்வார் வார்த்தையைக் கேட்டுத் தறிதலையாய்ப்போன இந்தச் சிறுவனோ அவன் பாட்டனார் ஸ்திதிக்கு வருவது?"

"நாதா, நான் சொல்வது தங்கள் மனதுக்குப் பிடிக்காவிட்டாலும், என் வார்த்தையைச் சற்று செவி கொடுத்துக் கேளுங்கள். இவ்விஷயங்களில் ஸ்திரீகளுக்குத் தெரிந்தவளவு புருஷர்களுக்குத் தெரிவதில்லை. வீரநகரத்தில் இதுவரைக்கும் அரசுபுரிந்து வந்த தலைவர்கள் எவருக்கும் நரேந்தரன் குறைந்து போகமாட்டான்."

நவகுமாரர் அலக்ஷ்யமாய்ச் சிரித்துக்கொண்டே, "உன்னைப்போல் எனக்கு அவ்வளவு கண்கள் சுத்தமாயில்லை, அவனிடத்தில் நீ சொல்லும் உயர் குணங்கள் இருப்பதாக எனக்குப்புலப்படவில்லை" என்றார்.

"திரும்பவும் நான் சொல்லுகிறேன் கேளுங்கள். மனிதரது முகத்தையும் அவர்களுடைய முகதேஜஸையும் பார்த்து அவர்களுடைய பெருமை சிறுமைகளை யூகித்தறிவதில் புருஷர்களைவிட ஸ்திரீகள்தான் சதுரர்கள். சென்ற சில வருஷங்களாக நான் அவனை ப்ரதிதினமும் கவனமாய்ப் பார்த்துக்கொண்டு வருகிறேன். புருஷர்களுடைய அந்தரங்கயோசனைகளும் நோக்கங்களும் ஸ்திரீகளுக்குக் கரதலாமலகம்போல் புலப்படுகின்றன."

"ஒரு அசட்டுக்கர்வமும் மூடத்தனமும்தான் அவன் முகத்தில் குடிகொண்டிருக்கிறது. வேறொன்றும் எனக்குத்தெரியவில்லை."

ராமநாதன்.

(இன்னும் வரும்.)

---

## விசேஷக் குறிப்புகள்

### NEWS AND NOTES

**விவசாயபத்திரிகை பிரசுரமாகும் தேசங்கள்.** அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலும், ஜப்பான் தேசத்திலும், விவசாயப்பத்திரிகை ஏராளமாய்ப்பிரசுரிக்கிறார்கள். அந்த தேச கிராமங்களில் படமுள்ள விவசாயபத்திரிகைகள், துண்டுபத்திரிகைகள், ஏதேஷ்டமாய்க் காணலாம். பத்திரிகைகள் இனாமாகக்கொடுப்பதை கவர்ன்மெண்டார் பொருட்டாய் பாவிப்பதில்லை; ஜனங்கள் பத்திரிகைகளை, சரியாய் கவனிக்கிறார்களாவென்று விசாரிக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில், விவசாய போதனை குறைவில்லாமல் நடக்கிறது. அமெரிக்கா ஐக்கியமாகாணங்களில், ஸ்பெஷல் ரெயிலில், விவசாய உத்தியோகஸ்தர்கள், படங்கள் மாஜிக் லாண்டர்ன், (Magic Lanteru) தொட்டிகளில் பயிரமுதலியனசகிதம் சர்கியூட்போய், ஒவ்வோர் ஸ்டேஷனிலும், சிலமணிநேரம்நிருத்தி ஜனங்களுக்கு பிரசங்கஞ் செய்வதும், மாஜிக் லாண்டர்ன் மூலமாய் பயிர்களின் பிரத்தியக்ஷ தெரிசனங் காட்டப்படுகின்றது. கேடால் விவசாய டிபார்ட்மெண்டார் பிரசுரிக்கிற மாதாந்தர விவசாய பத்திரிகையில், விலை வாசியைப்பற்றிய அனுபந்தம் சேர்க்கப்படுகிறது. அதில் உள்நாட்டுவிலையும் அயல்நாட்டுவிலையும் குறிக்கப்பட்டிருக்கிறது. பின்னும் அயல்தேச வியாபாரிகளை விசாரித்து சரக்குகளை விற்பதற்கேற்ற விலையும் தெரிவிக்கப்படுகிறது. அந்த விவசாய இலாகாவின் காருண்யமும், இவ்வளவு மேம்பாடும், புகழ்ச்சியும் அளவிடமுடியுமா? இந்தியாவில் நாகப்பூரிலும், மத்யமாகாணத்திலும், விவசாய இலாகா, தேசபாஷையில் மாதாந்தர பத்திரிகை வெளியிடுகிறது. அதில் நாகப்பூர் டிபார்ட்மெண்டார், பாரத்தில் பரீட்சிக்கும் முறைகளை யறிவித்தல் தகுந்த பலனை யளிக்கிறது.

***

**அமெரிக்காவில் பத்திரிக்கைகளின் அபிவிருத்தி.**—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் 2,472 தினப்பத்திரிகைகளும் 16,269 வாரப் பத்திரிகைகளும் அநேக மாதப் பத்திரிகைகளும் ஆகமொத்தம் 22,806 பத்திரிகைகள் நடைபெறுகின்றன. இவை யனைத்திற்கும் மொத்தமாக 59,000000, அதாவது அமெரிக்காவின் ஜனத்தொகையின்படி ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒரு தினப் பத்திரிகை, ஒரு வாரப் பத்திரிகை, ஒருமாதப்பத்திரிகை மூன்றும் வாங்குகின்றனர்.



காலஞ்சென்ற ஸ்ரீ கோபாலக்ருஷ்ண கோகலே